தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:108 | 03-11-2025 | திங்கள்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

## இன்றைய பஞ்சாங்கம்

03.11.2025 ஐப்பசி 17
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.04

**திதி:**
இன்று அதிகாலை 1.43 வரை துவாதசி பின்பு இரவு 11.49 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.

**நட்சத்திரம்:**
இன்று பிற்பகல் 1.02 வரை உத்திரட்டாதி பின்பு ரேவதி.

**யோகம் :**
இன்று மாலை 6.34 வரை ஹர்ஷனம் பின்பு வஜ்ரம்.

**கரணம் :**
இன்று அதிகாலை 1.43 வரை பாலவம் பின்பு பிற்பகல் 12.46 வரை கௌலவம் பின்பு இரவு 11.49 வரை தைதுலம் பின்பு கரசை

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.03 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

**சந்திராஷ்டமம்**
இன்று பிற்பகல் 1.02 வரை மகம் பின்பு பூரம்.

**நல்ல நேரம்**
காலை 6.15 – 7.15.
மாலை 4.45 – 5.45.

**இராகு காலம்**
காலை 7.30 – 9.00.

**எமகண்டம்**
காலை 10.30 – 12.00.

**குளிகை**
பிற்பகல் 1.30 – 3.00

இன்று பிரதோஷம் நாள்.
சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள் வெற்றிகரமாக நிலைநிறுத்தம்

**சென்னை, நவ.3:**
எல்விஎம்-3 ராக்கெட் மூலம் கடற்படை பயன்பாட்டுக்கான சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது.

இதன்மூலம் தனது வரலாற்றில், புவிவட்ட சுற்றுப்பாதைக்கு அதிகபட்ச எடை கொண்ட செயற்கைக்கோளை செலுத்தி இஸ்ரோ சாதனை படைத்துள்ளது.

நம்நாட்டுக்கு முக்கிய தேவையான தொலைத்தொடர்பு, தொலையுணர்வு, வழிகாட்டுதல் செயற்கைக்கோள்களை பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி, எல்விஎம்-3 ராக்கெட்டுகள் வாயிலாக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது.

இதில் ராக்கெட் வாயிலாக புவிவட்ட சுற்றுப் பாதைக்கு 4,000 கிலோ வரையும், குறைந்த தாழ் வட்ட சுற்றுப்பாதைக்கு 8,000 கிலோ வரையும் எடை கொண்டசெயற்கைக்கோள்களை மட்டுமே விண்ணில் செலுத்த முடியும். இதனால் அதிக எடை கொண்டசெயற்கைக்கோள்களை பிற நாடுகளின் உதவி கொண்டு விண்ணில் செலுத்த வேண்டிய நிலை இருந்தது. அதனால் நமக்கு



செலவீனம் அதிகரிப்பதுடன், கால விரயமும் ஏற்பட்டது.

இதையடுத்து அனைத்து ராக்கெட்களின் உந்துவிசைகளை அதிகரிக்கும் பணிகளை இஸ்ரோ முன்னெடுத்தது. அதன்பலனாக இஸ்ரோவின் பாகுபலி என்றழைக்கப்படும் எல்விஎம்-3 ராக்கெட்டின் எஸ் 200 மோட்டார்கள், விகாஸ் இயந்திரம், கிரையோஜெனிக் இயந்திரம் ஆகியவற்றின் திறன்கள் மேம்படுத்தப்பட்டு அதன் உந்துவிசை வழக்கத்தைவிட 14 விநாடிகள் வரை அதிகரிக்கப்பட்டது. இதையடுத்து எல்விஎம்-3 ராக்கெட் மூலமாக 4,410 கிலோ எடை கொண்ட சிஎம்எஸ்-03செயற்கைக்கோளை விண்ணில் புவிவட்டப் பாதைக்கு செலுத்த இஸ்ரோ முடிவு செய்தது.

இந்த ராக்கெட் ஏவுதலுக்கான 24 மணி நேர கவுன்ட்டவுன் நேற்று தொடங்கியது. தொடர்ந்து ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் மையத்தின் 2-வது ஏவுதளத்தில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் இன்று மாலை 5.26 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது. ராக்கெட் தரையில் இருந்து புறப்பட்ட 16 நிமிடத்தில் செயற்கைக்கோளை 169 கி.மீ உயரத்தில் திட்டமிட்ட புவிவட்ட பரிமாற்ற சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியது. இதன் சுற்றுப்பாதை படிபடியாக மாற்றப்பட்டு குறைந்தபட்சம் 170 கி.மீ. தூரமும், அதிகபட்சம் 29,970 கி.மீ. தொலைவும் கொண்ட புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இதற்கிடையே கடற்படை பயன்பாட்டுக்காக 2013-ல் செலுத்தப்பட்ட ஜிசாட்-7 (ருக்மணி) செயற்கைக்கோளின் ஆயுட்காலம் முடிந்துவிட்டது. அதற்குமாற்றாக சுமார் ரூ.1,600 கோடியில் வடிவமைக்கப்பட்ட சிஎம்எஸ்-03 (ஜிசாட்-7ஆர்) செயற்கைக்கோள் தற்போது ஏவப்பட்டுள்ளது.

இதன் ஆயுட்காலம் 15 ஆண்டுகள். இதில் விரிவுபடுத்தப்பட்ட யுஎச்எப், சி, க்யூ, எஸ் போன்ற மல்டி பேண்ட் அலைக்கற்றைகள் உட்பட அதிநவீன தொழில்நுட்பங்கள் இடம் பெற்றுள்ளன.

## கடல்வழி ஊடுருவலை துல்லியமாக கண்காணிக்க முடியும்

இது முழுவதும் இந்திய கடற்படை மற்றும் ராணுவத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படும்.

கடல்வழி ஊடுருவலை துல்லியமாக கண்காணிக்க முடியும்: இந்திய நிலப்பரப்பு மற்றும் சுமார் 20 கி.மீட்ட பரப்பளவு கொண்ட கடலோரப் பகுதிகளை கண்காணிக்க உதவும். அனைத்துவிதமான போர் விமானங்கள், போர்க் கப்பல்கள், நீரமுழ்கி கப்பல்கள் மற்றும் தரை கட்டுப்பாடு மையங்கள் இடையேயான ஒருங்கிணைந்த தகவல் தொடர்பு சேவையை மேம்படுத்தி மிகவும் பாதுகாப்பானதாக வழங்கும். போர்க்காலங்களில் இந்த செயற்கைக்கோளில் இருந்து கடற்படையினர் நேரிடியாகவே தகவல்களை பெறலாம். இதனால் காலவிரயம் தவிர்க்கப்படும். எதிரி நாடுகளின் கடல்வழி ஊடுருவலை துல்லியமாக கண்காணிக்க முடியும்.

இதுதவிர கடற்படை பயனுக்காக மேலும் 1 செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றி மூலம் இஸ்ரோவின் ராக்கெட் ஏவுதல் திறன்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது. இவை அடுத்த செயல்படுத்தப்பட உள்ள மனிதர்களை விண்ணுக்கும் அனுப்பும் ககன்யான், சந்திரயான்-4 திட்டங்களுக்கும் உந்துதலாக இருக்கும். மேலும், உள்நாட்டிலேயே அனைத்து தொழில்நுட்ப வசதிகளையும் பெற்று விண்வெளித் துறையில் தற்சார்பு நிலையை நம்நாடு விரைவில் எட்டுவோம் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## ராஜஸ்தானில் லாரி மீது வேன் மோதி விபத்து: 18 பேர் உயிரிழப்பு

**ஜோத்பூர், நவ.3:**
ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் மாவட்டம் ஹலொடி பகுதியை சேர்ந்த 20 பேர் வேனில் பிகனீர் மாவட்டம் கோலயத் நகரில் உள்ள இந்து மத வழிபாட்டு தலத்திற்கு சென்றுள்ளனர்.

வழிபாட்டை முடித்துவிட்டு நேற்று மாலை அனைவரும் வேனில் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர்.

அப்போது பலோடா மாவட்டத்தில் உள்ள மடோடாவில் சாலையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த லாரி மீது வேன் மோதியது. இந்த கோர விபத்தில் வேனில் பயணித்த 18 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். விபத்து குறித்த அறிந்து, போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, நொறுங்கிய வேனில் சிக்கிய காயமடைந்தவர்களை கிராம மக்களின் உதவியுடன் மீட்டனர். ஆரம்பகட்ட சிகிச்சைக்குப் பிறகு, அவர்கள் ஜோத்பூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

### வாக்காளர்கள் பட்டியல் சிறப்பு சீர்திருத்த விவகாரம்

# உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடிவு

**சென்னை, நவ.3:**
தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், தேமுதிக, விசிக, சிபிஎம், சிபிஐ, திராவிடர் கழகம், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்றுள்ளன. பாமக, நாதக, தவெக, அமமுக, புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகள் இந்தக் கூட்டத்தை புறக்கணித்தன.

இந்தக் கூட்டத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின், “ஜனநாயகத்தின் உடலும், உயிரும் வாக்குரிமைதான். இப்போது வாக்காளர்களின் வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் வந்திருக்கிறது. அத்தகைய அச்சுறுத்தலை தடுக்க வேண்டியது ஜனநாயக சக்திகளான நம்முடைய கடமை. அதனால்தான் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவாதிக்க இங்கே கூடியுள்ளோம்.

நாம் எந்த சீர்திருத்தத்துக்கும் எதிரி அல்ல. ஆனால், மக்களின் வாக்குரிமையை பறிக்கும்,



அவர்களை அச்சுறுத்தும் வகையில் பிஹாரில் செயல்படுத்தப்பட்ட எஸ்ஐஆர், இப்போது தமிழ்நாட்டில் நடக்கப்போகிறது. இதற்கு எதிரான உணர்வை வெளிப்படுத்த வேண்டியது முக்கிய தேவை. நேர்மையான தேர்தலை நடத்த உண்மையான வாக்காளர் பட்டியல் அவசியம் என்பதை மறுக்கவில்லை. ஆனால், அதற்கு உரிய கால அவகாசத்தை கொடுக்க வேண்டும். பதற்றமில்லாத சூழலில்தான் அதனை செய்ய வேண்டும்.

தேர்தலுக்கு சில மாதங்களே இருக்கும் சூழலில், முழுமையான திருத்தப் பணிகளை செய்ய துடிப்பது, உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம் மட்டுமே. அதனையே பிஹாரில் செய்தனர். இப்போது மற்ற மாநிலங்களிலும் செய்ய நினைக்கிறார்கள். தமிழக மக்களின் உரிமையை காக்க, ஜனநாயகத்தை காக்க வரைவு தீர்மானத்தை முன்வைத்துள்ளோம்” என்றார். இதனை தொடர்ந்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

தீர்மானம்: தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்தை தேர்தல் ஆணையம் நிறுத்தி வைக்காவிட்டால் உச்ச நீதிமன்றத்தில் அனைத்துக் கட்சிகள் சார்பில் வழக்கு தொடர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிஹாரில் நடைபெற்ற குளறுபடிகளை சரி செய்யாமல் தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் எஸ்ஐஆர். நடத்துவது வாக்குரிமையை பறிக்கும் செயல் என அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல்வர் சமூக வலைதள பதிவு: இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் எஸ்ஐஆருக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!

வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள் - ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை தேர்தல் ஆணையம் ஏற்காததால், உச்ச நீதிமன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றுத் தங்களுடைய உணர்வைப் பதிவு செய்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் பங்கேற்காதவர்களும் தங்களுடைய கட்சிகளில் எஸ்ஐஆர் குறித்து விவாதித்து, ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice | ➤ Loss of Share
➤ Legal Notice | ➤ Merger
➤ Tender Notice | ➤ Acquisition
➤ Society Notice | ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

# மகளிர் உலகக்கோப்பை: இந்தியா முதல் முறை சாம்பியன்

**நவிமும்பை, நவ. 3:**
மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் பைனலில் ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி, லாரா வால்வார்ட் கேப்டனாக உள்ள வலிமையான தென் ஆப்ரிக்கா அணியை எதிர்த்து விளையாடியது. நவி மும்பையில் நடைபெற்ற இந்தப் போட்டி மழையின் காரணமாக தாமதமாக தொடங்கப்பட்டது.

இதில், டாஸை வென்ற தென் ஆப்ரிக்கா அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, இந்திய அணி முதலில் களமிறங்கியது. இந்திய அணிக்கு தொடக்க வீராங்கனைகளாக ஸ்மிரிதி மந்தனாவும், ஷபாலி வர்மாவும் இறங்கினர். ஆரம்பத்தில் மந்தனா கொஞ்சம் தடுமாறினாலும், பிறகு வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தொடங்கினர். மறுமுனையில் இளம் வீராங்கனை ஷபாலி வர்மா அதிரடியாக ஆடினார். அணியின் ஸ்கோர் 104 ரன்னை எட்டிய போது, ஸ்மிரிதி மந்தனா 45 ரன்னில் அவுட்டாகி ஏமாற்றம் அளித்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஷபாலி வர்மா சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 87 ரன்னில் அவுட்டானார். தொடர்ந்து, ஜெமிமா ரோட்ரிக்ஸ் (24), ஹர்மன்ப்ரீத் கவுர் (20), அமன்ஜோத் கவுர் (12) ஆகியோர் சீரான இடைவெளியில் விக்கெட்டை இழந்தனர். மற்றொருபுறம் கடைசி வரை விளையாடிய தீப்தி சர்மா 58 ரன் எடுத்தார். இறுதியில் இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 298 ரன் குவித்தது.



தென் ஆப்ரிக்கா தரப்பில் காகா 3 விக்கெட்டுகளும், மலபா, டி கிளெர்க், டிரையன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 298 ரன்னை இலக்காகக் கொண்டு விளையாடிய தென் ஆப்ரிக்கா அணி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ப்ரிட்ஸ் 23 ரன்னிலும், போஸ்ச் ரன் எதுவுமின்றியும், ஆட்டமிழந்தனர். மறுமுனையில் அதிரடியாக ஆடி வரும் கேப்டன் வால்வார்ட் அரைசதம் அடித்தார். பேட்டிங்கில் கலக்கிய ஷபாலி வர்மா பந்து வீச்சிலும் கலக்கினார். லுஸை 25 ரன்னிலும், காப்பை 4 ரன்னிலும் அவுட்டாக்கினார்.

தென் ஆப்ரிக்கா அணி 45.3 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 246 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. தீப்தி ஷர்மா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஷபாலி வர்மா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதுவரை ஐ.சி.சி., தொடரில் மூன்றாவது முறை பைனலுக்கு முன்னேறிய இந்திய பெண்கள் அணி, இன்று முதல் கோப்பை வென்று சாதித்தது.

SEND AN EMAIL
WITH Hi
TO
tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY
NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-428

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்



அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும், அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



டீன் ஏஜைத்
தாண்டும்போதும்
டிரையினேஜைத்
தாண்டும்போதும்
உஷாரா இருக்கணும்
இல்லைன்னா
வாழ்க்கை நாறிடும்

**வெ. நாராயணன்**
லால்குடி

## சென்னை ரன்ஸ் 2025-ன் பல்வேறு பிரிவு ஓட்டங்களை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார்



மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் 1 சார்பில் சென்னை நேப்பியர் பாலத்தில் இருந்து தொடங்கிய சென்னை ரன்ஸ் 2025-ன் பல்வேறு பிரிவு ஓட்டங்களை துணை முதல்வர் உதயநிதி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## பூமிநாதர் திருக்கோவில் கும்பாபிஷேகம்



திருச்சி மண்ணச்சநல்லூரில் உள்ள பூமிநாதர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பங்கேற்றார்.

## அதிக மதிப்பெண் எடுத்த வருவாய் துறை குடும்பத்தினரின் குழந்தைகளுக்கு ஊக்கத்தொகை



நாகர்கோவிலில் கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் சார்பில் நடந்த முப்பெரும் விழாவில், பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்த வருவாய் துறை குடும்பத்தினரின் குழந்தைகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ்களை கலெக்டர் அழகுமீனா, எஸ்.பி. ஸ்டாலின் ஆகியோர் வழங்கினர்.

## துபாயில் நடைப்பெற்ற "MAKKA!" "Namma Kumari Day" நிகழ்ச்சி



கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சார்பாக துபாயில் நடைப்பெற்ற "MAKKA!" "Namma Kumari Day" நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தேன்.

## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணை



வீட்டுவசதி வாரியத்தில் பல்வேறு பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.உடன் அமைச்சர் முத்துசாமி, வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் கணேசன் உள்ளனர்.

## காட்பாடி ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் தங்கக் கவசத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!

**வேலூர், நவ. 3:**

வேலூர் மாவட்டம், காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ளது ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோயில். இந்த கோயிலில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று தங்கக் கவசத்தில் ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

அதேபோன்று நவம்பர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையை முன்னிட்டு ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் தங்கக் கவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அத்துடன் வடை மாலை சாத்தியும், வெற்றிலை மாலை சாத்தியும் பக்தர்கள் ஸ்ரீபக்த ஆஞ்சநேயரை வழிபட்டனர்.

இதற்கு முன்னர் அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு ஸ்ரீபக்த ஆஞ்சநேயருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடந்தன. இதையடுத்து மலர்களாலும், தங்கக் கவசத்தாலும் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு



அருள் பாலித்தார்.

இதையடுத்து பக்தர்கள் வடைமாலை சாத்தியும், வெற்றிலை மாலை, துளசி மாலை சாத்தியும் தொடர்ந்து வழிபட்ட வண்ணமாக இருந்தனர். தொடர்ந்து நாள் முழுவதும் தங்கக் கவசத்தில் பக்தர்களுக்கு ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் அருள் பாலித்து வந்தார். பூஜையில் திரளாக கலந்து கொண்டனர் பக்தர்கள்.

பூஜையில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ கண்ணன் பட்டாச்சாரியார் வெகு விமரிசையாக செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நலம் காக்கும் முழு உடல் பரிசோதனை முகாம்



மணலிக்கரை தூயமேரி கொரற்றி மேல்நிலைப்பள்ளியில் நடந்த நலம் காக்கும் முழு உடல் பரிசோதனை முகாமில் தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டைகளை கலெக்டர் அழகுமீனா வழங்கினார்.

## தொடுதிரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டி



காஞ்சிபுரம் தேவராஜ சுவாமி திருக்கோவிலில் பக்தர்களின் பயன்பாட்டுக்காக தொடுதிரை வசதியுடன் கூடிய தகவல் பெட்டியை கலெக்டர் கலைச்செல்வி, எம்எல்ஏக்கள் சுந்தர், எழிலரசன் துவக்கி வைத்தனர்.

## நிர்வாக குழு உறுப்பினர்களுக்கு தில்லை கோவிந்தராஜ பெருமாள் கும்பாபிஷேக விழா கமிட்டி சார்பாக மரியாதை



சிதம்பரம் நடராஜர் கோவில் உள்ளே அமைந்துள்ள திருச்சி திரக்கூடம் என அழைக்கப்படும் தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோவிலில் நவம்பர் 3ஆம் தேதி மகா சம்ப்ரோக்ஷணம் நடைபெற உள்ளது. இதையெடுத்து நேற்று இரவு நடராஜர் கோவில் செயலாளர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களுக்கு தில்லை கோவிந்தராஜ பெருமாள் கும்பாபிஷேக விழா கமிட்டி சார்பாக மரியாதை செலுத்தப்பட்டது.

## தோட்டாளம் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம்



திருப்பத்தூர் மாவட்டம், தோட்டாளம் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டத்தில் கலெக்டர் சிவசவுந்தரவல்லி, கதிர் ஆனந்த் எம்.பி.கலந்து கொண்டனர்.

## நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்



கோவை நரசிபுரத்தில் நலத்திட்ட உதவிகளை கலெக்டர் பவன்குமார் வழங்கினார்.

## தீபத் திருவிழாவுக்கு சிறப்பு பேருந்துகள்



திருவண்ணாமலை திருக்கார்த்திகை தீபத் திருவிழாவுக்கு சிறப்பு பேருந்துகள் 4,764 பேருந்துகள்,11,293 நடைகள் இயக்க நடவடிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க.தர்ப்பகராஜ் இ, ஆ. ப. அவர்கள் அறிவிப்பு. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சீர்காழி அருகே மங்கைமடம் யோகநாதசுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம்



**சீர்காழி , நவ , 03 :**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் கீழசட்டநாதபுரம் மங்கைமடம் யோகீஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கும். அருள்மிகு யோகாம்பாள் உடனுறை அருள்மிகு யோகநாத சுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்குமேல் 10.30 மணிக்குள் நடைபெற்றது. தொடர்ந்து திருக்கல்யாணம் நடந்தது. பக்தகோடிகள் திரளாக கலந்து கொண்டு இறையருள் பெற்றார்கள். அன்னதானம் வழங்கப்பட்டது. மஹா கும்பாபிஷேக விழா நேரடி வர்ணனையை சீர்காழி டாக்டர் கே.ஆர்.சரவணன் செய்தார்.

## டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்கு வடகிழக்கு பருவமழை துவக்க நிலையிலே நீர் நிலைகள் நிரம்பின

**திருவாரூர், நவ.3:**

டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்கு மேட்டூர் அணை திறக்கபட்டு நிரம்பாத நீர் நிலைகள் வடகிழக்கு பருவமழை துவக்க நிலையிலே நீர் நிலைகள் நிரம்பின.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தாலுக்காவில் உள்ள 71 வருவாய் கிராமங்கள் குடமுருட்டி ஆறு, வெட்டாறு, வெண்ணாறு மற்றும் முக்கிய பாசன வடிகால் ஆறான சுள்ளான் ஆறு மூலம் பாசன வசதி பெறுகின்றன.

வலங்கைமான் தாலுக்காவில் உள்ள 50 கிராம ஊராட்சிகளில் அறநிலையத் துறைக்கு சொந்தமான குளங்கள், கிராம ஊராட்சிகளுக்கு சொந்தமான குளங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான குளங்கள் என ஆயிரத்திற்கு மேற்பட்ட குளங்கள் உள்ளன.



இவை நீங்கலாக, பல்வேறு காலகட்டங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் நூறு சதவீத மானியத்தில் நிலத்தடி நீரை பாதுகாத்திடவும், மீன் வளர்ப்பு செய்து வருவாய் ஈட்டிடும் வகையில் பண்ணை குட்டைகள் அமைத்து தரப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்கு மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறக்கப்பட்டது.

இருப்பினும் டெல்டா மாவட்டங்களில் உள்ள குளங்கள் உள்ளிட்டவைகள் நிரம்ப வில்லை, இந்நிலையில் வடகிழக்கு பருவமழை துவக்க நிலையிலே குளம் உள்ளிட்ட அனைத்து நீர் நிலைகளும் நிரம்பின.

இதனை அடுத்து மீன் வளர்ப்போர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# ஆஸ்திரேலியாவில் இந்திய நிறுவனங்களுக்கு மானியம்



**சென்னை, நவ.3:**

உலகத் தமிழ் வர்த்தக சங்கமும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பும் இணைந்து நடத்தும் 12 உலக வர்த்தக மாநாடு டிசம்பர் 6 & 7ஆம் தேதிகளில் ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ளது. அம்மாநாட்டில் இந்திய தமிழக சிறு குறுந்தொழில் நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலதிபர்கள், முதலீட்டாளர்கள், புதிய கிளைகளை நிறுவுவோர் ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் ஒன்றிணைய உள்ளனர் இந்திய அரசும் மற்றும் தமிழக அரசு வேளாண்மை பொருட்களை ஏற்றுமதி செய்யவும், சிறுதானியங்களை உலகெங்கும் கொண்டு சேர்க்கவும், இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளன. மேலும் இந்திய ஆஸ்திரேலியா அரசுகளின் தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தின்படி ஆஸ்திரேலியாவில் தொழில் முறை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஆஸ்திரேலியா அரசு மானியங்களை வழங்க உள்ளது. அம்மானியங்களை பெற பல்வேறு நாடுகளில் இருந்து ஆஸ்திரேலியாவில் தொழில் தொடங்கவும் தொழில் முறை ஆராய்ச்சிகளை செய்யவும் பல்வேறு நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு இம்மாநாட்டில் கலந்து கொள்ள ஆர்வம் தெரிவித்துள்ளன என உலகத் தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

# தேர்தலை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட சதியே வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் - திருமாவளவன்



**சென்னை, நவ.3:**

எஸ்.ஐ.ஆர். மூலம் தமிழ்நாட்டில்சுமார் ஒருகோடி வாக்காளர்களின் பெயர்கள் விடுபட வாய்ப்புள்ளதாக திருமாவளவன் கூறினார்.

வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தம் தொடர்பாக சென்னையில் நடந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் பேசும்போது கூறியதாவது;

"ஒவ்வொரு வாக்காளரும் 2002-2004 சிறப்பு வாக்காளர் பட்டியலில் இருந்த தன்னுடைய பதிவை அடையாளம் கண்டு இப்போதைய விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு ஒவ்வொருவருக்கும் நீண்ட நேரம் தேவைப்படும்.

இந்த சட்ட விரோத நடவடிக்கையை எதிர்த்துத்தான் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்து உள்ளோம். அந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு நடவடிக்கையை அறிவித்து இருப்பது நீதியை மறுப்பதாகும். தற்போதுள்ள வாக்காளர் பட்டியலை 2002-2004-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட வாக்காளர் பட்டியலோடு உத்தேசமாக பொருத்திப் பார்த்ததில் சுமார் 40 விழுக்காடு வாக்காளர்களின் பெயர்களே முழுமையாகப் பொருந்துகின்றன எனக் கூறப்படுகிறது. எவ்வளவுதான் முயற்சித்தாலும் 10 முதல் 20 விழுக்காடு வாக்காளர்களின் பெயர்கள் இதில் விடுபட்டுப் போகும். அதாவது தமிழ்நாட்டில் சுமார் ஒரு கோடி வாக்காளர்களின் பெயர்கள் விடுபடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இது தமிழ்நாடு சட்டசபை தேர்தலை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட சதி என்று கருத வேண்டி உள்ளது. மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கையை எதிர்க்கிறது."

இவ்வாறு அவர் கூறினார்.

# வேதாரண்யம் அருகே சிவலிங்கம் மீது சூரிய ஒளி.. அற்புத காட்சியை தரிசனம் செய்த பக்தர்கள்



**நாகப்பட்டினம், நவ.3:**

வேதாரண்யம் அடுத்த மறைஞாயநல்லூர் மேல மறைக்காடர் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோவிலில் சிவபெருமானுக்கு ருத்ர யாகம் உள்ளிட்ட சிறப்பு யாகங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் அஷ்டமியை முன்னிட்டு உலக நன்மை வேண்டி இக்கோவிலில் உள்ள கால பைரவர் சன்னதியில் சிறப்பு யாகம் நடைபெறும்.

இந்த ஆலயத்தில் நேற்று காலை 6 மணியளவில் இக்கோவிலின் கருவறையில் உள்ள சிவலிங்கத்தின் மீது சூரிய ஒளி பட்டது. சூரிய பகவான் தன் ஒளிக்கதிர்களால் ஈசனை வழிபட்ட நிகழ்வு சுமார் பத்து நிமிடம் நீடித்தது.

சூரிய ஒளியில் பிரகாசித்த சிவலிங்கத்தை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர். பின்பு சிவலிங்கத்திற்கு பால், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர், பன்னீர் உள்ளிட்ட 16 திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது. பின்பு வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது.

இக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் முதல் வாரத்தில் ஏதாவது ஒரு நாளில் சிவலிங்கத்தின் மீது சூரிய ஒளி படும் என பக்தர்கள் தெரிவித்தனர்.

# சபரிமலை சீசனில் பக்தர்களின் வசதிக்காக தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்கள்

**சென்னை, நவ.3:**

*சபரிமலை சீசனில் பக்தர்களின் வசதிக்காக தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது.*

*தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-*

*சபரிமலை சீசனில் பயணிகளின் கூடுதல் கூட்ட நெரிசலை தவிர்க்க, பின்வரும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும்:*

*சென்னை எழும்பூர்- கொல்லம் செல்லும் வாராந்திர சிறபு ரயில் (வண்டி எண்:06111) வருகிற நவம்பர் 14 முதல் ஜனவரி 16 வரை (வெள்ளிக்கிழமைகளில்) இரவு 11.55 மணிக்கு எழுபூரில் இருந்து புறப்பட்டு, மறுநாள் மாலை 4.30 மணிக்கு கொல்லத்தை சென்றடையும்,*

*மறுமார்க்கத்தில், கொல்லம் - சென்னை எழுப்பூர் செல்லும் வாராந்திர சிறபு ரயில் (வண்டி எண்: 06112) வருகிற நவம்பர் 15 முதல் ஜனவரி 17 வரை (சனிக்கிழமைகளில்) மாலை 4.35 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்பட்டு, மறுநாள் பிற்பகல் 12 மணிக்கு சென்னை எழுப்பூர் வந்து சேரும்.*

*சென்னை சென்ட்ரல் - கொல்லம் செல்லும் வாராந்திர சிறப்பு ரயில் (வண்டி எண்: 06113) வருகிற நவம்பர் 16 முதல் ஜனவரி 18 வரை (ஞாயிற்றுக்கிழமைகளில்) இரவு 11.20 மணிக்கு சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்பட்டு, மறுநாள் மாலை 4.30 மணிக்கு சென்னை எழுப்பூர் வந்து சேரும்.*

*மறுமார்க்கத்தில், கொல்லம் - சென்னை சென்ட்ரல் செல்லும் வராந்திர சிறப்பு ரயில் (வண்டி எண்: 06114) வருகிற நவம்பர் 17 முதல் ஜனவரி 19 வரை (திங்கட்கிழமைகளில்) மாலை 4.30 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்பட்டு, மறுநாள் காலை 11.30 மணிக்கு சென்னை சென்ட்ரல் வந்து சேரும்.*

*சென்னை சென்ட்ரல் - கொல்லம் செல்லும் வாராந்திர சிறப்பு ரயில் (வண்டி எண்: 06117) வருகிற நவம்பர் 22 முதல் ஜனவரி 24 வரை (சனிக்கிழமைகளில்) இரவு 11.50 மணிக்கு சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்பட்டு, மறுநாள் மாலை 4.30 மணிக்கு கொல்லம் சென்றடையும்.*

*மறுமார்க்கத்தில், கொல்லம் - சென்னை சென்ட்ரல் செல்லும் வாராந்திர சிறப்பு ரயில் (வண்டி எண்: 06118) வருகிற நவம்பர் 23 முதல் ஜனவரி 25 வரை (ஞாயிற்றுக்கிழமைகளில்) மாலை 4.30 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்பட்டு, மறுநாள் காலை 11.30 மணிக்கு சென்னை சென்ட்ரல் வந்து சேரும்.*

*சென்னை சென்ட்ரல் - கொல்லம் செல்லும் வாராந்திர சிறப்பு ரயில் (வண்டி எண்: 06127) வருகிற நவம்பர் 20 முதல் ஜனவரி 22 வரை (வியாழக்கிழமைகளில்) இரவு 11.50 மணிக்கு சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்பட்டு, மறுநாள் மாலை 4.30 மணிக்கு கொல்லம் சென்றடையும்.*

*மறுமார்க்கத்தில், கொல்லம் - சென்னை சென்ட்ரல் செல்லும் வாராந்திர சிறப்பு ரயில் (வண்டி எண்: 06128) வருகிற நவம்பர் 21 முதல் ஜனவரி 23 வரை (வெள்ளிக்கிழமைகளில்) மாலை 4.30 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்பட்டு, மறுநாள் காலை 11.30 மணிக்கு சென்னை சென்ட்ரல் வந்து சேரும்.*

*சென்னை சென்ட்ரல் - கொல்லம் செல்லும் வாராந்திர சிறப்பு ரயில் (வண்டி எண்: 06127) வருகிற நவம்பர் 20 முதல் ஜனவரி 22 வரை (வியாழக்கிழமைகளில்) இரவு 11.50 மணிக்கு சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்பட்டு, மறுநாள் மாலை 4.30 மணிக்கு கொல்லம் சென்றடையும்.*

*மறுமார்க்கத்தில், கொல்லம் - சென்னை சென்ட்ரல் செல்லும் வாராந்திர சிறப்பு ரயில் (வண்டி எண்: 06128) வருகிற நவம்பர் 21 முதல் ஜனவரி 23 வரை (வெள்ளிக்கிழமைகளில்) மாலை 4.30 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்பட்டு, மறுநாள் காலை 11.30 மணிக்கு சென்னை சென்ட்ரல் வந்து சேரும்.*

*இந்த வாராந்திர சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு நாளை மறுநாள் (04.11.2025) காலை 8 மணி முதல் தொடங்குகிறது.*

*இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# விஜய்க்கு மக்கள் மீது அக்கறை இல்லை - கருணாஸ்



**சென்னை, நவ.3:**

*தேர்தல் வரும் நிலையில், தேர்தல் ஆணையம் செய்யும் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை முழுக்க தமிழகத்திற்கு விரோதமானது என கருணாஸ் கூறினார்.*

*வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து ஆலோசிப்பதற்காகசென்னையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெற்றது. 64 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 21 கட்சிகள் பங்கேற்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. தவெக., அன்புமணி தரப்பு பாமக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் கூட்டத்தை புறக்கணித்தன.*

*இந்நிலையில், எஸ்.ஐ.ஆர்.-க்கு எதிரான அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விஜய் பங்கேற்காதது குறித்து முக்குலத்தோர் புலிப்படைத் தலைவர் கருணாஸ் விமர்சித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது;*

*"முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் எஸ்.ஐ.ஆர். பற்றியும், அதன் விபரீதத்தை பற்றியும் அனைத்துக் கட்சி தலைவர்களும் தங்களது கருத்துகளை எடுத்துரைத்தார்கள். தேர்தல் வரும் நிலையில், தேர்தல் ஆணையம் செய்யக்கூடிய எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை முழுக்க முழுக்க தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் விரோதமானது.*

*குறுக்கு வழியில் வாக்குரிமைகளை பரிப்பதன் மூலம் குடியுரிமையற்றவர்களாக சிறுபான்மையினர்களையும் மற்றவர்களையும் உருவாக்கனும் என்பதுதான் அவர்களுடைய தொலைநோக்கு திட்டம். அதற்கு நாம் எந்த விதத்திலம் இடம் கொடுத்துவிடக்கூடாது.*

*சட்டரீதியாக அனைவரும் சுப்ரீம் கோர்ட்டு சென்று அவரவர்கள் தனிதனியாக வழக்கு போட வேண்டும்.*

*இதுபோன்ற கூட்டத்தில் விஜய் கலந்துக்காமல், பிரதிநிதிகளை அனுப்பாமல் இருப்பது அவருக்கு மக்கள் மீது அக்கறை இல்லாததை காட்டுகிறது.*

*பாஜக எந்தவிதமான திட்டத்தை கொண்டு வந்தாலும் எடப்பாடி பழனிசாமி ஏற்றுக் கொள்வார்."*

*இவ்வாறு அவர் கூறினார்.*

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

# குடல் பாதுகாப்பு: அழற்சியை நீக்கி ஆரோக்கியமாக வைக்கும் உணவுகள்...



1. பூண்டு

இதில் இருக்கும் இனுலின் குடலுக்குள் சிறந்தது. பூண்டு உண்பதால் அழற்சி நீங்கி நோயெதிர்ப்பு அதிகரிக்கிறது. இதில் உள்ள ப்ரீபயாடிக் பண்பு குடலை பாதுகாக்கிறது.

2. வெங்காயம்

நம் உடல் செரிமானத்தை சீராக்க, வெங்காயத்தில் உள்ள Fructooligosaccharides (FoS) உதவுகிறது. இது நோயெதிர்ப்பை அதிகரிப்பதுடன் கொலஸ்டிராலையும் கட்டுப் படுத்துகிறது. சாலட், சூப் மற்றும் சாண்ட்விச்களில் இதை சேர்ப்பதால் குடல் ஆரோக்கியம் மேம்படுகிறது.

3. வெங்காயத் தாள்/ கீரை

இதில் பீரீபயாடிக்கான இனுலின் அதிக அளவில் உள்ளது. இது இதயத்திற்கும் சிறந்தது. நோயெதிர்ப்பு மற்றும் செரிமானத்திற்கும் ஏற்றது. வாரத்திற்கு இருமுறை இதை உண்ண ஆரோக்கியம் மேம்படும்.

4. தண்ணீர் விட்டான் கிழங்கு

இதில் அதிக இனுலின் உள்ளது. இதை உட்கொள்வதால் உடலில் நல்ல பாக்டீரியாக்கள் அதிவிரைவில் வளர்கின்றன. செரிமான சக்தியும் சீராக்கப்படுகிறது. ஊட்டச்சத்து நிறைந்த இது இயற்கையான முறையில் உடலை மேம்படுத்தும்.

5. பச்சை வாழைப்பழம்

இது பழுப்பதற்கு முன் அதிக பச்சையாக இருக்கும் போது அதிக ஃப்ரீ பயாடிக் நிறைந்திருக்கும். இதன் நார்ச்சத்து நல்ல பாக்டீரியாவை ஊக்குவிக்கும். மலச்சிக்கலை தீர்ப்பதுடன் இரத்தச் சர்க்கரையையும் கட்டுக்குள் வைக்கும்.

6. சிக்கரி ரூட்

இதில் 65 சதவீதம் இன்சுலின் உள்ளது. இதை உண்ணும் போது மலச்சிக்கல் தீரும். இதை காபி பெளடருடன் சேர்ப்பார்கள். அதிகம் பயன்படுத்தாமல் மிதமாக பயன்படுத்த வேண்டும்.

7. ஓட்ஸ்

இதில் பீடாக்ளுகன் நிறைந்துள்ளதால் செரிமானத்திற்கு மிகச் சிறந்தது. இது கொலஸ்டிராலைக் கட்டுப்படுத்துவதுடன் இரத்தச் சர்க்கரையும் கட்டுப்படுத்தும். இதை உண்ணுவதன் மூலம் ப்ரீபயாடிக் நிறைய கிடைக்கும் முழு ஓட்ஸ் உபயோகிப்பது நல்லது.

8. ஆப்பிள்

இதில் உள்ள பெக்டின் ப்ரீபயாடிக் நிறைந்தது. இது அழற்சிய குறைத்து நல்ல பாக்டீரியாவை ஊக்குவிக்கும். இதன் தோலில் அதிக நார்ச்சத்து உள்ளதால் தோலோடு உட்கொள்வது நல்லது.

9. பார்லி

இதில் உள்ள பீட்டாக்ளுகன் ஃப்ரீ பயாடிக் நிறைந்தது. செரிமானத்தை சீராக்கும். கொலஸ்டிரால்ஐக் குறைக்கும். இரத்தச் சர்க்கரையைக் கட்டுப்படுத்தும் இதன் நார்ச்சத்து மிகச் சிறந்தது வாரத்தில் மூன்றுமுறை இதை உட்கொள்வதால் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

10. கடல் பாசி

இதில் அகர் மற்றும் ஆல்ஜினேட் என்ற ஃப்ரீ பயாடிக் நார்ச் சத்துக்கள் உள்ளன. நோயெதிர்ப்பை அதிக செரிமான சக்தியை சீராக்கும் இது நல்ல பாக்டீரியாவை ஊக்குவிக்கும்.

# திசைதிருப்பு முன்னேற்றக் கழகத்தின் எஸ்.ஐ.ஆர் எதிர்ப்புக் கூட்டம் - நயினார் நாகேந்திரன்

**சென்னை, நவ.3:**

தோல்வி பயத்தில் உள்ள கட்சிகள் மட்டுமே இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளன என்று நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.



தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

மக்கள் குறைகளைத் தீர்க்க ஒருபோதும் அனைத்து கட்சி பொதுக்கூட்டத்தைக் கூட்டாத முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், தற்போது மட்டும் எஸ்.ஐ.ஆர் பற்றிய கூட்டத்தை நடத்துவதில் இருந்தே தெரிகிறது இது மக்களை மடைமாற்ற நடத்தப்படும் மற்றுமொரு திசைதிருப்பு நாடகம் என்று!

ஜனநாயக தேசத்தில் குடிமக்களின் வாக்குரிமையைக் காக்கும் பொருட்டு பல்லாண்டுகாலமாகத் தொடர்ந்து நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை, ஏதோ அந்நியமானது போல, பிரதானமாகக் காட்சிபடுத்தி, மழைவெள்ள பாதிப்பு, ஊழல், விவசாயிகள் படும் அல்லல் ஆகியவற்றை மறைத்து, குளிர்காய முயற்சிப்பது இனியும் செல்லாது.

திமுகவின் திசைதிருப்பு நாடகத்தை நன்கு அறிந்து, பல கட்சிகள் கூட்டத்தினை புறக்கணித்துள்ள நிலையில், தோல்வி பயத்தில் உள்ள கட்சிகள் மட்டுமே இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளன.

திமுக அரசின் தொடர் திசைதிருப்பு நாடகத்தையும் வெற்று விளம்பரத்தையும் பார்த்துப் பார்த்து சலித்துப்போன தமிழக மக்கள், இந்த எஸ்.ஐ.ஆர் எதிர்ப்பு நாடகத்தையும் புறக்கணிப்பர்! ஜனநாயகத்தின் மீது சிறிதும் அக்கறை இருந்தால், முறையாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை எதிர்ப்பதைவிடுத்து, எஞ்சியிருக்கும் நாட்களில் தங்களுக்கு வாக்களித்த மக்களின் குறைகளைத் தீருங்கள் முதல்-அமைச்சரே!

இவ்வாறு அதில் தெரிவிக்க ப்பட்டுள்ளது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528


## மெட்ரோ ரயிலில் அக்டோபரில் 93.27 லட்சம் பேர் பயணம்

**சென்னை, நவ.3:**

மெட்ரோ ரயிலில் அக்டோபர் மாதத்தில் 93 லட்சத்து 27 ஆயிரத்து 746 பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் இரண்டு வழித்தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி 3 லட்சம் பேர் பயணம் செய்கின்றனர்.

பயணிகளுக்கு நம்பகத்தன்மையான, பாதுகாப்பான வசதியை மெட்ரோ ரயில் நிர்வாகம் வழங்குகிறது. இதன்காரணமாக, மெட்ரோ ரயிலில் பயணிப்போர் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. கடந்த அக்டோபரில் 93 லட்சத்து 27 ஆயிரத்து 746 பேர் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

தொடர் விடுமுறை: செப்டம்பர் மாதத்தில் ஒரு கோடியே 1 லட்சத்து 46 ஆயிரத்து 769 பேர் பயணம் செய்திருந்த நிலையில், அக்டோபரில் பயணிகள் எண்ணிக்கை சற்று குறைந்துள்ளது. ஆயுத பூஜை, காந்தி ஜெயந்தி, தீபாவளி என தொடர் விடுமுறைகளால் பெரும்பாலான மக்கள் சொந்த ஊர்களுக்கு சென்றனர். அதனால், மெட்ரோவில் பயணிப்போர் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அக்டோபர் மாதத்தில் அதிகபட்சமாக 17-ம் தேதி 4 லட்சத்து 2 ஆயிரத்து 10 பேர் பயணம் செய்துள்ளனர். அந்த மாதத்தில் மட்டும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 47 லட்சத்து 59 ஆயிரத்து 171 பேர், பயண அட்டைகளை பயன்படுத்தி 77 ஆயிரத்து 236 பேர், க்யுஆர் குறியீடு (QR CODE) பயணச் சீட்டு முறையைப் பயன்படுத்தி 44 லட்சத்து 91 ஆயிரத்து 339 பேர் பயணம் செய்துள்ளனர். இத்தகவலை சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வெளிநாடு வாழ் இந்தியர்கள் பணம் அனுப்புவதை விரைவுபடுத்த நடவடிக்கை

**மும்பை, நவ.3:**

வெளிநாடு வாழ் இந்தியர்கள் தாயகத்தில் உள்ள தங்களது உறவினர்களுக்கு பணம் அனுப்புவதை விரைவுபடுத்த ரிசர்வ் வங்கி நடவடிக்கை எடுத் துள்ளது. இதற்கான வரைவு வழிகாட்டுதல்களை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளதாவது: எல்லை தாண்டிய பணப் பரிமாற்றங்களை எளிதாக வும், வேகமாகவும், பாதுகாப்பானதாகவும் மாற்ற வேண்டும் என்பது ஜி20 திட்டத்தின் ஒரு முக்கிய இலக்காகும். பணப்பரிமாற்றத்தின் செயல் திறனை மேம்படுத்துவதையும், ஜி20 திட்டத்துடன் இணைப்ப தையும் இலக்காக வைத்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து 2025, நவம்பர் 19-க்குள் வங்கிகளிட மிருந்து அதன் திட்டங்கள் மற்றும் கருத்துகளை ரிசர்வ் வங்கி வரவேற்கிறது, வெளிநாடுகளில் இருந்து நடைபெறும் பணப்பரிமாற்றங்களின் செயல்திறனை வேக மாகவும், வெளிப்படையாக வும், அதிகம் அணுகக்கூடியதாகவும் மாற்றவேண்டும். பணப் பரிமாற்றங்களின் வேகத்தை பாதிக்கும் பல காரணிகள் உள்ளன. அதில் பயனா ளியின் வங்கியில் பணம் பெறப்பட்டதிலிருந்து பயனாளியின் கணக்கில் வரவு வைக்கப்படும் வரை எடுத்துக்கொள்ளும் நேரம் முக்கியமாகும்.

# தொழில்நுட்பத்தை நல்வழியில் பயன்படுத்துங்கள்! விஐடி விழாவில் தாய்லாந்து துணைத்தூதர் வேண்டுகோள்

**சென்னை, நவ.3:**



விஐடி சென்னையில் அக். 31 முதல் நவ. 2 வரை நடைபெறும் “டெக்னோ விஐடி 2025” சர்வதேச தொழில்நுட்ப விழாவின் தொடக்க விழாவில், தாய்லாந்து துணைத்தூதர் ரச்சா அரிபர்க், இளைஞர்கள் தொழில் நுட்பத்தை முதியோர் நலனுக்கும் குற்றங்களுக்கு எதிராகவும் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

விஐடி துணைத்தலைவர் முனை வர் கோ.வி.செல்வம் தலைமையில் நடந்த விழாவில் பேசிய துணைத் தூதர், உலகம் முழுவதும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மூலம் இளை ஞர்களுக்கும் முதியவர்களுக்கும் இடையே அறிவு இடைவெளி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

முதியவர்களுடன் இளைஞர்கள் சிறிது நேரம் செலவிட்டு அவர்களுக்கு தொழில்நுட்பம் கற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், இல்லையெனில் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பின்தங்கிவிடுவார்கள் என்றும் எச்சரித்தார்.

அறிவியல் மற்றும் பொறியியலுடன் தத்துவம் மற்றும் நெறிமுறைகளையும் கற்க வேண்டும் என வலியுறுத்திய அவர், தாய்லாந்து, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இணைய மோசடி செய்பவர்கள் பெரிய சிக்கலை ஏற்படுத்துவதால், இளைஞர்கள் குற்றவாளிகளுக்கு எதிரான போராட்டத்தில் இணைய வேண்டும் என்றார். கவுரவ விருந்தினராக கலந்து கொண்ட எச்.சி.எல்.டெக் நிர்வாக துணைத்தலைவர் பிரின்ஸ் ஜெய குமார், செயற்கை நுண்ணறிவு மற்றும் குவாண்டம் கணினி போன்ற துறைகளின் வளர்ச்சி அதி வேகமாக உள்ளதாகவும், கடந்த 30 ஆண்டுகளாக இந்தியா உல கின் தகவல் தொழில்நுட்ப சேவை தலைநகரமாக திகழ்ந்து வருவதாகவும் தெரிவித்தார். அடுத்த 10 ஆண்டுகளில் இளைஞர்களின் பங்களிப்பால் புதிய கண்டுபிடிப்புகளில் இந்தியா தலைமை வகிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

விஐடி துணைத்தலைவர் செல்வம் பேசுகையில், அமெரிக்காவின் புதிய கொள்கை மாற்றங்கள் காரணமாக உயர்கல்வி பயிலும் இந்திய மாண வர்களின் எண்ணிக்கை 44 சத வீதம் குறைந்துள்ளதாகவும், மாண வர்கள் இந்தியாவிலேயே கல்வி பயின்று உற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொரோனா காலத்தில் இறக்குமதி சார்ந்து இல்லாமல் சொந்தமாக உற்பத்தி செய்து நிலைமையை சமாளித்ததை எடுத்துக் காட்டிய அவர், தொழில்நுட்பப் பரி மாற்றம் மாணவர்களுக்கு அவசியம் என்றும், இது போன்ற நிகழ்வுகள் தலைமைப் பண்புகளை மேம்படுத்த சிறந்த வாய்ப்பு என்றும் கூறினார்.

ரோபோ ஷோ, டிரோன் ஷோ உள்ளிட்ட 150-க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப நிகழ்வுகள் நடைபெறும் இந்த விழாவில், நாடு முழுவதிலும் இருந்தும், ஆஸ்திரேலியா, பிரேசில், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா, உஸ்பெகிஸ்தான், போலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடு களைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்கின்றனர். வெற்றி பெறுப வர்களுக்கு ரூ.10 லட்சம் மதிப்பிலான பரிசுகள் வழங்கப்படும். விழா நவம்பர் 2ம் தேதி மாலையுடன் நிறைவடைகிறது.

# தாம்பரம், ஆவடி விமானப்படை நிலையங்கள் சார்பில் மாரத்தான் போட்டி

**சென்னை, நவ.3:**




சென்னை தாம்பரம் மற்றும் ஆவடியில் உள்ள இந்திய விமானப்படை நிலையங்கள், இன்று “செக்கோன் நினைவு இந்திய விமானப்படை மாரத்தான்” நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தின. இந்தியா முழுவதும் உள்ள மேலும் 43 விமானப்படை நிலையங்களும் இந்நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் நடத்தின. விமானப்படையின் 93வது ஆண்டு விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. “ஓடுவீர் - உயர்வீர் -உத்வேகம் பெறுவீர் “ என்ற கருப்பொருளுடன் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

21 கிமீ, 10 கிமீ மற்றும் 5 கிமீ என மூன்று பிரிவுகளின் கீழ் இந்த மாரத்தான் நடத்தப்பட்டது. ஓட்டம் மற்றும் நடை ஆகியவை இதில் இடம்பெற்றன. இது உடல் தகுதி, ஒற்றுமை மற்றும் தேசம் குறித்த பெருமையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டது.

தாம்பரம் விமானப்படை நிலையத்தில், இந்த மாரத்தான் போட்டியை அதன் தலைவர் ஏர் கமடோர் தபன் சர்மா கொடியசைத்து தொடங்கி வைத்தார். மொத்தம் 787 விமானப்படை வீரர்கள், அவர்களது குடும்பத்தினர், சக பாதுகாப்புப்படைகளைச் சேர்ந்த வீரர்கள், துணை ராணுவப் படைகள் மற்றும் அனைத்து வயது ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இப்பகுதியில் உள்ள முக்கிய பிரமுகர்களும் விளையாட்டு வீரர்களும் மாரத்தானில் பங்கேற்று, இதர பங்கேற்பாளர்களை ஊக்கப்படுத்தினர்.

ஆவடியில், விமானப்படை நிலையத்தின் தலைவர் ஏர் கமடோர் பிரதீப் சர்மா மாரத்தானை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

வெற்றியாளர்களை விமானப்படை குடும்ப நல சங்கத்தின் உள்ளூர் தலைவர் ஏர் கமடோர் பிரதீப் சர்மா, குரூப் கேப்டன் ரச்சனா சர்மா (ஓய்வு) ஆகியோர் கவுரவித்தனர். தஞ்சாவூர் மற்றும் சூலூரில் உள்ள விமானப்படை நிலையங்களும் மாரத்தான் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தன.

பாதுகாப்புப் படை வீரர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்தவும், தேசிய ஒற்றுமை மற்றும் பெருமையை வளர்க்கவும் மாரத்தான் ஒரு தளமாக திகழ்ந்தது.

1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் போது நாட்டின் மிக உயர்ந்த இராணுவ விருதான பரம் வீர் சக்ரா (பிவிசி) விருது பெற்ற ஒரே இந்திய விமானப்படை அதிகாரியான பிளையிங் ஆபீசர் நிர்மல் ஜித் சிங் செகோனின் தீரச்செயலை கௌரவிக்கும் விதமாக செகோன் இந்திய விமானப்படை மாரத்தான் நடத்தப்பட்டது.

## பண்ருட்டி அருகே கர்ப்பிணி தூக்கிட்டு தற்கொலை

**கடலூர், நவ.3:**

காதல் திருமணம் செய்து கொண்ட ஆறாவது மாதத்தில் 5 மாத கர்ப்பிணி தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே உள்ள முத்துகிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீமதி என்பவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு அருள்மணி என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டார். அருள்மணி சென்னை, புதுச்சேரி உள்ளிட்ட இடங்களில் மாடுலர் கிச்சன் பிரிவில் பணி செய்து வருகிறார். இந்த நிலையில் வெள்ளிக்கிழமை இரவு அருள்மணி வீட்டிற்கு வந்து ஸ்ரீமதியுடன் பேசிக் கொண்டு இருந்தார்.

பின்னர் அவர் சிறிது நேரம் வெளியில் சென்று வந்து பார்த்தபோது தன்னுடைய அறையில் தூக்கிட்டு ஸ்ரீமதி தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் குறித்து தற்போது போலீசார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தற்கொலைக்கான காரணம் என்ன என்பது குறித்து அவர்கள் விசாரித்து வரும் அதே நேரத்தில் கோட்டாட்சியர் விசாரணையும் நடத்தப்பட உள்ளது.

## வேன் கவிழ்ந்து விபத்து: 18 பேர் படுகாயம் ‘

**கடலூர், நவ.3:**

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகே வேன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சென்னையைச் சேர்ந்த 18 பேர் படுகாயமடைந்தனர்.

சென்னையைச் சேர்ந்தவர்கள் நெய்வேலியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பணி நிறைவு பாராட்டு விழாவில் கலந்துகொண்டனர். சனிக்கிழமை பிச்சாவரம் சுற்றுலா செல்ல திட்டமிட்டு 18 பேர் வேனில் பயணம் செய்தனர். குறிஞ்சிப்பாடி அருகே பொட்டவெளி என்ற இடத்தில் வேன் கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதி சாலையில் கவிழ்ந்தது. விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் கவலைக்கிடமான நிலையில் புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்றவர்கள் குறிஞ்சிப்பாடி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். குறிஞ்சிப்பாடி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கார்த்திகை தீபம்: சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**திருவண்ணாமலை, நவ.3:**

திருவண்ணாமலையில் பிரசித்தி பெற்ற அண்ணாமலையார் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலுக்கு தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்ய வருவார்கள். ஒவ்வொரு மாதமும் பவுணர்மி தினத்தில் ஏராளமான பக்தர்கள் திருவண்ணாமலையில் கிரிவலம் செல்வது வழக்கம். பக்தர்களின் வசதிக்காக இந்த தினங்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.

அதேபோல ஒவ்வொரு ஆண்டும் அண்ணாமலையார் கோவிலில் கார்த்திகை தீப திருவிழா கோலாகலமாக கொண்டாடப்படும். தமிழ்நாடு மட்டுமல்லாமல் பிற மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருவார்கள்.

அந்த வகையில் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் டிசம்பர் 3ம் தேதி கார்த்திகை தீபத் திருவிழா நடைபெற உள்ளது. அன்று அதிகாலை 4 மணிக்கு கோவில் மூலவர் சந்நிதியில் பரணி தீபம், மாலை 6 மணிக்கு 2,668 அடி உயர மலை மீது மகா தீபம் ஏற்றப்படும். மறுநாள் பவுர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது.

தீபத் திருவிழாவிற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது. கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலைகு சுமார் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், தீபத் திருவிழாவிற்காக பக்தர்களுக்கு போக்குவரத்து வசதி செய்துகொடுப்பது குறித்து போக்குவரத்து துறையினருடன் மாவட்ட கலெக்டர் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின்போது, தமிழகம் முழுவதும் பல்வேறு ஊர்களில் இருந்து திருவண்ணாமலைக்கு 4,764 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

மேலும், வட்டார போக்குவரத்து துறை மூலம் திருவண்ணாமலையில் 9 தற்காலிக பேருந்து நிலையங்களில் இருந்து தேவைக்கேற்ப பேருந்து வசதி செய்துகொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "மணியோசை கேட்டு"



அந்த கிராமத்துப் பள்ளிக்கூடம் இன்று விழாக் கோலம் பூண்டிருந்தது.

காரணம்?... அந்த கிராமப் பள்ளியில் படித்து, பின்னர் வெளியூர் சென்று மேல் படிப்பு முடித்து, ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதி அதிலும் சாதனை வெற்றியாளன் ஆகி இன்று அதே மாவட்டத்திற்கு கலெக்டராக நியமிக்கப்பட்டிருக்கும் ஆறுமுகம் இன்று இந்த பள்ளிக்கு வரப் போகிறார்.

பள்ளியின் சுற்றுச்சுவர்களும், பள்ளி கட்டிடமும் வெள்ளையடிக்கப்பட்டு பளீரென மின்னின. வாசலில் பெரிய வரவேற்புத் தோரணம் நின்றிருந்தது.

அவர் படித்த காலகட்டத்தில் அவருடன் படித்து, தொடர்ந்து அதே கிராமத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள அவரது வகுப்புத் தோழர்கள் அதிகாலையிலேயே வந்து தங்களது கலெக்டர் தோழனைக் காணக் காத்திருந்தனர்.

சரியாக 11.00 மணிக்கு "சர்....சர்"ரென்று வந்து நின்றன அரசாங்கக் கார்களும், காவல்துறை ஜீப்புகளும்.

நீளமான அந்த வெண்ணிறக் காரிலிருந்து ஆறுமுகம் இறங்க, காத்திருந்த தலைமை ஆசிரியரும் மற்ற டீச்சர்களும் அவசரமாய் சென்று அவரை வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

வரவேற்புரை, தலைமை உரை வாழ்த்துரைகளுக்கு பிறகு கலெக்டர் ஆறுமுகம் பேச வந்த போது கூட்டமே ஆர்ப்பரித்தது.

தனது உரையில், பள்ளியின் முன்னால் தலைமை ஆசிரியர்களைப் பற்றியும், தனது வகுப்பு ஆசிரியர்களைப் பற்றியும் மிகவும் உயர்வாக பேசினார். அவர்களது சுயநலமற்ற குணத்தையும், வியாபார நோக்கமின்றி ஒரு சேவையாய் அந்தச் ஆசிரியப் பணியை அவர்கள் புரிந்ததைப் பற்றியும் பேசியவர் இறுதியில்...

"அந்தக் காலகட்டத்தில் ஸ்கூல் பெல் அடிக்க ராஜையன் என்று ஒரு பியூன் இருந்தார்....அவர் பெல் அடிப்பதை வியந்து பார்ப்பேன்... வெறுமனே "தட...தட"வென்று கடமைக்காக அடிக்காமல் மிகவும் நாகரீகமாக, நாசுக்காக அடிப்பார். அந்த ஓசை கூட ஒரு இசை நயத்தோடிருக்கும்.... ஒரு நாள் அவரிடம் வலியச் சென்று கேட்டேன், "ஐயா நான் ஒரு தரம் பெல் அடிக்கிறேன்" என்று அவர் மறுத்து விட்டார். அந்த அந்த ஆசை இன்னும் என் அடி மனதில் நிராசையாக இருந்து கொண்டுதான் இருக்கின்றது"என்றார் கலெக்டர் ஆறுமுகம்.

அப்போது கூட்டத்தின் இறுதியிலிருந்து யாரோ கையைத் தூக்க, ஆறுமுகம் கூர்ந்து பார்த்தார்.

தாடி மீசைக்குள் ஒளிந்திருந்த அந்த முகத்தை அடையாளம் கண்டு கொண்டவர், "ராஜையா... வாங்க வாங்க!" என்று அழைத்தார்.

மொத்தக் கூட்டமும் சென்று அந்த ராஜய்யாவை அழைத்து வந்து, மேடையேற்ற, அவரைத் தன் அருகில் நிற்க வைத்த கலெக்டர் ஆறுமுகம்,

"ஐயா என்னோட பல வருட ஆசையை இன்னைக்காவது நிறைவேற்றி வைப்பீர்களா?" சிரித்தபடி கேட்டார். ராஜய்யா தன் இடுப்பிலிருந்து அந்த இரும்புத் துண்டை எடுத்துத் தர, அதை வாங்கிக் கொண்டு அந்த மணியை நோக்கி வேகமாய் சென்ற கலெக்டர் ஆறுமுகம் தன் ஆசை தீர மணியடித்து மகிழ்ந்தார்.

அதன் ஓசை ஊக்கமூட்டும் ஒலியாய் காற்றில் பரவி மாணவ, மாணவியரின் காதுகளில் நுழைந்தது. மொத்த கூட்டம் அதை ரசித்துக் கை தட்டிய போது, மீண்டும் மேடையேறித் தன் பேச்சைத் தொடர்ந்த கலெக்டர்,

"எல்லோரும் இந்த மணியைச் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்... இதை அடிக்க... நான் ஐ.ஏ.எஸ் படித்துக் கலெக்டர் ஆகி வர வேண்டியுள்ளது என்றால்... அது எப்பேர்ப்பட்ட மணி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்" என்றார் நகைச்சுவையாய்.

கூட்டத்தின் ஆரவாரம் விண்ணை எட்டியது.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

## பார்வதி



ஒத்தையடிப் பாதைதான் பார்வதி வீட்டுக்குப் போற வழி. தெருவெல்லாம் குப்பையாக இருக்கும். பார்வதி வீட்டுக்கு முன்னாடி கட்டி முடிக்காத மாரியம்மன் கோயில். வரிசையா வீடு. திண்னை வச்சி கட்டின பனை ஓலையில கூரை வேய்ந்த வீடுங்க. ஆங்காங்கே ஆடு மாடு கட்டி இருக்கும். ஆட்டு புழுக்கை நாத்தம் மூக்க பொத்திக்க வைக்கிறா மாதிரியா இருக்கும். இந்த வழியாதான் தினசரி வயக்காட்டுக்கு போவேன். பார்வதி திண்ணையில உட்கார்ந்திருக்கும்போது பார்த்திருக்கன். அவங்க அம்மா கூட ஏதாவது பேசிட்டே இருப்பா.

வலது கண்ணு கொஞ்சம் சாயல். நடுத்தரமான ஒயரம். கருத்த தல முடி. சிவப்பான நிறம். சத்தமா பேசுவா. ஆனா மரியாதையா "எப்படிப்பா இருக்க... கழனிய கொஞ்சம் பாத்துக்க. இதோ நான் வந்திடுறன்"ன்னு என்கிட்ட பேசுவா

குப்பையைக் கிளறி எதையோ கொத்தி தின்னுகிட்டிருந்த கோழி மேல, கீழிருந்த கல்ல எடுத்துப் போட்டு "அப்படி போயேன்....இங்கயே... சீச்சுகிட்டு இருக்க"ன்னு கோழியைத் திட்டினாள் பார்வதி.

வீட்ல கட்டுத்தறியிலிருந்து ரெண்டு மாட்டையும், பட்டியிலிருந்து பத்து ஆட்டையும் ஓட்டிகிட்டு கழனிய நோக்கி நடந்தா.

பார்வதிக்கு 25 வயசு இருக்கும். படிக்கல. பருவமடைஞ்சவ மனசுக்குள்ள ஏதோ ஒன்னு இருக்கும் இல்லையா, அந்த ஏதோ இன்னு பார்வதிக்குள்ளயும் இருந்திருக்கு.

விளக்கு வைக்க நேரத்துல, வழக்கமா பார்வதி எங்க வீட்டு வழியாத்தான் கடைக்குப் போவா.

அந்த நேரத்துல, அவ நடந்து போகுற காலடி சத்தம் பூமி அதிர மாதிரி இருக்கும், அவ குரல் அருமை இருக்கும், அவ முகம் கலகலப்பா இருக்கும். அந்த இருட்டுல யாரோ ஒருத்தவங்கக்கூட பேசுற மாதிரி இருக்கும். அதிக நேரம் அவளோட பேச்சுக்குரல் நீடிக்காது. வானத்துல வந்துபோர மின்னல் மாதிரி அந்தச் சந்திப்பு நடக்கும். அவ தினமும் சந்திச்சு யாரோடு பேசுரா என்கிறதப் பத்தி அக்கம் பக்கத்துக்கு நல்லாவே தெரியும். ஆனா யாருன்னு எனக்குச் சரியா அப்பத் தெரியல.

திடீர்ன்னு ஒரு நாள் பார்வதியோட வருகை இல்லாம போச்சு.

இருட்டான சந்துல, கலகலப்பான குரல், அவளோட காலடி ஓச எதுவுமே இல்ல. அமைதியா இருந்தது.

காலம் கடந்து வழக்கமா அதே பாதையில இப்ப நான் நடக்குறன். பார்வதி அவ வீட்டுத் திண்னையில உட்கார்ந்து இருக்கிற மாதிரி எனக்குத் தோணுது. அவளுடைய தோற்றம் அவளுடைய கண் சாயல், அவளுடைய கருத்தை முடி, அவளுடைய நடை. அடிக்கடி எங்க வீட்டுச் சந்து பக்கமா வந்து போற அந்தக் கலகலப்பான பேச்சுச் சிரிப்பு எல்லாமே என் கண்ணுக்குள் இன்னும் களையாம இருக்கு.

என்ன நடந்தது பார்வதிக்குன்னு விசாரிச்சப்ப, அப்பதான் தெரிஞ்சுது உண்மை. பார்வதிக்கு கதிர்மேல ஒரு காதல் இருந்திருக்குன்னு. அப்போ அவளோட ஆச நிறைவேறாமா போனதுக்கு என்ன காரணமுன்னு தெரியல. அனா இன்னைக்கு,

அத யெல்லாத்தையும் உடைச்சிட்டு பார்வதி வாழ்ந்த ஊறுக்குள்ள ஏதோ ஒரு வீட்டுக்குள்ள வாழ்ந்துகிட்டிருக்கிற கலைவாணிக்கு எப்படி வந்தது தைரியமுன்னு யோசிச்சுகிட்டிருந்தபோது, 'அண்ணா...எப்படியிருக்க.. வா'ண்ணா,"என அன்போடு கூப்பிட்ட தங்கையைத் திரும்பிப் பார்த்தேன். அவளுக்குப் பக்கத்தில் இரண்டு ஆம்பள பசங்க நின்னுகிட்டிருந்தாங்க " என் பசங்கண்ணா..." எனச் சிரித்துக்கொண்டே " இதான் மாமா... வணக்கம் சொல்லு "ன்னு தன் இரு ஆம்பள பசங்களிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தபோது, என் ஒட்டு மொத்த நினைவுக்குள் நீங்க மறந்த பார்வதி மறைந்துபோனாள் .... தங்கை கலைவாணியே நிலைத்து நிற்கிறாள்.

பார்வதியோட ஆசை நிறைவேறிந்தா, எனக்கு உறவா இருந்திருப்பாங்க. அந்த ஆசை நிறைவேறாமல் போனதுனால, பார்வதி மனசு என்ன பாடுபட்டிருக்குன்னு வெளியில தெரியாமலே போயிடுச்சு, கலைவாணியின் கண்னுமூலமா பார்வதியோட மகிழ்ச்சி இப்படிதான் இருந்திருக்குன்னு நினைச்சுகிட்டு, அவமேல காதல் வயப்பட்ட கதிர் சித்தப்பாவ நினைச்சுகிட்டு கடந்துபோனன்.



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

# திருவிளையாடல் புராணம் 7



**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

சிவகணங்களுள் ஒருவரான குண்டோதரன் என்னும் பூதத்திற்கு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணத்தின்போது மீனாட்சியம்மமை உணவளித்ததைப் பற்றி கூறுகிறது.
தன்னுடைய செல்வ செருக்கினால் மீனாட்சிக்கு உண்டான கர்வத்தினை அடக்க சுந்தரேஸ்வரர் இத்திருவிளையாடலை நிகழ்த்தியதாகவும் கருதப்படுகிறது.
இப்படலம் திருவிளையாடல் புராணத்தின் மதுரைக் காண்டத்தின் ஏழாவது படலமாக அமைந்துள்ளது. இதில் திருமணத்திற்காக மீனாட்சி வீட்டினர் தயார் செய்த விருந்து, குண்டோதரரின் அகோரப் பசி ஆகியவற்றை இப்படலத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணத்திற்கு வந்திருந்த பதஞ்சலி வியாக்கிரபாதர் ஆகியோரின் வேண்டுதல்களுக்கு இணங்க இறைவனார் வெள்ளியம்பலத்தில் திருநடனத்தினை நிகழ்த்தினார்.
திருமண நிகழ்விற்கு வந்திருந்த அனைவரும் வெள்ளியம்பலத்தில் நிகழ்ந்த இறைவனாரின் திருநடனத்தினைக் கண்டு களித்தனர்.
பின்னர் அனைவரும் அறுசுவையுடன் கூடிய திருமண விருந்தினை உண்டனர்.
திருமண விருந்தினை உண்டவர்களுக்கு பாக்கு, தாம்பூலத்துடன் பரிசுப் பொருட்களையும் தடாதகை பிராட்டியார் வழங்கினார்.
அப்போது சமையல்காரர்கள் தடாதகையிடம் விரைந்து சென்று "அம்மையே திருமண விருந்திற்கு தயார் செய்த உணவு வகைகளில் ஆயிரத்தில் ஒரு பங்கு உணவுகூட காலியாகவில்லை.
இப்போது என்ன செய்வது?" என்று கேட்டனர்.
இதனைக் கேட்ட தடாதகைக்கு 'இத்தனை பேர் உணவு உண்ட பின்னும் திருமண உணவு மீதி இருக்கிறதா' என்ற ஆச்சர்ய எண்ணத்தோடு கர்வமும் தொற்றிக் கொண்டது.
சமையல்காரர்கள் கூறியதைக் கேட்ட தடாதகை சுந்தரேசரிடம் சென்று "ஐயனே, திருமணத்தின் பொருட்டு முப்பத்து முக்கோடி தேவர்களும் இங்கு வந்தனர்.
அவர்களுக்காக அறுசுவையுடன் கூடிய திருமண விருந்து தயார் செய்யப்பட்டது. அவ்வாறு தயார் செய்யப்பட்ட திருமண விருந்து உணவினை எல்லோரும் உண்டும் ஆயிரத்தில் ஒரு பங்கு உணவுகூட காலியாகவில்லை.
வேறு யாரேனும் தங்களைச் சார்ந்தவர்கள் உணவு அருந்தாமல் இருந்தால் அவர்களை உணவு உண்ண அனுப்பி வையுங்கள்" என்று பெருமையும் கர்வமும் பொங்க கூறசென்றான்.



தடாதகை கர்வத்துடன் கூறியதைக் கேட்ட சிவபெருமான் ஒரு திருவிளையாடலை நிகழ்த்த எண்ணினார். அவர் தடாதகையை நோக்கி புன்னகையுடன் "உலகில் பெறுதற்கரிய செல்வங்களை எல்லாம் நீ பெற்று உள்ளாய்." என்றார்.
கற்பக விருட்சமும் உன்னுடைய செல்வ செழிப்பிற்கு முன்பு தோற்றுவிடும். உன்னுடைய செல்வத்தின் அளவினை அறிவிக்கவே இவ்வளவு உணவினை தயார் செய்ய சொல்லியுள்ளாய்.
ஆனாலும் அறுசுவை திருமண விருந்தினை உண்ண, பசியால் களைப்படைந்தோர் யாரும் எம்மைச் சார்ந்தவர்கள் இல்லை என்பதே உண்மை. நான் இப்போது என்ன செய்வது?" என்று கேட்டார்.
பின் பக்கத்தில் நின்றிருந்த குண்டோதரனுக்கு வடவைத்தீ என்னும் பசிநோயினை உண்டாக்கினார். பசிநோய் வந்ததும் குண்டோதரன் பசியால் தளர்ந்த உடலுடன் "ஐயனே எனக்கு பசிக்கிறது" என்றான்.
இதனைக் கேட்ட இறைவனார் "தடாதகை, எனது குடையினைத் தாங்கிவரும் இக்குறுங்கால் பூதத்திற்கு ஒரு பிடி சோறு கொடுப்பாய்" என்று கூறினார்.
இதனைக் கேட்ட மீனாட்சி "ஒரு பிடி சோறு என்ன, வயிறு நிறைய திருமண விருந்தினை குண்டோதரன் உண்ணட்டும்." என்று கர்வத்துடன் கூறினார்.

குண்டோதரனும் பசியால் நலிந்து திருமண விருந்து நடைபெறும் இடத்தினை நோக்கிச் சென்றான்.

திருமண விருந்து நடைபெறும் இடத்தினை அடைந்த குண்டோதரன் அங்கிருந்த சமைத்த அறுசுவை உணவுகளை எல்லாம் ஒரு நொடியில் விழுங்கினான்.
பின் அங்கிருந்த காய்கறிகள், பழங்கள், கரும்பு, தேங்காய், அரிசி, நவதானியங்கள், சர்க்கரை என கண்ணில் பட்ட எல்லா உணவுப்பொருட்களையும் உண்டான்.
அப்போதும் அவனின் பசிநோய் தீரவில்லை. "இன்னும் ஏதாவது உண்ணத் தாருங்கள்" என்று அங்கிருந்த சமையல்காரர்களிடம் கேட்டான்.
அதனைக் கண்ட சமையல்காரர்கள் தடாதகையிடம் குண்டோதரன் உணவுகள் அனைத்தையும் விழுங்கியதையும், இன்னும் உண்ண உணவு கேட்டதையும் பற்றிக் கூறினர்.
இதனைக் கேட்ட தடாதகை சுந்தரேசரிடம் சென்றார்.
சுந்தரேசர் தடாதகையிடம் "குண்டோதரன் சாப்பிட்டபின் உணவு வகைகள் ஏதேனும் மீதமிருந்தால் என்னுடைய வேறு சில பூதகணங்களை உணவு உண்ண அனுப்பி உன்னை மகிழ்விக்கிறேன்" என்று கூறினார்.
இதனைக் கேட்ட மீனாட்சி "ஐயனே. நான் என்னுடைய செல்வத்தால் உலகத்தினர் அனைவருக்கும் உணவளிக்க முடியும் என்று கர்வம் கொண்டிருந்தேன்.
ஆனால் தாங்கள் ஒரு பிடி சோறு வழங்கச் சொன்ன குண்டோதரனின் பசியை என்னால் போக்க இயலவில்லை. என்னை மன்னியுங்கள்" என்று கூறி சரணடைந்தார்.

வெள்ளியம்பலத்தினுள் நடனமாடிய பெருமானே, திருமண விருந்திற்காக தயார் செய்யப்பட்ட மலை போன்ற உணவு வகைகளை உண்ட பின்னும் என்னுடைய பசி அடங்கவில்லை. நான் என்ன செய்வது?" என்று கேட்டு பசிநோயால் கதறி அழுதான்.
குண்டோதரனின் பசியை நீக்க சுந்தரர் அன்னப்பூரணியை அழைத்தார். குண்டோதரனின் பசியடங்கியது, ஆனால் நீர் நிலைகள் அனைத்திலும் உள்ள நீரைக் குடித்தாலும், தாகம் மட்டும் அடங்கவில்லை.
இதனால் சிவபெருமான் தனது ஜடாமுடியில் இருந்த கங்கையை குண்டோதரனின் தாகம் தீர்க்குமாறு கூறினார். மதுரையில் நதியாக ஓடிய கங்கையை வைகை என்று அழைக்கின்றனர். இதுபற்றி அன்னக் குழியும் வைகையும் அழைத்த படலம் என்பதில் செய்தியுள்ளது.

ஒருவர் எப்போதும் தன் செல்வத்தை எண்ணிக் கர்வம் கொள்ளக் கூடாது என்பதே குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம் கூறும் கருத்து ஆகும்.

(தொடரும்)

# திடீரென மின்சார தொடர் வண்டியில் எலக்ட்ரிக் வயர் அறுந்து விழுந்தால் என்னவாகும்?

பாதுகாப்பு என்பது எல்லாவித விஞ்ஞான கண்டுபிடிப்பில் முதலிடம்.

நம் வீட்டின் மின்சார அழுத்தம் 230வோல்ட். எலக்ட்ரிக் ரயில் போக்குவரத்தில் 25,000 வோல்ட்.

நேரடியாக வேண்டுமென்றே ஒரு மனிதன், மிருகம் தரையில், தண்டவாளத்தில் நின்று கொண்டு தொட்டால் எரிந்து கட்டையாகி விடுவார்கள்...

உயரமான வாகனங்கள், கம்பியை தொட்டாலும் தீப்பற்றிவிடும். (அலங்கார சாமி ஊர்வலங்கள் , தேர், லாரி இந்த மாதிரி நிறைய விபத்துக்கள் ஆகி இருக்கின்றன.)

ஆனால் பயணிகளுடன் செல்லும் ரயில் ஒரு வேளை கம்பி அறுந்து கீழே தொங்கி ரயிலை தொட்டு விட்டால் , ஒன்றும் ஆகாது.

சப்ளை செய்கிற சப் ஸ்டேசனின் பிரேக்கர் சில மில்லி செகண்டில் டிரிப் ஆகி விடும். கரண்ட் கட்டாகி விடும். பைலட் அல்லது ரயில்வே ஊழியர் (போல்) கம்பம் நம்பரை தெரிவிப்பார்.

இப்போது ரயில்வே எலக்ட்ரிக் கம்பிகளை பாருங்கள்.

சாதாரண தெருக்களில் கம்பிகளை கட்டுவது மாதிரி இருக்காது.

இடையே இடையே தாங்கி பிடிக்க கரண்ட் சப்ளை செய்ய லூப் வயர்கள் இருக்கும்.

மேலே ஒரு கம்பியில் தான் சப்ளை இருக்கும். சிறிய வயர்களின் மூலமாக கீழே ரயிலின் பேன்டோகிராப்



உரசிக்கோண்டு போகும்.

கீழே உள்ள கம்பி வயரை இழுத்து ஒரே உயரம் இருக்குமாறு டென்சன் பண்ணியிருப்பார்கள். மேல் உள்ள கம்பி லூசாகவே இருக்கும். கம்பி அறுந்து விழுந்தாலும் தரையை தொடாது.

ரயில் ஓடும்போது கம்பி கட்டாகி ரயிலை தொட்டு , சப்ளை டிரிப்பாகி கட்டாகி விட்டது. 1000மக்கள் உள்ளே இருக்கிறார்கள். ஷாக் அடிக்குமே ?

ஷாக் அடிக்காது. யாருக்குமே அந்த உணர்வுகள் கூட தெரியாது. எப்படி?

FARADAY CAGE:

ஃபேரடே கேஜ் எபெக்ட் என்று ஸ்கூலில் 10,11,12 வகுப்புகளில் PHYSICS ல் படித்திருப்பீர்கள். கரண்ட் முழுவதும் ரயில் பெட்டி(கேஜ்) வழியாக சென்றுவிடும் மனிதர்கள் ஒரே வோல்டேஜில் (POTENTIAL, AND POTENTIAL DIFFERENCE) 00லெவலில் இருப்பார்கள்.

அதனால் ஷாக் அடிக்காது. கரண்ட் பாசால் தான் ஷாக் அடிக்கும். (உதாரணத்துக்கு கரண்ட் கம்பியின் மேல் குருவி உட்காருவது போல்).

ஃபேரடே கேஜ் எபக்ட் என்பது சரியான விளக்கம்.

இதே போல்தான் ஏரோப்பிளேன்களும் மின்னல்களிலிருந்து பாதுகாக்கப் படுகின்றன.

ஃகிளவுட் டிஸ்சார்ஜ் என்பது மின்னல்.

இது பல லட்சம் வோல்ட்டை, (மின்அழுத்தம்) கொண்டது.

இது மேகங்களுக்கு இடையே , வானத்தில் மின்னல் உருவாகும்.

மேகத்துக்கும் தரைக்கும் இடையேயும் மின்னல் உருவாகும்.

ஏரோப்பளேன் மின்னல் வழியாக பறக்கும் போது கரண்டை பைபாஸ் செய்துவிடும்.

உள்ளே இருக்கும் பயணிகளுக்கு ஒன்றும் தெரியாது. இது அபூர்வ நிகழ்வு. ...



-முத்து ஆனந்த்
வேலூர் - 632002

# தினம் ஒரு தலைவர்கள் — சியாமா பிரசாத் முகர்ஜி வரலாறு

சியாமா பிரசாத் முகர்ஜி (6 சூலை 1901 23 சூன் 1953), இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தைச் சார்ந்த கல்வியாளர், வழக்கறிஞர் மற்றும் அரசியல்வாதி ஆவர். சுதந்திர இந்தியாவின் முதல் நடுவண் அரசில் வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சராக, ஜவகர்லால் நேருவின் அமைச்சரவையில் 15 ஆகத்து 1947 முதல் 6 ஏப்ரல் 1950 வரை இருந்தவர். ஜவகர்லால் நேருவுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால், காங்கிரசு கட்சியிலிருந்து வெளியேறி, 1951ஆம் ஆண்டில் பாரதிய ஜனசங்கம் கட்சியை நிறுவினார். பின் இக்கட்சி பாரதிய ஜனதா கட்சி என உருமாறியது.

இளமை வாழ்க்கை

சியாமா பிரசாத் முகர்ஜி மேற்கு வங்காள மாநிலத்தின் தலைநகரான கல்கத்தாவில், உயர்நீதிமன்ற நீதியரசரும், கொல்கத்தா பல்கலைக் கழக துணைவேந்தருமான சர் அசுதோசு முகர்சி - ஜோகமாயா தம்பதியருக்கு 6 சூலை 1901இல் பிறந்தார். மனைவி சுதா தேவி, இளமையில் மறைந்தபின், இறுதி வரை இரண்டாம் திருமணம் செய்து கொள்ளவில்லை.

முகர்ஜி கல்கத்தா பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியிலும், வங்க மொழியிலும் பட்டம் பெற்றவர். 1926இல் இங்கிலாந்து சென்று சட்டம் பயின்று, 1927இல் பாரிஸ்டர் ஆனார். தனது இளம் வயதில் (33 வயதில்) கல்கத்தா பல்கலைக்கழகத்தில் 1934 முதல் 1938 முடிய துணை வேந்தராக இருந்தவர்.

முகர்ஜி தனது மனைவி சுதா தேவியுடன் 11 ஆண்டுகள் குடும்பம் நடத்தி, ஐந்து குழந்தைகளைப் பெற்றவர். பின்னர் மனைவி சுதா தேவி விஷக் காய்ச்சலால் இறந்தார்.


அரசியல் வாழ்க்கை

சியாமா பிரசாத் முகர்ஜி 1929ஆம் ஆண்டில் மேற்கு வங்காள மாகாண சட்ட இய்மேலவைக்கு கல்கத்தா பல்கலைக்கழகம் சார்பில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, மேற்கு வங்க மாகாண சட்டமன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வென்றார். 1941 1942 ஆண்டில் அம்மாநில நிதி அமைச்சராக பணி செய்தார்.

1937 1941



காலகட்டத்தில் விவசாய-மக்கள் கட்சி மற்றும், முஸ்லிம் லீக் கட்சிகளின் கூட்டணி அரசின் போது, எதிர்கட்சித் தலைவரானார். பின்னர் இந்து மகாசபையில் இணைது, இந்து மக்களுக்காக குரல் கொடுத்தார். 1944ஆம் ஆண்டில் இந்து மகாசபையின் தலைவரானார். இந்திய விடுதலைக்குப் பின்



ஜவகர்லால் தலைமையிலான இடைக்கால இந்திய நடுவண் அமைச்சரவையில் பங்கேற்ற அமைச்சர்கள்; (இடமிருந்து வலம் ) அம்பேத்கர், ரபி அகமது கித்வாய், சர்தார் பல்தேவ் சிங், மௌலானா அபுல் கலாம் ஆசாத், ஜவகர்லால் நேரு. இராஜேந்திர பிரசாத், வல்லபாய் படேல், ஜான் மத்தாய், ஜெகசீவன்ராம், அம்ருத் கௌர், சியாமா பிரசாத் முகர்ஜி, (நிற்பவர்கள் - இடமிருந்து வலம்) குர்சேத் லால், ஆர். ஆர். திவாகர், மோகன்லால், என். கோபால்சாமி அய்யங்கார், என். வி. காட்கில், கே. சி. நியோகி, ஜெய்ராம் தாஸ் தௌலத்ராம், கே. சந்தானம், சத்திய நாராயணன் சின்கா மற்றும் பி. வி. கேஸ்கர்.
பிரதம மந்திரி ஜவகர்லால் நேருவின் தலைமையிலான, விடுதலை இந்தியாவின் இடைக்கால நடுவண் அரசில், சியாமா பிரசாத் முகர்ஜி வணிகம் மற்றும் தொழில் அமைச்சரானார்.

1950ஆம் ஆண்டில்,லியாகத்-நேரு ஒப்பந்தம் தொடர்பான சர்ச்சை காரணமாக, முகர்ஜி 6 ஏப்ரல் 1950ஆம் ஆண்டில் நேருவின் அமைச்சரவையிலிருந்து விலகியதால், முகர்ஜி மேற்கு வங்க மக்களின் நாயகன் ஆனார்.

ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கத்தின் தலைவர் எம். எஸ். கோல்வால்கருடன் கலந்தாய்வு செய்த பின், 21 அக்டோபர் 1951ஆம் ஆண்டில் பாரதிய ஜனசங்கம் கட்சியை தில்லியில் தோற்றுவித்து, அக்கட்சியின் முதல் அகில இந்தியத் தலைவரானார். 1952ஆம் ஆண்டில் நடந்த முதல் இந்திய நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனசங்கம் கட்சி மூன்று தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதில் ஒரு தொகுதியில் முகர்ஜி வெற்றி பெற்றவர்.

ஜம்மு காஷ்மீர் மாநில சிறப்புத் தகுதி குறித்து முகர்ஜியின் கருத்து

முதன்மைக் கட்டுரை: இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 370

ஜம்மு காஷ்மீர் மாநில அரசிற்கு தனிக் கொடி, தனிச் சின்னம், தனி பிரதம மந்திரி இருப்பதை முகர்ஜி கடுமையாக எதிர்த்தார். ஒரு நாட்டில் இரண்டு அரசியல் அமைப்பு சட்டமும், தேசிய சின்னமும் இருக்க இயலாது என வாதிட்டார். மேலும் ஜம்மு காஷ்மீர் மாநில பிரதமரின் அனுமதியின்றி, இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவரும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குள் செல்ல இயலாது என்ற விதியை முகர்ஜி கடுமையாக எதிர்த்தார். ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு தனிக் கொடி, தனி பிரதம மந்திரி போன்ற சிறப்பு தகுதிகள் வழங்கும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 370ஐ நீக்கக் கோரி, முகர்ஜி தலைமையிலான பாரதிய ஜனசங்கம், இந்து மகாசபை மற்றும் ராம ராஜ்ஜிய சபையுடன் இணைந்து குரல் கொடுத்து, சத்தியாகிரகப் போராட்டங்களில் ஈடுபட்டது.

காஷ்மீர் அரசின் அனுமதி அடையாள அட்டையின்றி காஷ்மீரில் உள்ள லக்கன்பூர் என்ற ஊரில் நுழைந்த சியாமா பிரசாத் முகர்ஜியை, ஜம்மு காஷ்மீர் மாநில காவல் துறையினரால், 11 மே 1953இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 23 சூன் 1953இல் விஷக்காய்ச்சலால் மரணமடைந்தார் என காவல் துறை அறிவித்தது.

காவல் துறையினரின் காவலில் இருந்த சியாமா பிரசாத் முகர்ஜியின் மரண இரகசியம் குறித்து விசாரிக்க, தனி விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என்ற முகர்ஜியின் தாயாரின் கோரிக்கையை பிரதம அமைச்சர் ஜவகர்லால் நேரு ஏற்கவில்லை. இதனால் இன்று வரை முகர்ஜியின் மரண சர்ச்சை தீரவில்லை.

சியாமா பிரசாத் முகர்ஜியின் கைது, ஜவகர்லால் நேருவின் சதித் திட்டம் என அடல் பிகாரி வாஜ்பாய் 2004இல் குறிப்பிட்டுள்ளார்.

# லோகேஷ் கனகராஜ் ஹீரோவாக அறிமுகமாகும் 'டிசி'



இயக்குநர் லோகேஷ் கனகராஜ் ஹீரோவாக அறிமுகம் ஆகும் 'டிசி' படத்தின் அறிவிப்பு டீசர் வெளியாகியுள்ளது.

அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் உருவாகி வரும் படத்தில் நாயகனாக நடித்து வருகிறார் லோகேஷ் கனகராஜ். இதன் படப்பிடிப்பு படப்பூஜையுடன் அண்மையில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இப்படத்தினை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. இதில் லோகேஷ் கனகராஜ் உடன் இந்தி நடிகை வாமிகா நடித்து வருகிறார். அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை தற்போது படமாக்கி வருகிறது படக்குழு.

இந்த நிலையில் இப்படத்தின் அறிவிப்பு டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. இதில் ரத்தம் தோய்ந்த முகத்துடன் லோகேஷ் காணப்படுகிறது. வாமிகாவும் இதில் இடம்பெற்றுள்ளார். தேவதாஸ் என்ற கதாபாத்திரத்தில் லோகேஷும், சந்திரா என்ற கதாபாத்திரத்தில் வாமிகாவும் நடிக்கின்றனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அருண் மாதேஸ்வரன் படத்தினை முடித்துவிட்டு, மீண்டும் இயக்கத்தில் கவனம் செலுத்தவுள்ளார் லோகேஷ் கனகராஜ். ரஜினி கமல் இணையும் படத்தினை இயக்கவில்லை என்பதால், லோகேஷ் கனகராஜின் அடுத்த படத்தின் நாயகன் யார் என்பது இன்னும் முடிவாகவில்லை.

# மாரி செல்வராஜை ஆச்சரியப்படுத்திய சிம்பு..





மாரி செல்வராஜ் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடிப்பில் வெளியான படம் 'பைசன்'. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

மேலும் வசூல் குவித்து வருகிறது.படம் வெளியான 10 நாட்களில் உலகளவில் ரூ.55 கோடி வசூலித்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

இதனிடையே, இப்படத்தை பார்த்த பிரபலங்கள் பலரும் படக்குழுவினரை பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில் நேர்காணல் ஒன்றில் பேசிய இயக்குநர் மாரி செல்வராஜ், "சிம்பு சார் என்னை தொலைபேசியில் அழைத்தார். அவர் சொன்ன விஷயம் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. 'நாம் தொடர்ந்து வேலை செய்ய செய்ய நம்மை அறியாமலேயே அற்புதத்தை நிகழ்த்தக்கூடிய ஆளாக மாறிவிடுவோம்.

அதன்பின், நாம் என்ன செய்தாலும் அது அற்புதத்தை நோக்கித்தான் நகரும். பைசனில் அந்த அற்புதம் நிகழ்ந்திருக்கிறது' என்று கூறினார் என மாரி செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

# 'பொத்தி பொத்தி உன்னை வச்சி..' கும்கி 2 படத்தின் முதல் பாடல்!




பிரபுசாலமன் இயக்கத்தில் விக்ரம் பிரபு, லட்சுமி மேனன், தம்பி ராமையா உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் 'கும்கி'. விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

மேலும், இந்தப் படத்துக்கு ஒளிப்பதிவு செய்த சுகுமாருக்கும் நல்ல பெயர் கிடைத்தது. இந்தப் படத்தைத் தொடர்ந்து பல்வேறு பெரிய படங்களுக்கு ஒளிப்பதிவாளராக பணிபுரிந்து வந்தார்.

தொடர்ந்து, பிரபு சாலமன்- சுகுமார் கூட்டணி மீண்டும் இணைந்து 'கும்கி 2' படத்தை உருவாக்கி வருகின்றனர். இந்தப் படம் முழுக்க காடுகளுக்குள்ளே படமாக்கப்பட்டுள்ளது.

'கும்கி 2' படத்திற்கு நிவாஸ் கே.பிரசன்னா இசையமைத்துள்ளார். படத்தில் மதி மற்றும் அர்ஜுன் தாஸ் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

கும்கி 2 படத்தின் டீசர் அண்மையில் நடிகர் விஜய் சேதுபதியால் வெளியிடப்பட்டது. இந்நிலையில் படத்தின் முதல் பாடலான 'பொத்தி பொத்தி உன்னை வச்சி' பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது.


இப்பாடலை மோகன் ராஜ் வரிகளில் நிவாஸ் கே.பிரசன்னா இசையமைத்து பாடியுள்ளார்.

கும்கி 2 படம் வரும் நவம்பர் 14ம் தேதி வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.



நடிகை பிரக்யா நக்ராவின் கவர்ச்சி போட்டோஷூட். செம ஹாட் லுக்கில் அவரது போட்டோஷூட் இதோ.

# 'மஹாகாளி' தோற்றத்தில் மிரட்டிய பூமி ஷெட்டி



தேஜா சஜ்ஜா நடித்து வெற்றி பெற்ற 'ஹனுமான்' திரைப்படத்தின் மூலம் கவனம் பெற்றவர் இயக்குநர் பிரசாந்த் வர்மா.

அவர் தனது 'பிரசாந்த் வர்மா சினிமாட்டிக் யுனிவர்ஸ்' மூலம் 5 படங்களை உருவாக்க இருப்பதாகக் கூறியிருந்தார். அதன்படி ரிஷப் ஷெட்டி நடிப்பில் 'ஜெய் ஹனுமான்' என்றப் படத்தை இயக்கி வருகிறார். மேலும், மஹாகாளி, சிம்பா, ஆதிரா ஆகிய படங்களையும் அவர் உருவாக்கி வருகிறார்.


இந்நிலையில் அவருடைய யுனிவர்ஸின் 3-வது படமான 'மஹாகாளி' படத்தின் முதல் தோற்றம் வெளியாகி உள்ளது. இந்தப் படத்துக்கான கதையை பிரசாந்த் வர்மா எழுதியுள்ளார். பூஜா அபர்ணா கொல்லூரு இயக்குகிறார். ஆர்கே துக்கல், ரிவாஸ் ரமேஷ் துக்கல் ஆகியோரின் ஆதரவுடன், ஆர்கேடி ஸ்டூடியோஸ் தயாரிக்கிறது.

இதில் மஹாகாளியாக பூமி ஷெட்டி நடிக்கிறார். வித்தியாசமான அவர் தோற்றம் ரசிகர்களைக் கவர்ந்துள்ளது. இதையடுத்து பூமி ஷெட்டி சமூக வலைதளங்களில் டிரெண்டானார். கன்னட நடிகையான இவர், 'இக்கட்', தெலுங்கில் விஜய் தேவரகொண்டாவின் கிங்டம் உள்பட சில படங்களில் நடித்துள்ளார்.

'மஹாகாளி' படத்தின் படப்பிடிப்பு 50 சதவீதம் முடிவடைந்துள்ள நிலையில் அடுத்தக்கட்ட படப்பிடிப்பு, ஐதராபாத்தில் பிரம்மாண்ட செட்டில் நடைபெற்று வருகிறது என்று படக்குழு தெரிவித்துள்ளது.

# தடை அதை உதை

## திரை விமர்சனம்




சினிமாவில் சாதிக்க துடிக்கும் மூன்று இளைஞர்கள் எப்படியாவது படம் எடுத்திட வேண்டும் என்கிற லட்சியப் பயணத்தில் இருக்கிறார்கள்.

கொத்தடிமை வாழ்க்கையில் இருந்து தனது அடுத்த தலைமுறையை மீட்டெடுக்க போராடும் நபர், அதில் வெற்றி பெற்றாரா? இல்லையா? என்ற உண்மை சம்பவத்தை இளைஞர்கள் குறும்படமாக எடுக்கின்றனர்.

இந்த குறும்படம் மூலம் தங்களுக்கு திரைப்படம் இயக்கும் வாய்ப்பு கிடக்கும் என்று எண்ணுகிறார்கள். ஆனால், படம் தயாரிப்பாளர்கள் ஏற்கவில்லை. இதனால், தங்களது கனவு சிதைந்துவிட்டதாக நினைக்கிறார்கள்.

அப்போது சோகத்தில் இருக்கும் நண்பர்கள் மூன்று பேரும் ஒருவரிடம் காரில் லிப்ட் கேட்டு செல்கின்றனர். அந்த கார் ஓட்டுனரிடம் குறும்படத்தின் கதையை சொல்கின்றனர்.

முதல் பாதி இப்படி இருக்க.. இரண்டாம் பாதியில் மற்றொரு கதை வருகிறது. முதல் கதையில் வந்த கதாப்பாத்திரங்கள் வேறு மாதிரி சித்தரிக்கப்படுகின்றன. இதில், அங்காடி தெரு மகேஷ் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். சமூக வலைத்தளத்தின் மோகத்தால் மகேஷின் சகோதரி தற்கொலை செய்துக் கொள்கிறார். இந்த தற்கொலை சம்பவத்திற்கும் முதல் பாதியின் கதைக்கும் இணையும் இடத்தில் சில திருப்பங்கள் நடக்கின்றன.

இறுதியில், இளைஞர்கள் சினிமாவில் சாதித்தார்களா? பெண்ணின் தற்கொலைக்கு யார் காரணம்? என்பதே மீதிக்கதை.

**நடிகர்கள்**

அங்காடித்தெரு மகேஷ் நடிப்பு கவனிக்க வைக்கிறது. குணா பாபு, கே.எம்.பாரிவள்ளல், திருவாரூர் கணேஷ், மஹாதீர் முகமது உள்ளிட்டோரும் கொடுத்த கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

**இயக்கம்**

இயக்குனர் அறிவழகன் முருகேசன் கதை, திரைக்கதை, வசனம், எழுதி இயக்கியதோடு, படத்தை தயாரிக்கவும் செய்திருக்கிறார். கதையை பல்வேறு கோணங்களில் நகர்த்தி, கதாப்பாத்திரங்களை இன்னும் சரியான முறையில் கையாண்டிருக்கலாம்.

**இசை**

சாய் சுந்தரின் இசையில் பாடல்கள், பின்னணி இசையில் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம்.

**ஒளிப்பதிவு**

படத்தில் இடம்பெற்றுள்ள காட்சிகள் நாடகத்தன்மை.

# குரல்கள், இசைக்கருவிகளின் இணக்கம் பவதாரிணி



பாடகியும், இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளுமான பவதாரிணி கடந்த 2024ம ஆண்டு ஜனவரி 25ம் தேதி புற்றுநோய் பாதிப்பால் இலங்கையில் காலமானார். பவதாரணியின் மறைவை தொடர்ந்து, மகளின் ஆசையை நிறைவேற்றும் வகையில் இளையராஜா பவதாரிணியின் பெயரில் ஆர்கெஸ்ட்ரா குழு தொடங்க உள்ளதாக அறவித்திருந்தார்.


அதாவது, 15 வயதுக்குட்பட்ட சிறுமிகள் அடங்கிய ஆர்கெஸ்ட்ரா குழுவைத் தொடங்க இருப்பதாக இசையமைப்பாளர் இளையராஜா அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இளையராஜா தன் மகள் நினைவாக பவதா மகளிர் ஆர்கெஸ்ட்ரா (Bhavatha Girls orchestra) ஒன்றை தொடங்கியுள்ளார்.

திறமையுள்ள பாடகர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் விதமாக இளையராஜா பவதா மகளிர் ஆர்கெஸ்ட்ரா-வில் இணைய அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பான போஸ்டரில்," நீங்கள் ஒரு ஆர்வமுள்ள பாடகர் அல்லது இசைக்கலைஞராக இருந்தால், இந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள், இது உங்களை பிரகாசிக்கும் மேடை...

அதனால், உங்கள் திறமைகள் மற்றும் உங்கள் சுயவிவரம், தொடர்பு விவரங்களுடன் allgirlsorchestra@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள், விரைவில் உங்களைத் தொடர்புகொள்வேன்" என குறிப்பிடப்பட்டுள்ளது.


LOCATION - CHENNAI
WE ARE HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com


PRODUCT PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
Are you looking to publish News, Story, Kavidhai, Articles etc in TamilnaduEpaper, Anandabhaskar, PaperBoy
If yes,
send to tamilnaduepaper@gmail.com
Please mention in Subject
Papername and Category - News, Article, Kavithai, Story, Cooking, Aanmigam, Book Review, Vasagar Kaditham, Sindhika Oru Nodi, Rowse Ramani etc.,
Please send articles from own email
Articles without Author Details will be Ignored
ஆனந்த பாஸ்கர்


WE'RE HIRING!
A Passionate Content Creator
CONTACT US!
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்படக் கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


MLM PERFECT
LIMITED OFFER HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED
STORE HELPER
Boys only
Fresher / Experience
SAA
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@whitechhoses.in


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA MEDIA HOUSE
BOOK NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!
ADVERTISEMENTS
Whatsapp 81228 36299


WORK FROM HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009




பச்சைக் கிளியே பரவசத்தில்
மூழ்கடிக்கிறாய்..
உச்சி வெயிலில் ..
நீர்வீழ்ச்சியாய் நிறைக்கிறாய்..

காதல்...கவித்தேனே..
நேச ..பாசக்கூடே...
என்னோடு வாழ்ந்திடு..
பெருங்காதலால் நிறைத்திடு...



இளங்குயில் உன்னால்...
இலவம் பஞ்சாய்
மிதக்கிறேன்...

பனிமலர் கண்டு அகத்தினில்
குளிர்கிறேன்.
கேட்க .. கேட்க... மறுக்கும்...
உன் பிடிவாதத்தில்...

நிறைந்திருக்கிறது....
என்.பிடிமானம்...உன்
காதல் கானம் கேட்டு..
கனியாய்ருசிக்கிறது..
பொழுது..



உன்
நினைவுகள்
சோலையில்...
மணம்
வீசுகிறது...
காதல்
வாசம்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## ஏதும் ஒன்றே

இருட்டிலே கோதிடும்
தலைமுடி என்ன
கறுப்பா வெளுப்பா?

தோட்டத்தில் பூக்கும்
மலரில் அழகானது
சிவப்பா மஞ்சளா?

பசித்தவன் தட்டில்
முதலில் வைப்பது
இனிப்பா காரமா?

ரகசிய சந்திப்பில்
காதலியிடம் கேட்பது
அணைப்பா முத்தமா?

மழலையுடன் நாள்
கழிந்திடும் வேகம்
எண்பதா நூறா?

**கே. பி. ஜனார்த்தனன்**

கண்ணில் ஒன்று படுகிறது.
காதில் ஒன்று விழுகிறது.
மனதில் ஏதோ எழுகிறது.
மலர்கிறது கவிதையாக.
வார்த்தை இணைக்கிறது,



வாழ்வை
உணர்வுடன்.
வேறென்ன
வேண்டும்
வாழ்வை
ரசித்திட?

**கே. பி.
ஜனார்த்தனன்**



## பட்டேல் ஒரு சகாப்தம்

" பிரிந்து கிடந்த இடங்களை
எல்லாம் ஒன்றாய்
இணைத்து ஒரே இந்தியா
என உருவாக்கிய இரும்பு
மனிதரே .... "

குஜராத்தில் பிறந்த
காந்திஜியின் கொள்கை
வழித்தோன்றலே ..."

நர்மதை ஆற்று கரையில்
பெரிய சிலை கண்ட
மாமனிதரே .... "

சமஸ்தானங்களை
இணைத்து இந்தியா
மக்களாட்சி காண
வழி செய்தவரே .... "

இந்தியாவின் துணை
பிரதமர் உள்துறை
அமைச்சர் என்று பன்முகம்
கொண்டவரே..... "

விவசாய குடும்பத்தின்
குலவிளக்கே விவசாய
வரியை நீக்கி சர்தார்
பட்டம் பெற்ற வீரப்
பெருந்தகையே.... "

நூற்றரைம்பதாவது
பிறந்த நாள் காணும்
தலைவரே குடியரசு



அமைய
அச்சாரம்
போட்ட
வழி காட்டியே.."

**ஆர்.
சீதாராமன்**
சீர்காழி



உன் கன்னக்குழியும்
புதைக்குழி தான்–ஏனெனில்
விழுந்தவன் யாரும்
இதுவரை எழுந்திருக்கவே
இல்லை.

அந்த மரங்களின்
கிளை தாவும் அணிலைபோல
கொஞ்சமாவது
கடித்து திண்ண வேண்டும்?
உன் மாம்பழ கன்னங்களை!

மருத்துவம் தானடி படித்தாய்
மயக்கும் விழிகளால்
எனை ஏனடி
நோயாளியாக்கினாய்?!

தூயோள் தூயோளே
விட்டு சென்ற பின்பும்
கெட்டு போகாமல்
இருக்கிறது உன்
நினைவுகள். துடிக்கும்
இதயம் கூட –உன்
துதி பாடுவதை

ஒரு போதும் நிறுத்தவில்லை
கல் மனம் படைத்த
அந்த கடவுளிடம் நான்
கையேந்துவது உன்
காதலுக்காக மட்டும் தான்
ஆசை துன்பத்திற்கு காரணம்
என அறிந்தும்
பேராசை கொள்கிறேன்

உன் மீது மட்டும் .
உன் மேல் பொழியும்
மழைத்துளியிடம் கேட்டுப்பார்
என் தூய காதலை கொஞ்சம்
ஈரத்துடனே சொல்லும் .
யார் மீது சரி ,யார் மீது தவறு
என வாதிட விரும்பவில்லை
நம்மிருவருக்கிடையே ஊடல்
இருந்தாலும் அது காதலோடு
மட்டுமே இருக்கட்டும்.
மண்டியிடுவது சுய
மரியாதைக்கு இழுக்கென
தெரிந்தும்
காதலில் வெட்கம் விட்டு
மன்னிப்பு கேட்பதெல்லாம்
மாண்பென வருங்கால
வரலாறு சொல்லட்டும்
உனக்கு இனிவரும்
காலங்களிலும்



இதுபோல்
அன்புத்தொல்லை
கொடுக்க எனை
மன்னிப்பாயா –என்
அருமை காதலியே !

**லி .நௌஷாத் கான்**
கும்பகோணம்

## புடலங்காய்

கடலைப் பருப்பை வேக
வைத்து.. புடலங்காய் கூட்டு
வச்சு.. ஒரு கட்டுக் கட்ட
வேண்டுமடா சாதத்தை.!
புடலங்காய் பெருமை
சொல்வேன் மீதத்தை!

பந்தலிலே தொங்குகிற
புடலங்காயில் கல்லைக்
கட்டி.. நேராக வளர்த்திடுவார்
தோட்டத்தில்! பிள்ளைகளை
அது போலே அன்பினிலே
கட்டி வைத்து சீராக
வளர்க்கணுமே பருவத்திலே!

குடலை சுத்தம் செய்யுமே.
உடல் பருமன் குறைக்குமே..

இதயத்துக்கு ஏற்றதுதான்
புடலங்காய்!
இளசாக வாங்கிப் போயி
வீட்டுக்காரி கையில் தந்து
பொரியல் வைக்க சொல்லுடா
புடலங்காய்!

சக்கரையை குறைக்குதடா..
உடல் சூட்டை நீக்குதடா..
ஜீரணம் ஆவதற்குப்
புடலங்காய்! சித்தர் சொன்ன
அதிசயக் காய் புடலங்காய்!

வாடா இன்றே சந்தைக்கு..
வாங்கிப் போடத் தயங்காதே..
போடா போடா.. புடலங்காய்
வாங்கடா! புருசன் கையில்
புடலங்காய் வேலடா.!

**வே.கல்யாண்குமார்.**

## விரும்பியது முளைக்காது!

விரும்பியது முளைக்காது
விதைத்ததே முளைக்கும்
அரும்பியது சுவைக்காது
அன்புதான் சுவைக்கும்!

எண்ணிய நடவாது
இயல்புதான் நடக்கும்
பண்ணிய வாராது
பண்புகள் வருமே!

நினைத்தது நடவாது
நினையாமை நடக்கும்
கனவுகள் பலிக்காது
கனிவுகள் பலிக்கும்!

அடைந்தது உதவாது
அடையாளம் உதவும்
உடைந்தது சேராது
உடையாமை சேரும்!

ஊழ்வினை மாறாது



உதவிகள்
மாறிவிடும்
வீழ்ந்தது
எழாது
வீரமே
எழுந்திடும்!

**முனைவர்
இராம.வேதநாயகம்.**

## மதிப்பு

இரவொன்று இல்லாது
போனால் விண்மீன்களின்
கண்சிமிட்டல்கள்
காணக் கிடைப்பதில்லை..

கரையொன்று இல்லாது
போனால் ஆழ்கடலின்
அலைகள் கால்களைத்
தழுவுவதில்லை..

சமவெளிகள் இல்லாது
போனால் மலைகளின் உயரம்
கவனத்துக்கு வருவதில்லை..

நிழல்கள் இல்லாது போனால்
வெளிச்சத்தின் மகத்துவம்
புவிதனில் தெரிவதில்லை..

கோடைக்காலம் இல்லாது
போனால் மழையின்
மகத்துவத்தை
நினைக்க அவசியமேயில்லை..


முடிவுகள் இல்லாது போனால்
நினைவுகளின் இன்பங்கள்
ஒருபோதும் கிடைப்பதில்லை..

மௌனங்கள் இல்லாது
போனால் மொழிகளின்



மதிப்பும்
மனிதருக்கு
புரிவதில்லை
தான்!

**ஸ்டெஃபி ஸ்
காட்பிரே**
நாகர்கோவில்



## அருணாசலனே.. கருணை தீபமே.!

அனலாகி.. தணலாகி..
அண்ணாமலையாகி..
புனலாகி.. ஊற்றாகி..
புலருகின்ற பொழுதாகி
கனலாகி.. காணுகிற
கார்த்திகை தீபமாகி..
உனதாகி.. எனதாகி..
ஒளிருவதும் ஆதிசிவனே.!

கொப்பரையில் மலையுச்சி..
கொழுந்து விட்டெரிந்து
எப்புறத்தும் சிவஒளியாய்..
பரவும் ஞான சுடராகி..
அப்புறத்தும் இப்புறத்தும்..
ஆனந்த வெள்ளமாகி..
செப்புகின்ற "சிவாயநம"
மந்திரமாய் முழங்கும்
சிவனே.!

கைகூப்பி தலையுயர்த்தி..
காணுகின்ற தீபச்சுடரில்..
மெய்ப்பொருளை
மனம்நாட.. மேகங்கள்
கலைந்துவோட..ஐயனவர்
அண்ணா மலையார்



உடனாட
உண்ணா
முலைத்தாய்
கையகத்தே
தாங்கிநிற்கும்..
கருணைஒளி
அருணை
சிவனே.!

**வே.கல்யாண்குமார்.**

## மனசாட்சி

முடிந்தால் பிறர் வாழ்வினில்
நெம்புகோலாய்
இருந்திடுவாய்

எளியோர் வதன புன்னகை
மலர்ந்திட துணையிருப்பாய்

தவறியும் தீங்கு எண்ணாதே
மனத்தின் நகலகமே செயல்

இறைவன் கவனித்துக்
கொண்டே இருக்கிறார்
என்பது புரிந்துணர்வு

வேவுத் தொலைக்காட்சி



என்பர்
மண்ணைத்
தூவுவது
துர்லபம்

**பி. பழனி,**
சென்னை.

# நூல் விமர்சனம்


**திருவள்ளுவ மாலை
மூலமும் எளிய உரை
விளக்கமும் !
நூல் ஆசிரியர் :
புலவர் இராம. வேதநாயகம் !
நூல் விமர்சனம் :
கவிஞர் இரா. இரவி !
மணிமேகலை பிரசுரம்,
7, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை
600 017.**

நூல் ஆசிரியர் புலவர் இராம. வேதநாயகம் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம் வடமாதிமங்கலம் ஊரில் வாழ்ந்து வரும் தமிழ்க்குன்று எனலாம். தமிழுக்காக தொடர்ந்து இயங்கி வரும் படைப்பாளி. ‘திருவள்ளுவ மாலை மூலமும் எளிய உரை விளக்கமும்’ என்ற இந்த நூல் தமிழன்னைக்குச் சூட்டிய வைர மாலை எனலாம். திருக்குறளுக்குச் சூட்டிய வைர மகுடம் எனலாம்.

உலகப்பொதுமறையான திருக்குறளின் அருமை பெருமையை அன்றே 55 தமிழ்ப்புலவர்கள் திருவள்ளுவ மாலைபாடி வைத்துள்ளனர். பலர் பாடிய பாடலின் தொகுப்பான திருவள்ளுவமாலை மூலப்பாடல்களையும், பொழிவு, கருத்து என்று மூன்று பிரிவுகளாக 55 பாடல்களுக்கும் எழுதி இருப்பது, சிறப்பு.

புலவர் இராம. வேதநாயகம் எம்.ஏ.எம்.ஏ. எம்.எப். கற்றறிந்த புலவர் என்பதால் பாடல்களுக்கான கருத்துரையை மிக எளிமையாகவும், இனிமையாகவும், நுட்பமாகவும் எழுதி உள்ளார். நூலாசிரியர் கவிஞர் என்பதால் உரையை கவித்துவமாக உள்ளத்தில் நன்கு பதியும்படி எழுதி உள்ளார்.

திருவள்ளுவ மாலை கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் படித்தது இல்லை, நூலாசிரியரின் ஒரு நூலிற்கு அணிந்துரை எழுதி உள்ளேன். இந்நூலை வெளியிட்டவுடனேயே எனக்கு அனுப்பி வைத்து விட்டார். படித்துப் பார்த்து வியந்து போனேன். திருக்குறள் மீது எனக்கு அளவற்ற மதிப்பு




உண்டு. இந்நூல் படித்து முடித்ததும் அந்த மதிப்பு இருமடங்காக உயர்ந்து விட்டது.

திருவள்ளுவ மாலை 54 பாடல்கள் நூலில் இருந்தாலும் பதச்சோறாக ஒரே ஒரு பாடலை மட்டும் இங்கு எழுதுகின்றேன்.

" 55.அணுவைத் துளைத் தேழ் கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள் ! ஔவையார் !

பொழிவு : திருவள்ளுவரின் ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள் வெண்பாக்களும், கடுகை விட மிகவும் நுண்ணிய அணுவை, அதன் நடுவே துளை செய்து, ஏழு கடல்களின் நீரையும், அத்துளையுள் பெய்து, தன்னளவில் குறுகும் வண்ணம் தறித்து வைத்தால் அது போல்வன ஆகும்.

கருத்து : கடுகோ சிறியது, கடுகை விட அணுவானது குறுகியது, சிறியது. அதனுள் அதன் நடுவே துளை போட்டு அத்துளையினுள் ஏழு கடல்களின் நீரையும் புகுத்திக் குறுகிய பின் எவ்வாறிருக்குமோ அது போலாம் திருக்குறள்.

அணு தனிமத்தின் இயல்புகளைக் கொண்ட இயல்பான பொருள் ஒன்றின் மிகச்சிறிய அலகுப் பொருட்கூறு. அணு என்பது மிகவும் சிறியது. அளவில் மீட்டரின் 10 பில்லியனில் ஒரு பங்கு. அதாவது ஆயிரங்கோடியில் ஒரு பங்கு. ஔவையார் என்ற பெயரில் ஏழு பேர் இருந்தார்கள் என்றறியப்-படுகிறது. இதில் சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையாரே மேற்காண் குறள் வெண்பாவை யாத்ததாகக் குறிப்புள்ளது."

ஒரே ஒரு பாடலை மட்டும் எழுதி உள்ளேன். மீதமுள்ள 54 பாடல்களையும் உரையையும் கருத்தையும் நூல் வாங்கிப் படித்து அறிந்து கொள்ளுங்கள். அரங்கேற்ற மறுத்த திருக்குறளை அரங்கேற்ற உதவிய ஔவையார் தான் இந்தப் பாடலை எழுதி இருக்க வேண்டும் எனபது என் கருத்து. உண்மை தான். அரிய, பெரிய கருத்துக்களை ஏழு சீரில் அடக்கிய வல்லவர் திருவள்ளுவர். ஒவ்வொரு பாடலுக்கும் மிக நுட்பமாகவும், திட்பமாகவும் எழுதி உள்ளார். எனக்கு மிகவும் பிடித்த கருத்துரை மட்டும் உங்கள் பார்வைக்கு.

பாடல் எண் 12 : எழுதியவர் : நாகன் தேவனார்.

கருத்து : தாமரை மலர்கள் நிறைந்துள்ள குளத்தில் ஒருவர் குளித்தால், வேறு குளத்தை நாட மாட்டார் என்பது போல திருக்குறளைப் படிப்பவர் வேறு நூலை நாட மாட்டார்.

உண்மை தான். திருக்குறளில் சொல்லாத கருத்துக்களே இல்லை. அனைத்தையும் பாடியவர் நம் திருவள்ளுவர். உலக அளவில் தமிழர்களுக்கு பெருமையையும், புகழையும் தேடித் தந்தவர் திருவள்ளுவர். தமிழை அறியாதவரும் திருக்குறளை அறிந்து உள்ளனர்.

புத்தன், இயேசு, காந்தி போன்ற அறவோரை உருவாக்கியது நம் திருக்குறள். மண் உலகிலேயே சொர்க்கம் கண்டு வாழ்வாங்கு வாழ்ந்திட வழி உரைத்தவர் திருவள்ளுவர். திருக்குறளின் சிறப்பை அன்றே உணர்ந்து பாடிய பாடல்கள் படிக்கப் படிக்க திருக்குறளின் மீதான மரியாதை மேலும் மேலும் உயர்ந்து வருகின்றது.

நூல் ஆசிரியர் புலவர் இராம. வேதநாயகம் அவர்களுக்கு பாராட்டுக்கள்.

ஒரே ஒருநூலில் பல தகவல்கள் உள்ளன. திருவள்ளுவரின் வேறு பெயர்கள், திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள், திருக்குறள் உரையாசிரியர்கள் பட்டியல் திருவள்ளுவ மாலை மூலமும் உரை விளக்கமும் திருக்குறள் பற்றிய சுவையான தகவல்கள், கால வரிசையில் திருக்குறள் உரைகள் பிற என 7 தலைப்புகளில் தகவல் களஞ்சியமாக உள்ளது.

ஆய்வு மாணவர்களும், ஆசிரியர்களும் பேராசிரியர்களும் படிக்க வேண்டிய நூல். இன்னும் சில கருத்துரைகள் உங்கள் ரசனைக்கு. பாடல் எண் :22, எழுதியவர் : நொடித்தலை விருத்தண்டினார்.

கருத்து : உலகத்துப் பொருள் அத்தனையும் திருவள்ளுவத்தில் அடங்கும். உலகின் விட்ட பொருள் ஏதேனும் இல்லை. பெறுவதற்கு அரிதானவையே அறம், பொருள், இன்பம் மற்றும் வீடாம்.

பாடல் எண் : 35, பாடியவர் : மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்.

கருத்து : இன்பமும் துன்பமும் இணைந்ததே வாழ்க்கை. மாந்தர் இன்பத்திற்கான காரணங்களையும் துன்பத்திற்கான காரணங்களையும் ஆய்ந்து உணர வேண்டிய வள்ளுவர் வள்ளுவத்தை வாயாற வாழ்த்தாகப் படைத்தார்.

பாடல் எண் : 47, பாடியவர் : நப்பாலத்தனார்.

கருத்து : அறம், பொருள், இன்பம், சொல், குறட்பா ஆகியவற்றை அகல், திரி, நெய், நெருப்பு, தண்டு எனக் கொண்டு திருவள்ளுவர் மாந்தரின் அக இருளை ஓட்டினார்.

பாடல் எண் : 48, பாடியவர்: குலபதி நாயனர் கருத்து : திருக்குறளும், கதிரவனும் நிகராம். திருக்குறள் மாந்தரின் அக இருளை நீக்கும், கதிரவன் புற இருளை நீக்கும்.

திருக்குறளுக்கு உரை கண்ட பெண்மணிகளின் பட்டியல், திருவள்ளுவர் எழுதியதாகக் கருதப்படும் பிற நூலகளின் பட்டியல், திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மொழிகளின் பட்டியல், திருவள்ளுவர் சிலைகள் உள்ள இடங்கள், திருவள்ளுவர் கோயில் உள்ள இடங்கள், இந்நூல் தயாரிக்க உதவிய நூல்களின் பட்டியல். இப்படி படிக்கப் படிக்க பிரமிப்பு வந்தது. நூலாசிரியரின் கடின உழைப்பையும், ஆழ்ந்த எழுத்தையும் உணர முடிந்தது.

## புதுப்புது துளிகள்

" வெண் மேகம் கருத்து
தலை தூக்க வானமது
இசைந்து கொடுக்க ... "

பூமியும் குளிரால் மலர்ந்து
சிரிக்க சின்னச் சின்ன
சினுங்களால் விரிய ......"

பட பட வென சிறகடித்து
பறக்கும் ஓசை எழுப்ப
மழைத்துளி வந்து விழ .... "

பூக்களும் செடிகளும்
சிலிர்த்து எழும்ப
சில்லென்ற காற்று
பூக்களின் நறுமணத்தை
சுமந்து வர ......"

மண்வாசனையும் தலை காட்ட
பூமியில் பெய்யுது
ஆனந்த மழை ..."

இரவின் உறக்கம்
குளிரில் குவிந்து கிடக்க
இதமாய் கனவும் சேர்ந்து
தழுவ ....."

உலகமே மெய் மறந்து தான்
போனது இடியும்
மின்னலும் எழுப்பும் ஓசை
தடை போட்டாலும் ..."

களையாத உறக்கம்
கண்களில் இனிமை
மனதில் இதம் தொடரும்
மயக்க பொழுது ....."

என்றும் மழைக்கு உண்டு
சிகப்பு கம்பளம் மண்ணில்
அளவோடு வந்து களம் புகும்
நல்ல நேரம் .... "

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## இரு பட்டாம்பூச்சிகள்

பட்டாம்பூச்சிகள்–
இரண்டும் ருசி பார்த்து
பசி ஆற்றுகிறது!

யாருக்கும் புரியாத
இந்த மௌன மொழியின்
ரகசிய மொழிதான்
காம மொழி


சிறகை விரித்து
சிறகடித்து பறக்கிறது
காதல் கடலில்
உணர்ச்சி அலைகள்!

சிறுவர்களின்–
கைகளில் சிக்காமல்
தப்பித்து மாட்டிக்
கொண்டோம்
காம வலைக்குள்!

காம தேசத்தில்–
நாம் இருவர் மட்டுமே
வெட்கத்தில்
கண்களை மூடாதே!

பூவின்மீது படிந்திருக்கும்
தேனை ருசிக்காத
பட்டாம்பூச்சி செடியில்யில்
அமர்ந்திருக்கும்
பட்டாம்பூச்சியிடம்
தேனை ருசிக்கிறது

காம தேசத்தில்–
நாம் இருவர் மட்டுமே



வெட்கத்தில்
சிறகுகளை
மூடாதே!

**பாரதி
முத்து**
ஒட்டேரி
வேலூர்




## நடித்தால் தான் நம்புகிறாரே

உலகமே ஒருநாடக
மேடை ஆம்நாம்
ஒவ்வொரு வருக்கும்
ஒவ்வொரு வேடம்
உலவிடும் அதிலும்
ஒவ்வொரு வண்ணம்
கலகமே செய்யும்
கற்பனை காட்சிகள்
விலகியே போகாது
நடித்து முடிக்காமல்.....
எனவே வாழ்வில்
எப்படி இருப்பினும்
தனக்கே இருக்கும்
பாத்திரத்தை மற்றவர்
நடித்தால் தானே

நம்புகிறாரே
முடிப்பாய்
நடிப்பால்
முத்தாய்ப்பாய்
எல்லாம்!!

**வைரமணி**
சென்னை



## வண்ணங்களின் எண்ணங்கள்.!

மை வண்ண மதிமுகத்து
கண்ணா.. உன்
நிறமாம் நீலவண்ணம்
ஆழிக்களித்தாய்!
மெய்வண்ணம்
கறுமையென்றார் ஆயர்பாடி..
யெங்கும் வெண்மைநிற
வெண்ணையுண்டாய்!
பூவண்ணம் சூடிக் கொடுத்த
சுடர்க்கொடியாள்.. பாடிக்
கொடுத்தப் பாசுரத்தால்
பச்சைவண்ணக் கண்ணா
நீயும் பைந்தமிழின்
சொந்தமானாய்.! இச்சத்தில்
செவ்வண்ண உதிரம் சிந்தும்
பாரதப் போர்களத்தில்..
சூத்தரதாரியாய் வரிசங்கம்
ஊதி.. சொன்னவண்ணம்
அர்ச்சுனனுக்கு கீதை
சொன்னாய்.! இவ்வண்ணம்
தருகின்ற வண்ணங்கள்
எண்ணமாக.. கார்முகில்
மழை வண்ணக் கண்ணா..
மண்ணுலகில் நல்லவண்ணம்
மாந்தர்கள் வாழ.. கண்ணா
நீ அருளவேணும்

**வே.கல்யாண்குமார்**

## உலக வன விலங்குகள் தின தேசிய கீதம்!

வனத்திடை உலவிடும்
விலங்கினம் வாழ்க!
நீரிலும் நிலத்திலும்
வானிலும் வாழ்க.!

கானகம்.. நா டகம்
அமைதியே சூழ்க.!
கருணையில் உயிர்களும்
வாழ்க!

தானுண்டு என்றவை..
வாழ்வத னாலே.. தயை
என்றும் பூமியில் வாழ்க!

சிறகுகள்.. பறவைகள்..
வாழ்க..! சிறு எறும்புகள்
யானைகள் வாழ்க.!
கருணையினால்
உலகு வாழ்க.!

கடவுளின் படைப்பினில்
அனைத்துயிர் வாழ்க!
காடுகள் தழைத்தே வாழ்க!

வாழ்க! வாழ்க! வாழ்க!
வனநலம் மனநலம் வாழ்க!

**வே.கல்யாண்குமார்.**

பீனிக்ஸ் பறவை தான்
அவள் எச்சத்தில் மிச்சமான
உச்சக் கவிதைகள் !

கெட்ட பிறகு
குருவாய் கற்றுக்கொடுத்தது
வாழ்க்கை பாடம் !

**நௌஷாத் கான் .லி**



மானுக்கு உணவு புற்கள்,
மரங்களின் தளிர்கள்,
இலைகள், பழங்கள்.
புலிக்கு உணவு
வனவிலங்குகள் மட்டுமே.
புலி பதுங்கி இருந்து
மானைத் கடித்துக்
குதறி இரையாக்கிக்
கொள்ளும்போது ஐயோ
பாவம் மான்... என்று
அனுதாபப் படுகிறோம்.
புலியிடமிருந்து மான்
தப்பித்து ஓடும்போதும்
மகிழ்கிறோம்.
ஆனால் புலியிடமிருந்து
மான்

தப்பிவிடும்
போது,
பாவம் புலி.
பசியைத்
தணித்துக்
கொள்ள
என்ன செய்யும்
என்று நாம் ஏன்
அனுதாபப்படுவதில்லை?

**உ.மு.ந.ராசன்கலாமணி**
கோவை.

## பிரார்த்தனை செய்து பார்

எதற்காகவும் நாம் வேண்டும்
போது அங்கே மன நிம்மதி
கிடைப்பது உறுதி
அச்சம் ஓடிப்போய் மிச்சம்
இருக்கும் நிம்மதி வந்து
விடும் தன்னம்பிக்கை ஒளி
கண்ணெதிரே தெரியும்
மனதுக்குள் தாரகை போல
ஒரு ஒளி தெரியும்
ஆண்டவனின் அருமையான
குணம் புரியும் சோகம் என்ற
சொல் மறந்தே போகும்
மனதில் ஒரு சந்தோஷ
கானம் ஒலிக்கும்
பிரார்த்தனை என்றுமே
நிம்மதி தரும் என நம்பு
நம் தேவைகளை ஆண்டவன்
உணரும் தருணம்
சுற்றமும் நட்பும் நம்மிடம்
பாசம் வைக்கும் தருணம்


பிரார்த்தனை
செய்து பார்
சந்தோஷக்
கனியை
சுவைத்துப்பார்

**உஷா முத்துராமன்**

## இமயம் போல்...

இல்லறமே நல்லறமென்றே
இணையுதே இருமனம்
இனிதே இன்று நல்லவை
யாவும் பெற்றுவாழ
வாழ்த்தும் பல இதயங்கள்
இங்கு; இமயம் போல்
நிமிர்ந்து நின்றே இல்லற
வாழ்வை நடத்திடுங்கள்
இன்னல்கள் ஏதும்
வந்தபோதும் இணைந்தே
இருவரும் செயல்படுங்கள்
பிறந்த வீட்டின்
பெருமைகளைப் புகுந்த
வீட்டிலும் காத்திடுங்கள்;
நம்மை நாடிவந்த
பெண்ணை நலமுடன்
வாழச் செய்திடுங்கள்;
புன்னகை முகத்தில்
பூத்திடவே மண்ணுலகில்
நீங்கள் வாழ்ந்திடுங்கள்;
பொன்னகை இல்லாக்
காரணத்தால் புன்னகைக்க
மட்டும் மறந்திடாதீர்கள்;
எதுவந்தாலும் ஏற்றுக்
கொண்டே எளிமையாய்
வாழப் பயின்றிடுங்கள்!

**எஸ். சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை



## எதிர்காலம் !

ஐந்தாம் வகுப்பு படிக்கும்
தன் மகள் மீனுவின் பட்டு
கன்னத்தில் முத்த மழை
பொழிந்து தன் இருசக்கர
வாகனத்தில் இருந்து இறக்கி
விட்டான் சரத் !

"டாடி... இனி நீங்க எப்ப
வருவீங்க ..!"
ஏக்கமாய் கேட்டது அந்த
பிஞ்சு நெஞ்சம் !

"நான் ... நான் இனி ஐந்து
நாள் கழிந்து தான்டா
வருவேன் இன்னைக்கு
ஈவினிங் உன் அம்மா வந்து
கூட்டிட்டு போவா...அம்மா
கூட போக உனக்கு எந்த
பிரச்சினையும் இல்லையே...!"

சரத்தின் கேள்வி... மீனுவை
ஏதோ ஒரு திசையில்
வெறித்துப் பார்க்க
வைத்தது... அந்த பிஞ்சு
நெஞ்சம் கண்களில் நீர்
கோடு வார்த்தது....

"எப்பப்பா... அம்மாவும்

நீங்களும் ஒண்ணா
வந்து என்னை கூட்டிட்டு
போவீங்க... !"

"அது இனி நடக்கும்னு
தெரியல டா ...நீ நல்லா
படிக்கணும் உனக்காக என்ன
வேணா பண்ண தயாரா
இருக்கேன் உனக்காக என்
உயிரை கூட கொடுப்பேன்
செல்லம் ..!"

தன் மகள் மீனுவை மீண்டும்
கட்டி அணைத்தான் சரத் !

"அப்பா .. ப்ளீஸ் எனக்காக
உயிரையெல்லாம் கொடுக்க
வேண்டாம் பா. எனக்காக
அம்மாவோட கோபத்தை
எல்லாம் மறந்து, நம்ம
மூணு பேரும் சந்தோஷமா
வாழனும்...அது மட்டும்
செய்யுங்கப்பா... !"

தன் மகள் நியாயமான
கேள்வியில் மனம்
தளர்ந்து சிந்திக்க
ஆரம்பித்தான் சரத்.

**எம்.பி.தினேஷ்**
கோவை

## வேண்டாம் சாதி வெறி !

மனிதனை விலங்காக்கும்
சாதி வெறி வேண்டாம் !
மனிதனைக் கொல்லும்
கொலைவெறி வேண்டாம் !

விலை மதிப்பற்ற மனித
உயிர்களை வீண் சண்டை
இட்டுப் பறிப்பது முறையோ ?

எந்த உயிரும் உயர்ந்ததுதான்
உலகில் ! எந்த உயிரும்
மலிவானது அல்ல !

அன்பு செலுத்துவது மனிதன்
குணம் ! வம்பு
செய்வது விலங்குகள்
குணம் !

உன்னுயிர் போல
மற்ற உயிர் நேசி !

உயிரைப் பறிப்பது மடமை நீ
யோசி !

கனிவோடு நடந்திட்டால்
சண்டை வராது !
கணினியுகத்தில்
காட்டுமிராண்டி ஆகலாமா ?

சாதியின் பெயரால் கலவரம்
ஏனோ ? சாதிக்கும் வயதில்
மோதல் சாவு ஏனோ ?

வெட்டியும் குத்தியும் வீழ்வது
ஏனோ ? வேதனையை
குடும்பத்திற்கு தருவது
ஏனோ?

சிந்தித்துப் பார்த்து
செயலினை மாற்று !
சிந்திப்பவன்தான் மனிதன்
மனிதனாக மாறு !

**கவிஞர் இரா .இரவி .**

## நான் ஒரு தெருப்பாடகன்.!

ஊருக்குள்ளே எனது பெயர்
தெருப் பாடகன்!
உள்ளத்தில் இருப்பதை
இசைக்கிற ஒருபாடகன்!
நீருக்குள்ளே வாழுகின்ற
மீனைப் போன்றவன்!
நினைவுகளில் நீந்துகிற
நான்.. தெருப்பாடகன்!

தெருவோடு இரவினிலே
பாடிக்கொண்டுப் போவேன்..
கருவோடு கலந்த கானம்..
இசைத்தப்படிப் போவேன்!
துறவாத துறவியென
தூரங்களைக் கடந்து..
இறவாதக் கவிதையிலே
இசைப்பாடி வருவேன்!

யாருக்கும் பாரமில்லை
யான் தெருப் பாடகன்!
யாவருக்கும் வேண்டியே
பாடல்பாடும் பாடகன்!

தேவருக்கும் மனிதருக்கும்..
தூதுசெல்ல வந்தவன்!
தெருவெங்கும் நடந்தபடி..
தேடிக்கொண்டு சென்றவன்!

சீருக்குள் சிலசமயம்
என்பாடல் அடங்காது!
சிந்தனைகள் சிறகசைக்க
எப்பொழுதும் முடங்காது!
பேருக்கு ஒரு பாடகனாய்..
நான் வாழ முடியாது!
பேருலகம் கேட்கும்வரை
என்பாடல் முடியாது!

தெருவிளக்கின்
வெளிச்சத்தில்..
தேடிக்கொண்டே நடக்கிறேன்!
நெருப்பினிலும் நீரினிலும்..
நடந்துப் பாட்டுப் படிக்கிறேன்.!
மறுபிறவி இருக்கிறதோ..
தெரியாமலே பிறக்கிறேன்..
மனதநேய பாட்டுப்பாடி
என்னை நானே மறக்கிறேன்!

**வே.கல்யாண்குமார்.**

## இல்லறம் !


இல்லறம் ! பூக்களும்
,முட்களும் நிறைந்த ஒரு
கனவு பிரதேசம் !

கைகோர்த்து நடப்பின் மனம்
வீசும்... கைவிட்டு நடப்பின்
விஷமுட்கள் பதம் பார்க்கும் !

இல்லறம் போர்க்களம்
போன்றது.... சமாதானக்
கொடி கையில் ஏந்தினால்
போர்க்களம் அமைதியாகும்...

இல்லையேல்... சூறையாடி
விடும் !

இல்லறம் கம்பி மேல் நடக்கும்
சாகசம் போன்றது....
இருபுறமும் சம பங்கு
எடையுடன் நடந்தால் ...
கீழே விழாமல்
பயணிக்கலாம்....

இல்லறம்... ஒரு மர்ம
பிரதேசம்... ஒருவரை ஒருவர்
சார்ந்து பயணிப்பின்...

பயமின்றி
நடுக்கமின்றி
எதையும் தாங்கி
பயணிக்கலாம்!

**எம்.பி. தினேஷ்.**
கோவை

கவிதை எழுதுகிற இந்த
கணத்தில் வேறெதாவது
செய்யலாம்.

நல்ல புத்தகமொன்றை
எடுத்து வாசிக்கலாம்.

தோட்டத்துச் செடிகளுக்கு
நீரூற்றலாம்.


குழந்தைகளோடு கொஞ்ச
நேரம் விளையாடலாம்

ஏதாவதொரு அலைவரிசைய
தொடர் அழுகையில்
கொஞ்சம் கரையலாம்.

இவையெதிலும் ஒட்டாத
உள் மனம், சும்மா
இருப்பதின் வெறுமையை

விரட்ட
மறுபடியும்
எழுதலாம்...
ஒரு கவிதை.

**எஸ் சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை



## அறிவுத்தேன்

புத்தகமாம் புத்தகம்
புத்தி புகட்டும் புத்தகம்!
புத்தகங்கள் படிப்பதால்
புரிய வேண்டும் வித்தகம்!

எத்தகைய தலைப்பிலும்
எடுத்து வைத்த நூலகம்!
எத்தனை நாள் கற்பதோ
என்ன என்ன புத்தகம்!

பத்து நூறு கருத்தினை
பதித்து வைத்த புத்தகம்!
அத்தனையும் படிப்பதால்
அறிவைகூட்டும் புத்தகம்!

முத்து போல பாடலும்
முழுக வைக்கும்
கதைகளும்,
தத்துவங்கள் ஆயிரம்
தனக்குள் வைத்து தந்திடும்!

புத்தன் இயேசு காந்தியும்
புகுத்தும் நல்ல கருத்தினை
மெத்த மெத்த படிக்குமோர்
மேடை தானே நூலகம்!

அத்தனையும் படிக்கலாம்

அறிவுத்தேனை
குடிக்கலாம்
அன்புத் தம்பி
தங்கையே
அதனைப்
படித்து
துதிக்கலாம்!

**வெ.தமிழழகன்**
எம்ஏ.பிஎட், சேலம்

1. நாம் தூங்கும் போது மட்டுமே மனிதனாக இருக்கிறோம் தூங்கி எழுந்த பிறகு பல வேடங்கள்

2. போதும் என்ற உணர்வு உங்களுக்கு எப்போது வருகிறதோ இப்போது கிடைத்ததை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வந்துவிடும்

3. வாழ்வின் சில முடிவுகளை வாழ்வே எடுத்து விடுகிறது சில முடிவுகளை காலம் எடுத்து விடுகிறது எதுவும் நம் கையில் இல்லை

4. உளி விழும் போது வலி என்று நினைக்கிற எந்த கல்லும் சிலையாக முடியாது

5. நாம் சந்திக்கும் ஒவ்வொரு அவமானத்தின் போதும் நம்மைப் பிடித்த தரித்திரம் விலகி விட்டதாக அர்த்தம்

6. இதயம் துடிக்கும் போது யாரும் கவனிக்க மாட்டார்கள்

துடிப்பு
நின்றதும்
எல்லோரும்
துடிப்பார்கள்
இதுதான்
வாழ்க்கை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## நூபுரகங்கை தீர்த்தத்திலே கள்ளழகர் தைலக்காப்பு உற்சவம்

திருமாலிருஞ்சோலை அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் நேற்று 02.11.2025 நூபுரகங்கை தீர்த்தத்திலே கள்ளழகர் தைலக்காப்பு உற்சவம் நடந்தது.

ஆண்டுக்கு ஒருமுறை ஐப்பசி வளர்பிறை துவாதசி அன்று அழகர்கோவில் மலை அடிவாரத்திலிருந்து கள்ளழகர் பல்லக்கில் புறப்பட்டு காட்டுபாதைகள் வழியாக மலை மீது உள்ள நூபுரகங்கை தீர்த்ததொட்டிற்கு எழுந்தருளுவார். அங்கு கள்ளழகருக்கு மூலிகை தைலகாப்பு சார்த்தப்பட்டு பின்னர் நூபுரகங்கை தீர்த்தத்தில் திருமஞ்சனம் நடைபெறும்

## சிரி சிரி கிரேஸி புத்தகம் வெளியீடு




கிரேஸி மோகன் எழுதி நடித்த, கலைஞர் டிவியில் ஒளிபரப்பான சிரி சிரி கிரேஸி நாடகத்தின் நூல்வடிவமான சிரி சிரி கிரேஸி புத்தகத்தை முதல்வர் ஸ்டாலின் வெளியிட மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் பெற்றுக் கொண்டார்.

## ஆற்காட்டில் பாலாறு பெருவிழாவில் பொதுமக்கள் வழிபாடு



ஆற்காட்டில் பாலாறு பெருவிழாவில் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று வழிபாடு செய்தனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை



தேனி மாவட்டம் கூடலூரில் நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளை கலெக்டர் ரஞ்ஜித்சிங் வழங்கினார்.

## சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பான பிஎல்ஓ பயிற்சி



தென்காசி மாவட்டம், ஈ.சி.இ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பான பிஎல்ஓ பயிற்சி கலெக்டர் கமல்கிஷோர், தலைமையில் நடந்தது.

## நல்லூர் ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டம்



திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம் நல்லூர் ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டத்தில் கலெக்டர் இளம்பகவத் சிறப்புரை ஆற்றினார்.

# வாசகர் கடிதம்

தமிழ்நாட்டை நிரந்தரமாக ஆளும் தகுதி எங்களுக்கு உள்ளது என ஸ்டாலின் அறிக்கை. உள்ளூர் செய்திகள் அனைத்தும் அற்புதமாக வழங்கி இருப்பது சிறப்பு. சார் என்றாலே திமுகவினருக்கு அலர்ஜி என நைனார் நாகேந்திரன் கூற்று. மாமல்லபுரம் ரிசார்ட்டில் பாதிக்கப்பட்ட மக்களின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டார் விஜய்.30000 ஊழியர்களை பணி நீக்கம் செய்யப் போவதாக அமேசான் அறிவிப்பு. கர்நாடகாவில் சித்த ராமையா அறிவிப்பு இறுதியானது. வேலூர் முத்து ஆனந்த் அவர்களின் காதல் கவிதை கன ஜோர் . எலுமிச்சை தோலின் நன்மைவியக்க வைத்தது. குழந்தைகள் பகுதி அனைத்தும் அருமையாக இருந்தது திருப்பதி கோவிலில் அஜித் சாமி தரிசனம் செய்தார். சென்னிமலை பழனி மலை முருகன் கோவில்களில் திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. மொந்தா புயல் ஆந்திராவை நோக்கி சென்றது எனவே 65 ரயில்கள் ரத்து செய்யப்பட்டது. வாக்காளர் திருத்தப்பட்டியல் ஜனநாயகத்துக்கு ஆபத்து. வெளிநாட்டவர் அமெரிக்காவுக்கு செல்ல புதிய வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது அமைதிக்கான நோபல் பரிசை ட்ரம்புக்கு வழங்க ஜப்பான் பிரதமர் கோரிக்கை வைத்துள்ளார்தமிழ்நாடு இ பேப்பர் தினசரி புதுப்புது செய்திகளை உடனுக்குடன் வழங்கி வருவது சிறப்பானதாகும் தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

உலகில் எங்கு பாதிப்பு ஏற்பட்டாலும் அங்கு உதவிக்கு செல்லும் நாடு இந்தியா#பிரதமர் மோடி ஏகாதசி சிறப்பு வழிபாடு#ஆந்திரா கோவிலில் நெரிசலில் சிக்கி ஒன்பது பேர் உயிரிழப்பு
2026ல் உண்மையான மக்களாட்சியை அமைப்போம்#தவெக விஜய்
வங்கிக் கணக்குகளில் நாமினி விவரம் கட்டாயம் அமல்#கோடிக் கணக்கில் பல வருடங்களாக கோரப்படாத பணம் வங்கிகளில்/LICயில் கிடக்கு
டெங்கு, சிக்கன் குனியா நோய்கள் குறைந்துள்ளது#அமைச்சர் மா சுப்பிரமணியன்
நூல் விமர்சனம் அருமை
வாசகர் கடிதங்கள் அமர்க்களம்
புதுக் கவிதைகள் அட்டகாசம்
எல்லா தவறுகளுக்கும் பொதுநல வழக்கு சர்வரோக நிவாரணி அல்ல#சென்னை உயர்நீதி மன்றம்=ஏற்கனவே ஏகப்பட்ட வழக்கு தேங்கிக் கிடக்கு
10 ஆண்டு ராணுவ ஒப்பந்தம்#இந்தியா-அமெரிக்கா கையெழுத்து
உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்குகளில் தலையிடக் கூடாது#உத்தரகாண்ட் உயர் நீதிமன்றத்திற்கு தலைமை பி ஆர் நீதிபதி கவாய் எச்சரிக்கை
என் குடும்பத்திற்காக எதுவும் செய்ததில்லை#மக்களுக்காக உழைத்தேன் .
இன்னொரு வாய்ப்பு தாருங்கள்#வாக்காளர்களுக்கு வீடியோ வெளியிட்ட நிதீஷ் குமார்
மகளிர் உலகக் கோப்பை இந்தியா வென்றால் 125 கோடி பரிசுத் தொகை#பிசிசிஐ
திட்டம் அமலாக்கத்துறைக்கு உச்ச நீதிமன்றம் குட்டு
மூச்சு முட்டும் டில்லி தலைநகரை விட்டு வெளியேற மருத்துவர்கள் அறிவுரை
தான்சானியா தேர்தல் வன்முறையில் 700 பேர் பலி
கரீபியன் நாடுகளைத் தாக்கிய புயல்#49 பேர் உயிரிழப்பு
மியான்மர் அகதிகளுக்கு பாதிப்பா#நிபுணர்களின் குற்றச்சாட்டை நிராகரித்தது இந்தியா
இங்கிலாந்து இளவரசர் ஆன்ட்ரூ அரச பட்டங்கள் பறிப்பு#வீட்டைக் காலி செய்ய சார்லஸ் உத்தரவு
30 பாலஸ்தீனிய கைதிகளின் உடல்களை ஒப்படைத்த இஸ்ரேல்
கனடா கொலை வழக்கில் இந்திய வம்சாவளி இளைஞருக்கு 25 ஆண்டுகள் சிறை#கோர்ட்டு உத்தரவு
பாகிஸ்தான் = ஆப்கானிஸ்தான் இடையே போர் நிறுத்தம்#ஆறாம் தேதி முக்கிய முடிவு எட்டப்படும்
ஒற்றை நாகரிகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய அருங்காட்சியகம்#எகிப்தில் திறப்பு மிரட்டும் குளிர்#ஜம்மு காஷ்மீரில் பள்ளி வேலை நேரம் மாற்றம்
ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி-20 கிரிக்கெட் போட்டி#இந்தியா தோல்வி
சுற்றுச்சூழல் பூங்காவில் நீர்நிலைகளின் கரைகளைச் சீரமைக்கும் பணி#முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்



**-பி.சுரேகா**
சென்னை

வணக்கம். 2.11 25 அன்றைய தமிழ்நாடு பேப்பரில் முதல் பக்கத்தில் வந்த அரசியல் செய்திகள் எல்லாமே அருமை. மத்திய அரசு மாநில அரசு என்னென்ன செய்கின்றன என்று மிக அழகாக சொன்னது பாராட்டுக்குரியது. இன்றைய பஞ்சாங்கம் மிகவும் அருமையான நாளாக எனக்கு நல்ல விடியலாக இருந்தது.
திருக்குறளை மிக அருமையான பொருளுடன் படித்து மகிழ்ந்தேன். ஸ்ரீ பேயாழ்வார் திரு அவதார உற்சவம் சாற்று முறை என்ற படங்களும் செய்தியும் புல்லரிக்க வைத்தது மனமார்ந்த பாராட்டுக்கள்.
சமையலுக்கு சுவை சேர்ப்பது மட்டும் அஞ்சறைப்பெட்டி அல்ல இதயத்தின் ஆரோக்கியத்தையும் காக்கும் ஒரு அருமையான பெட்டி என்ற தகவலை நலம் தரும் மருத்துவ பகுதியில் படித்து மகிழ்ந்தேன். பாராட்டுக்கள்
டெங்கு சிக்கன் குனியா நோய்கள் குறைந்துள்ளது என்று நம் சுகாதார அமைச்சர் அவர்கள் சொன்ன தகவல் மகிழ்ச்சியாக இருந்தது. பள்ளியில் படிக்கும் 10 லட்சம் மாணவர்களுக்கு இலவசமாக கணினி கொடுத்தது பாராட்டுக்குரிய செய்தி. இதனால் அவர்களுடைய படிப்பு மிகவும் அருமையாக அமைவது உறுதி.
தினம் ஒரு தலைவர்கள் பகுதி நாளுக்கு நாள் மெருகேறிக்கொண்டே வருகிறது. அதில் வரும் வரலாற்று தகவல்கள் மிகவும் அருமையாக உள்ளது. இன்று ஷாயாம்ஜி கிருஷ்ண வர்மா என்று அவர்களின் வரலாறும் அவர் பற்றிய புகைப்படம் அவர் பெயரில் வெளிவந்த அஞ்சல் தலையும் பார்ப்பதற்கே மகிழ்ச்சியாக இருந்தது .
பல்சுவை களஞ்சியம் பகுதியில் வந்த பீட்ரூட் பற்றி படித்தது மகிழ்ச்சியாக இருந்தது சிவப்பு நிற அந்த காய் ஒரு சர்வ நிவாரணி என்ற செய்தி இன்பத்தேனாக காதுகளில் வந்து ஒலித்தது .அதில் வந்த ஜோக் மிக அருமையாக படித்து சிரிக்க வைத்தது பாராட்டுக்கள்.
ஜோதிடம் அறிவோம் என்ற பக்கத்தில் வரும் செய்திகள் எல்லாமே மிகவும் அருமை எந்தெந்த ராசிக்காரர்கள் ஏமாற்றத்திற்கு ஆளாவார்கள் என்ற செய்தி படித்து அதிர்ச்சியாக இருந்தது..
இந்த வார ராசிபலன் மிகவும் அருமை படிக்கும் போது இந்த வாரம் எப்படி நம் ராசிக்கு இருக்கும் என்று புரிந்து கவனமுடன் நடக்க உதவியது.
சுற்றுலா பக்கத்தில் வரும் அனைத்து தகவல்களும் மிகவும் அருமை பாராட்டுக்கள் .
சுற்றுச்சூழல் பூங்காவில் நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணியை நம் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார் என்ற செய்தி நீர் நிலைகளை பராமரிக்கும் அவருடைய பணிக்கு பாராட்டு சொல்ல தோன்றியது.
பத்து ஆண்டு ராணுவ ஒப்பந்தம் இந்தியா அமெரிக்கா கல்வித் திட்ட செய்தி அயல் நாட்டு செய்தியாக ஆர்வமுடன் படித்து மகிழ்ந்தேன்..
ஒற்றை நாகரீகத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட உலகத்திலேயே மிகப்பெரிய அருங்காட்சியகம் எகிப்தில் திறக்கப்பட்ட செய்தி அங்கேயே என்னை அழைத்துச் சென்று அந்த அருங்காட்சியகத்தை பார்வையிட வைத்தது போல ஒரு புல்லரிப்புடன் படிக்க வைத்த அயல்நாட்டு செய்தி.
ஞாயிறு தானே என்று தாமதமாக கூட மனமில்லாமல் அலைபேசியில் விடியலில் வரும் தங்களுடைய பேப்பரை படித்து மகிழ உதவும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



**-உஷா முத்துராமன்**

SEND AN EMAIL
WITH Hi
TO
tamilnaduepaper @gmail.com
RECEIVE OUR DAILY
NEWSPAPERS & MAGAZINES

இடம் விற்பனைக்கு
3.5 சென்ட்,
சிங்காநல்லூர் to ஹோப்ஸ்
மெயின் ரோடு, ராமானுஜ நகர்,
93443 65645
99443 03030

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

திருச்சி கே.கே.நகர்
ஐயப்பா நகரில்
2,100 சதுரடி நிலத்தில்
1000 சதுரஅடி பில்டிங்கில்
வீடு விற்பனைக்கு உள்ளது
Rs.90 Lakhs
Cell:9585400555

WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756

FLAT URGENT SALE
திருச்சி பஞ்சப்பூர் புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில்
2BHK FLAT
Best Price Deal
குறைந்த விலை!
சிறந்த லொக்கேஷன்!
சிறந்த முதலீடு!
89031 05956

திருச்சி காமதேனு நகர், போலீஸ் காலனி IT Park அருகில்
சகல வசதிகளுடன்
புதிய வீடு விற்பனைக்கு உள்ளது.
விலை ரூ.41,00,000/-
பத்திரப்பதிவு இலவசம்
தொடர்புக்கு:
83000-11186
94439-05278

COMMERCIAL BUILDING FOR RENT
800 Square Feet Second Floor building in Abees Tower at the entrance of Carmel Mount Road, Ponnappa Nadar Colony in available for Monthly rent. It is Suitable for I.T.Company
Rent: Rs.15,000 P.M
Contact: 9442214477

K.R.PROPERTY
தீபாவளி வாழ்த்துக்கள்!
கோவை
திருச்சி ரோடு, இராமநாதபுரம், சிங்காநல்லூர்
பகுதிகளில்
2.5 / 5.5 / 7 / 10
செண்ட் சைட்டுகள்
வாங்க / விற்க
8122330572

Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889

வீடு வாடகைக்கு

திருச்சி குண்டூர் MIET கல்லூரி அருகில் 1BHK 2BHK வீடு வடகைக்கு
Contact Whatsapp
9952827579

வாடகைக்கு
நாகர்கோவில் மணிமேடை அருகில் 2000 ச.அடி Bldg, கார் பார்க்கிங் உடன் Bank, Finance, Software Company & Training Centre-க்கு ஏற்றது.
Cont: 9994811609
8608864937

BUILDING FOR RENT
in Arasur, Coimbatore
66758 sq.ft
Equal partition available
(Ready to Occupy in 30 Days)
Building width : 70 mtr.
Building Length : 88.6 mtr.
Power : 350 KVA and above
✆ 90954-30303
peninsulamarimuthu@gmail.com

AllIndiaJobz
FREE Job Placements
www.allindiajobz.com

FREE JOB PLACEMENT
WHATSAPP US / CALL US
9337501889/7789941009
Urgent Hiring !! Hurry Up
Multiple Job Openings for Freshers
Refer Your Friends who are searching jobs

வணிக வளாகம் வாடகைக்கு
அரியலூர்
பஸ் நிலையம் அருகில், ஜெயங்கொண்டம் ரோட்டில் சுமார் 800 ச.அடி கொண்ட தரைத்தளம் வாடகைக்கு உள்ளது.
Showroom / நிதி நிறுவனத்திற்கு ஏற்றது.
தொடர்புக்கு:
9445659427

வள்ளியூர் அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை 3 செண்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை 16 செண்ட் ரூ. 48 லட்சம்
9940 20 7778

இடம் விற்பனைக்கு
3.5 சென்ட்,
சிங்காநல்லூர் to ஹோப்ஸ் மெயின் ரோடு, ராமானுஜ நகர்,
93443 65645
99443 03030

வள்ளியூர் அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை 3 செண்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை 16 செண்ட் ரூ. 48 லட்சம்
9940 20 7778

OFFICE
SPACE FOR RENT @ GUINDY
+ 1st Floor 1300-sft
+ 2nd Floor 1300-sft
+ 3rd Floor 1300-sft
9841329316

திருச்சி கே.கே.நகர்
ஐயப்பா நகரில்
2,100 சதுரடி நிலத்தில் 1000 சதுரஅடி பில்டிங்கில் வீடு விற்பனைக்கு உள்ளது
Rs.90 Lakhs
Cell: 9585400555

வள்ளியூர் NH அருகில்
வீட்டுமனை 4 செண்ட் ரூ. 4 லட்சம்
வீட்டுமனை 5 செண்ட் ரூ. 2 லட்சம்
9940 20 7778

குடோன் வாடகைக்கு
சத்திரோடு, கரட்டுமேடு காப்பிக்கடை அருகில்
3800 சதுரஅடி
குடோன் வாடகைக்கு.
98940 83747

மனை பிரிவுக்கு நல்ல இடம்
59½ சென்ட்
தென்னந்தோப்பு
இரணியல்
ரயில் நிலையம் அருகில்.
9952982749

TYRE கம்பெனி STAFF 50 நபர் தங்குவதற்கு
மாதவரம் மற்றும் திருவொற்றியூர் சுற்றுவட்டாரத்தில் ROOM வாடகைக்கு தேவை
91765 21641, 97899 74898

FLAT URGENT SALE
திருச்சி பஞ்சப்பூர் புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில்
2BHK FLAT
Best Price Deal
குறைந்த விலை!
சிறந்த லொக்கேஷன்!
சிறந்த முதலீடு!
89031 05956

இடம் விற்பனைக்கு
இராமன்புதூர் மீன் சந்தை அருகில் 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
ஆரல்வாய்மொழி to முப்பந்தல் மெயின்ரோட்டில் 15 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
8300134494
9360378520

COMMERCIAL SPACE FOR RENT
@ Ganapathy Sathy main road
(Opp Kannan Departmental Store)
2000 Sqft
Ist floor suitable for OFFICE & COMMERCIAL PURPOSES
98422 25310

VILAMBARAM
WANTED
10 SMART FEMALE
Telecallers
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience Both can apply.
SEO & DIGITAL MARKETING COMPANY SINCE 2020
Don't miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009

Job @ Chennai
www.vilambaram.com

**YESEM GROUP**
INVITES
AGENT
DEVELOPMENT OFFICER
BUSINESS DEVELOPMENT MANAGER
CONTACT:
YESEM CHITS PRIVATE LTD (Regd.)
No.159, First Floor, Madhavaram High Road,
Perambur, Chennai - 600 011.
(Near Canara Bank, Adj.to Appollo Computer Lab )
Cell No. 98402 78805 / 99447 88056
Land Line : 044 - 45938805 / 044 - 46148805
A NEW WAY TO BORROW, SAVE AND GROW

**WANTED**
✦MARKETING / SALES EXECUTIVE &
✦MACHINE OPERATOR
Offer: Salary Higher Than Current + Good Growth Opportunity .
fresher & experienced can apply .
GLASSTERR WINDOW SYSTEMS
Thudiyalur
(UPVC WINDOW INDUSTRY )
89254 54433

**WANTED**
வெல்டர்
பிட்டர்
ஹெல்பர்
வார சம்பளம் வழங்கப்படும்
PERFECT ENGINEERINGS
No.36, 9th Street,Subramaniyam palayam, G.N.Mills, Cbe - 29
63745 20793
73730 10107
SAA



Make Money Without Investment Through Mobile
Call : 9337501889

**WANTED**
CHENNAI PROJECT PIPING
➤ FABRICATORS
➤ TIG / ARC WELDERS
➤ SUPERVISORS
➤ GRINDERS
90920 08000 / 99421 71692
prateeshengineering@yahoo.co.in

**PERMANENT JOB**
➤ Plumbers ( பிளம்பர்கள் )
➤ Water Purification Service Technicians
MNC COMPANY.
9003101308

**WANTED**
Campus Manger
Store Manager
Assistant Librarian (B.LS & M.LS)
ITI Electrical (Electrician / Wireman) ( 0-5 yrs Exp)
Drivers for school & college
8925803086
recruitmenthospital.tn@gmail.com

**KEN Guarding & Facility Services**
அண்ணா நகர், பூந்தமல்லி, இருங்காட்டுக்கோட்டை,புழல், பொத்தேரி,மணலி ஆகிய பகுதிகளுக்கு
★ S/M -Rs.24,000 - 4 Off.
★ Bouncers-Rs.22,000 - 4 Off.
★ ASO -Rs.21,000 - 4 Off.
★ SG & LG -Rs.18,000 - 4 Off.
மற்றும் Operation Manager & Field Officers தேவை
Salary: Rs.25,000 to Rs.35,000
11,Sippoy lane,Karayanchavadi,Ch-56
8939829153/54/56
8939070473

**தேவை**
டீசல் மெக்கானிக் & மார்க்கெட்டிங் எக்சிகியூட்டிவ்
முழு கேரளா / சிறந்த சம்பளம் + ஊக்கத் தொகை
தொடர்புக்கு:
95447 71700
94007 11808

**CHENNAI SAKTHI STEEL PRODUCTS (P) LTD**
WANTED
+POWER PRESS OPERATORS
+TURNER
+POLISHERS
278, SIDCO Industrial Estate, Thirumudivakkam, Chennai-44
7558111031

5 வருட அனுபவமுள்ள கார் டிரைவர்கள்
சம்பளம் Rs. 22,000 to 25,000.
வேலை நேரம் 12 hrs.
& எலக்ட்ரீஷியன் தேவை.
நேரில் அணுகவும்,
43,கண்ணதாசன் சாலை, தி.நகர், செ-17
Ct: 94454 32752

MITSUBISHI ELECTRIC AIR CONDITIONERS
WANTED EXPERIENCED
**Sales Engineers**
for Ventilation Products
THE AC ZONE PVT LTD CHETPET
CONTACT@THEACZONE.COM
WHATSAPP 9841068380

**டிரைவர் தேவை**
Chairmanக்கு Automatic கார் ஓட்ட அனுபவமுள்ள டிரைவர் தேவை
98414 41844
93455 31270

**AMBAL TECH**
JUNIOR MAINTENANCE
Support Job for Automobile dealer in COIMBATORE. 1-2 yrs Preferably in Electrical Field ITI / Polytechnic
Ph:99430 26294
SAA
hr.ambaltech@gmail.com

செக்யூரிட்டி வேலைக்கு ஆண்/பெண் தேவை
சம்பளம் : 12000 - 16000
தங்கும் இடம் + உணவு இலவசம்
இடம் : கோவை, திருப்பூர்
படிப்பு : 10-ம் வகுப்பு
வயது : 21 முதல் 55 வரை
சாய் பாபா செக்யூரிட்டி சர்வீஸ்
பல்லடம்
திருப்பூர் - 641664
91598 90598

**டிரைவர் தேவை**
HIGH -END ஆட்டோமேடிக் கார் ஓட்டுவதற்கு அனுபவமுள்ள டிரைவர் தேவை
சம்பளம்: 25,000 + அல்லவன்ஸ்
Age 25 to 45 | 2 Wheeler Must.
அண்ணாநகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், கொளத்தூர், ரெட்டேரி அருகில் உள்ளவர்கள் மட்டும் அணுகவும்.
A52, Ankur Palm Springs No. 4 CTH Rd, Padi, Ch-50 Next to Padi Saravana Store
More Details: 9841 00 2005

**PERSONAL**
கார் டிரைவர் தேவை
Qualified Car Driver
VM Garden Outer Ring Road , West Tambaram
Age Below 40
Mail : vmgarden9@gmail.com
WhatsApp: 88700 02462

**WANTED IN CIVIL**
Senior Engg (6-10 Yrs)
Junior Engg (3-5 Yrs)
Site supervisor (1-2 Yrs)
Asst. Stores Manager (3-5 Yrs)
Quantity Surveyor (7-10 yrs)
75300 69901
work@masterlinestructures.com

கோவை காந்திபுரத்தில் உள்ள Non-Veg. ஹோட்டலுக்கு
ஹவுஸ்கீப்பிங் & சப்ளையர்கள்
வேலைக்கு தேவை
72000-10550
CKNB

பள்ளி வாகனத்தில் சென்று வர, குழந்தைகளை கவனிக்க பெண் பணியாளர்கள் தேவை
விண்மீன் ஐசிஎஸ்இ பள்ளி
பார்வதிபுரம், நாகர்கோவில்
செல் : 9080206589

**PEST CONTROL OPERATOR**
பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை
Cell : 99948 43057
93847 25836


ADVERTISE WITH US
CONTACT US
9438610756

**LE RAJ COURTYARD**
GUMMIDIPOONDI
Wanted
HOTEL RECEPTIONIST
GOOD COMPUTER SKILL, ENGLISH SPEAKING.
SALARY 15K - 20K
WITH FOOD AND ACCOMMODATION
Contact:
9940763333


**சமையல் மாஸ்டர் தேவை**
கோவை இருகூர் L&T பைபாஸில் உள்ள பிரபல மருத்துவமனை கேன்டீனுக்கு அனுபவமுள்ள சமையல் மாஸ்டர் தேவை
94887 80957
99522 17606

**வீட்டு வேலைக்கு ஆள் தேவை**
வீட்டில் தங்கி இருந்து வீட்டு வேலைகளை செய்யத்தக்க நல்ல ஆரோக்கியமாக உள்ள பெண் தேவை தகுதிக்கேற்ற சம்பளம் தரப்படும்.
புரோக்கர்கள் தவிர்க்கவும்.
தொடர்பு கொள்ள:
94888 88223

URGENTLY REQUIRED
♦AC DUCTMAN
♦AC TECHNICIAN
♦CHILLER ELECTRICIAN
♦COPPER PIPE BRAZING
♦PIPE FITTER
♦PIPE WELDER
♦MECHNICAL FITTER
♦HVAC PROJECT MANAGER
♦MEP HELPER
Last drawn Salary 20% hike
RAPID HVAC SOLUTIONS PVT LTD
Poonamalle, Chennai 600123
enquiry@rapidhvac.co
vivekpandian@rapidhvac.co
90439 49587,78458 29587



# பல்சுவை களஞ்சியம்




## பெருமாள் கோவில்களில் தீர்த்தம் கொடுப்பது ஏன் தெரியுமா?

கோவில்களில் தீர்த்தம் வழங்குவதற்கு ஆன்மீக ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் பல காரணங்கள் உள்ளன.

ஆன்மீகக் காரணங்கள்.

**தெய்வீக ஆசீர்வாதம்:**
தீர்த்தம் என்பது அபிஷேகம் செய்யப்பட்ட புனித நீர். இது இறைவனின் பாதங்களில் இருந்து வருவதாக நம்பப்படுகிறது. இதை உட்கொள்வது இறைவனின் நேரடி ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குச் சமம்.

**பாவ நிவர்த்தி:**
தீர்த்தம் குடிப்பது, தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்களைப் போக்கும் சக்தி வாய்ந்தது என்று நம்பப்படுகிறது. இது ஆன்மாவைத் தூய்மைப்படுத்துகிறது.

**அமைதி மற்றும் நேர்மறை ஆற்றல்:**
மந்திரங்கள் ஓதி இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படும்போது, அந்த நீர் நேர்மறை அதிர்வுகளையும், ஆற்றலையும் தன்னுள்ளே சேமித்துக்கொள்கிறது. இதை உட்கொள்ளும்போது, அந்த ஆற்றல் பக்தர்களுக்குக் கிடைக்கிறது.

**மோட்சம்:**
"பிரதமம் தேக சுத்தியர்த்தம் த்விதீயம் ஆத்ம சுத்திகம் த்ருதீயம் மோக்ஷ சித்தியர்த்தம்" என்ற மந்திரத்தின்படி, முதல் முறை உடலைத் தூய்மையாக்கவும், இரண்டாம் முறை ஆன்மாவைத் தூய்மையாக்கவும், மூன்றாம் முறை மோட்சம் பெறவும் தீர்த்தம் உட்கொள்ளப்படுகிறது.

**அறிவியல் காரணங்கள்:**
ஆரோக்கிய நன்மைகள்: தீர்த்தம் பொதுவாக துளசி, ஏலக்காய், கிராம்பு, பச்சை கற்பூரம், குங்குமப்பூ போன்ற மருத்துவ குணங்கள் நிறைந்த பொருட்களுடன் தயாரிக்கப்படுகிறது.

**உடல்நலத் தீர்வுகள்:**



துளசி இலைகள் காய்ச்சல், சளி, இருமல் போன்றவற்றை எதிர்த்துப் போராடும். கிராம்பு வாய் துர்நாற்றம் மற்றும் பல் நோய்களைத் தடுக்கும். இந்த மூலிகைகள் கலந்த நீரைத் தினமும் உட்கொள்வது இரத்தத்தைச் சுத்திகரிக்க உதவுகிறது மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

**உலோகப் பாத்திரங்களின் பலன்கள்:**

தீர்த்தம் செம்பு, பித்தளை அல்லது வெள்ளி போன்ற உலோகப் பாத்திரங்களில் வைக்கப்படுகிறது. இந்த உலோகங்கள் பாக்டீரியாக்களை அழிக்கும் மற்றும் உடலுக்குத் தேவையான அத்தியாவசிய தாதுக்களை (காப்பர் போன்றவை) வழங்கக்கூடிய இயற்கையான பண்புகளைக் கொண்டுள்ளன.

நினைவாற்றலை மேம்படுத்துதல்.
துளசி போன்ற மூலிகைகள் நரம்பு மண்டலத்திற்கு வலுவூட்டி, நினைவாற்றலை அதிகரிக்க உதவும்.
கோவில் தீர்த்தம் என்பது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் மருத்துவக் கலவை மற்றும் தெய்வீகத் தொடர்பை ஏற்படுத்தும் ஒரு புனிதப் பிரசாதம் ஆகும்.



**ப.கோபிபச்சமுத்து**
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

## சூரசம்ஹாரம் நடக்காத ஒரே ஒரு முருகன் தலம்

கந்தசஷ்டி விரதமும், சூரசம்ஹார நிகழ்வும் முருகனின் படைவீடுகளில் மிக கோலாகலமாக கடைபிடிப்பது வழக்கம். ஆனால் முருகனின் ஒரு படைவீட்டில் மட்டும் இந்த கந்தசஷ்டி விழா நடக்காமல் மிக அமைதியாக இருக்கும். அப்படிப்பட்ட முருகனின் படைவீடு தான் திருத்தணி. முருகனின் 5ஆம் படைவீடு முருகப்பெருமான் சினம் தணிந்து, வள்ளியை மணம் புரிந்து மிக அமைதியாக அமர்ந்து காட்சி தரக்கூடிய தலம் தான் திருத்தணி கோவில் ஆகும்.



தணிகை என்பது சினம் தணிதல். திருத்தணி முருகன் கோயிலில் முருகப்பெருமான் சினம் தணிந்து பக்தர்களுக்கு அருளுகின்றார்.

இதன் காரணமாக இந்த கோயிலில் மட்டும் சூரசம்ஹாரம் திருவிழா நடைபெறுவது இல்லை. இருப்பினும் முருகனின் அருளைப் பெறக்கூடிய கந்தசஷ்டி விழா மட்டும் கொண்டாடப்படுகிறது.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

# மீம்ஸ்









## விடுகதை



| | |
|---|---|
| அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன? | தண்ணீர் |
| நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? | கைகாட்டி |
| தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? | அன்னாசிப்பழம் |
| ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன? | காட்ஸ் |
| கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? | பஞ்சு |



# ஜோக்ஸ்

சில டாக்டருக்கும் சில ஆக்டருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?
இரண்டு பேரும் தியேட்டருக்கு வரவழைச்சு தான் கொல்லுவாங்க!

--------------------

சிவகாசிக்கும் நெய்வேலிக்கும் என்ன வித்தியாசம்?
சிவகாசில காச கரியாக்குவாங்க.
நெய்வேலிலே கரிய காசாக்குவாங்க!

--------------------



FILE க்கும் PILE க்கும் என்ன வித்தியாசம்?
FILES அ உட்கார்ந்து பார்க்கணும்.
PILES க்கு பார்த்து உட்காரணும்.

--------------------

செல்போனுக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?
மனிதனுக்கு கால் இல்லேன்னா பேலனஸ் பண்ண முடியாது.
செல் போன்ல பேலன்ஸ் இல்லேன்னா கால் பண்ண முடியாது.

----------------

ஓவ்வொரு இளைஞனின் மன உளைச்சலுக்கும் காரணம்?
மதிப்பெண்ணும் மதிக்காத பெண்ணும்!

--------------------

வசதி இல்லாதவன் ஆடு மேய்க்கிறான்!
வசதி உள்ளவன் நாய் மேய்க்கிறான்!

--------------------

ஆண்களை அதிக தூரம் நடக்க வைக்கும் விஷயங்கள் ரெண்டு?
ஒன்று பிகர்,
மற்றொன்று சுகர்!

--------------------

கணிப் பொறிக்கும் எலிப் பொறிக்கும் என்ன வித்தியாசம்???
கணிப் பொறியில் எலி வெளியே இருக்கும்.
எலிப் பொறியில் எலி உள்ளே இருக்கும்..

--------------------


சிரித்து சிந்தியுங்கள் இல்லைன்னா சிந்தித்து சிரியுங்கள்.....



# பன்முகம்



## ஆரோக்கியமாக வாழ்வதற்கான உணவு முறைகள்



நம் உணவு முறையில் ஒரு நாளைக்கு இரண்டு முறை உண்பதே போதுமானது. எனினும் பழக்கத்தை மாற்ற இயலாதவர்கள் மூன்று முறை உண்ணலாம். சாப்பிட்ட சாப்பாடு வெளிவரும் வண்ணம் வயிறு முட்டச் சாப்பிடக்கூடாது. வயிற்றில் பாதியளவு உணவு, கால்பகுதி தண்ணீர், அடுத்த கால்பகுதி காற்றின் வருகைக்கு ஏற்றபடி வயிற்றில் இடம்விட்டுச் சாப்பிடுவதே மிதஉணவுப் பழக்கமாகும்.

அதிக அளவிற்கு உண்டால் நோய் வரும். ஆயுள் குறையும். எனவே எப்போதும் வயிறு புடைக்க, மூச்சு முட்ட உண்ணக்கூடாது. அளவிற்குக் குறைவாக உண்டாலும் உடலில் சக்தி குறையும். எனவே தேவையான அளவு அதாவது அதிகமாகவும் இல்லாமல், குறைவாகவும் இல்லாமல் உண்ண வேண்டும். நமக்குப் பசியே இல்லாத பொழுது கடனே என்று, மேலும் மேலும் உண்ணக்கூடாது. பசித்தே புசிக்க வேண்டும். பகலில் உணவு சிறப்பான விருந்தென்றால் இரவில் எதுவும் உண்ணக்கூடாது. மன உழைப்பு அதிகம் உள்ளவர்கள் அரிசி உணவு குறைவாகவும், கோதுமை, பால், வெண்ணெய், தேன், பாதாம் பருப்பு, முந்திரிப்பருப்பு, தக்காளிச்சாறு, ஆப்பிள், திராட்சை, மாதுளை, ஆரஞ்சு, பசலைக்கீரை, புடலங்காய், பாகற்காய், ஆகிய ஊட்டச்சத்துக்களையும், புதிய காய்கறிகளையும் நிறைய உண்ண வேண்டும்.


உடல் உழைப்பு உள்ளவர்களுக்கு, உணவு அதிகம் தேவை. இவர்கள் அரிசி, கோதுமை, நெய், தயிர், உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, நிலக்கடலை, நல்லெண்ணெய் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

உடல் உழைப்பின்றி நாற்காலியில் அமர்ந்து பகல் முழுவதும் வேலை பார்ப்பவர்கள் உணவைக் குறைக்க வேண்டும். உடல் உழைப்பு இல்லாததால் உண்ணும் உணவானது உடலில் கசடுகளாகத் தங்கி துன்பம் விளைவிக்கும். அதனால் நாள் முழுதும் நாற்காலியில் அமர்ந்து வேலை செய்பவர்கள் எளிதில் செரிக்கக் கூடிய காய்கறிகள், பழங்கள் மற்றும் ஒரு கப் அளவான சாதம் எடுத்துக் கொண்டு அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு கால் வயிற்றுக்கு நீர் குடித்தாலே சரியானது. இது மேலும் இவர்கள் கொழுப்பு சார்ந்த எண்ணெய் பொருட்கள், பால், தயிர், வெண்ணெய், நெய், தேங்காய் போன்றவற்றில் தயாரான உணவுப் பொருட்களைக் குறைத்தால் வீணாக உடலில் கூடும் கொழுப்புகளைக் குறைத்து ஆரோக்கியமாக வாழலாம்.

மூன்று வேளையும் அதிக உணவுகளை உண்பவர்கள் தம் உடலில் தேவை இல்லாத நோய் வளரத் தானே காரணமாக அமைந்துவிடுகின்றனர். இவ்வாறு அதிகம் உண்பதால் இரைப்பையின் உறுதித்தன்மை குறைந்து தொப்பை உண்டாகிறது. வயது முதிர்ந்த பொழுது, பாதியளவே உண்பவர்கள் நீண்டகாலம் வாழ்கின்றனர்.

இதில் சர்க்கரை வியாதி உடையவர்கள் வயிறு புடைக்க உண்ணாமல் மூன்று வேளை உணவை நான்கு அல்லது ஐந்து வேளைகளில் உண்ணலாம்.

## உடல் பருமனால் பாலியல் உறவில் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை



உடல் பருமனாக இருக்கும் பெண்கள் நிறைய பேருக்கு, பாலியல் உறவின்போது தாழ்வு மனப்பான்மை ஏற்படும். அவர்களுடைய தாழ்வு மனப்பான்மையால் அதிகமாக பாலியல் உறவு வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

கருத்தரிப்பதற்கு தாம்பத்திய உறவு சரியாக இருக்க வேண்டும். அதிக எண்ணிக்கையில் தாம்பத்திய உறவில் ஈடுபட்டால்தான் கருத்தரிக்கின்ற வாய்ப்புகள் ஏற்படும்.

அவர்களுக்கு உடல் பருமனை பற்றிய தாழ்வு மனப்பான்மை இருப்பதால், அவர்களுக்குள் ஒரு எதிர்மறை உணர்வு உருவாகும் நிலையில், கண்டிப்பாக தாம்பத்திய உறவில் பிரச்சனை வரும். அப்படி இருக்கும்போது கருத்தரிப்பதற்கான வாய்ப்புகளும் குறைவாகும். மேலும் நாளமில்லா சுரப்பிகளில் பாதிப்பை ஏற்படுத்துதல், மன அழுத்தத்தை உருவாக்குதல் ஆகியவையும் கருத்தரிப்பதை பாதிக்கும்.

இவை தவிர உடல் பருமனால் பல பெண்கள் எதிர்நோக்குகின்ற முக்கியமான பாதிப்பு சர்க்கரை வியாதி. ஏனென்றால் கொழுப்பு அதிகமானால் சர்க்கரை நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். அவர்களுக்கு குளுக்கோஸ் தன்மையில் மாறுபாடு ஏற்பட்டு சர்க்கரை நோய் வருவதால், பல நேரங்களில் இந்த பெண்களுக்கு கருத்தரிப்பதிலும் பிரச்சனை வரும், ஒருவேளை கருத்தரித்தால்கூட, கரு வளரும்போதும் பிரச்சனை வரும். மேலும் சர்க்கரை அதிகமாக இருப்பதால் இந்த பெண்களுக்கு முட்டைகளின் தரம் குறைவாகும்.

ஏனென்றால் கார்போஹைட்ரேட் மற்றும் கொழுப்பு ஆகியவை அதிகமாகும்போது, அதில் இருந்து வருகிற சில ரசாயனங்களால் கரு முட்டைகளுக்கான குரோமோசோம்களில் உள்ள இணைப்புகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, அதனால் கரு முட்டைகளின் தரம் பாதிக்கப்படும்.

சில பெண்களுக்கு உடல் பருமன் காரணமாக ரத்த அழுத்தம் அதிகமாகும்.

சிலருக்கு இருதய நோய் ஏற்படலாம். மேலும் சில பெண்களுக்கு உடல் பருமன் அதிகமானால் மன அழுத்தம் ஏற்படும். இதுவும் கருமுட்டைகளின் தரம் பாதிக்கப்படுவதற்கு முக்கியமான காரணங்கள் ஆகும்.

உடல் எடை குறைவாகும்போது அவர்களுக்குள் ஒரு நேர்மறை சிந்தனை வரும். அவர்களின் தாம்பத்திய உறவில் முன்னேற்றம் ஏற்படும். இதன் மூலமாக கருத்தரிக்கின்ற வாய்ப்புகள் அதிகமாகும்.

## எதைச் சாப்பிட்டு எதைத் தவிர்க்க வேண்டும்?



1. தேனும், நெய்யும் சம அளவில் கலந்தால் நஞ்சாகிவிடும். எனவே இரண்டையும் சேர்த்து உண்ணக்கூடாது. இவற்றில் ஏதாவது ஒன்றை ஒரே நேரத்தில் சாப்பிடவேண்டும்.
2. வாழைப்பழத்தைத் தயிர், மோருடன் கலந்து சாப்பிடக்கூடாது. வாழைப்பழம் சாப்பிட்ட உடனும், தயிர், மோர் சாப்பிடக்கூடாது.
3. பழங்களைத் தனியேதான் சாப்பிட வேண்டும். சாப்பாட்டுடன் சேர்ந்து சாப்பிடக்கூடாது. அதன் தாதுச்சத்து உணவுடன் கலந்து பலனற்றுப் போய்விடும்.
4. வெண்ணெயுடன் காய்கறிகளைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது.
5. மீன், கருவாடு சாப்பிட்ட உடன் பால், தயிர் சாப்பிடக்கூடாது. அவ்வாறு மீறி உண்டால் “வெண் மேகம்” போன்ற நோய்கள் வர வாய்ப்பு உள்ளது.
6. உடல் மெலிந்தவர்கள், புழுங்கலரிசி சாதம் சாப்பிட வேண்டும்.
7. உடல் பருத்தவர்கள் கோதுமை உணவு உண்பது நல்லது.
8. ஆஸ்துமா உள்ளவர்கள், சளி அதிகம் உள்ளவர்கள் தக்காளி, பூசணிக்காய், முள்ளங்கி ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.
9. மூல நோய் உள்ளவர்கள் முட்டை, அதிக காரம், மாமிச உணவு ஆகியவற்றை உண்ணக்கூடாது.
10. நெய்யை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து உபயோகிக்கக்கூடாது.
11. காலையில் வெறும் வயிற்றில் காப்பி, டீ குடிக்கக்கூடாது. ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டுப் பின்னர், காப்பி, டீ போன்றவைகளைக் குடிக்கலாம்.
12. அல்சர் உள்ளவர்களும், மஞ்சள் காமாலை உள்ளவர்களும் மிளகாய், ஊறுகாய் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.
13. பெண்கள் வீட்டிற்குத் தூரமான நாட்களில் கத்தரிக்காய், எள், அன்னாசி, பப்பாளி ஆகியவற்றைச் சேர்த்து கொள்ளக்கூடாது.
14. தோல் நோய் உள்ளவர்கள் கத்தரிக்காய், புடலங்காய், நிலக்கடலை, மீன், கருவாடு, அதிக காரம், அதிக புளிப்பு, கொத்தவரங்காய், பீன்ஸ் ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.
15. கோதுமையை நல்லெண்ணெயுடன் சமைத்துச் சாப்பிடக்கூடாது.
16. மூட்டுவலி, வாத நோயாளிகள், அசைவ உணவுகள், முட்டை, கிழங்கு வகைகளைச் சாப்பிடக்கூடாது.

## மாரடைப்பு ஆபத்தை தடுக்கும் ரம்புட்டான் பழம்



ரம்புட்டான், ஒரு சுவையான மற்றும் சத்தான பழம். இது மருத்துவ ரீதியாகவும் பல வகைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்த பழத்தின் வெளித்தோற்றம் முள் போன்று கரடுமுரடாக இருந்தாலும், உள்ளே இருக்கும் பழம் இனிப்பு மற்றும் புளிப்பு சுவை கலந்து ருசியாகவே இருக்கும். இந்த பழத்தின் தாயகம் மலேசியா மற்றும் இந்தோனேஷியா. தமிழ்நாட்டிலும் குறிப்பிட்ட பகுதிகளில் விளைகிறது. ரம்புட்டான் பழம், காயாக இருக்கும் போது பச்சை நிறத்திலும், பழுத்த பிறகு சிவப்பு அல்லது மஞ்சள் நிறமாகவும் மாறும்.

ரம்புட்டான் பழத்தில் கலோரி, வைட்டமின் சி, இரும்புச்சத்து, ஆன்டி ஆக்சிடென்ட், பொட்டாசியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், கார்போஹைட்ரேட், புரதம் ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன. உடல் பருமனால் அவதிப்படுவோர், ரம்புட்டானை அடிக்கடி சாப்பிடலாம். இதில் நீர்ச்சத்து அதிகம் இருப்பதால், நாக்கு வறண்டு போவதையும் தடுக்கும். இப்பழத்தில் உள்ள கார்போஹைட்ரேட், புரதம் ஆகிய சத்துக்கள், உடல் உழைப்புக்கு தேவையான ஆற்றலை அதிகரிக்க உதவும். உடல் சீரான வளர்ச்சி பெறவும் முக்கிய பங்காற்றும். ஆஸ்துமா மற்றும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும். கண் ஆரோக்கியத்தையும் காக்கும். உடலில் கெட்ட கொழுப்பை சேரவிடாமல் தடுக்கவும் செய்யும். இதனால், மாரடைப்பு அபாயம் குறைகிறது.

ரம்புட்டான் பழத்தை அடிக்கடி சாப்பிடுவதால், தலைமுடி, தோல் மற்றும் கை, கால் நகங்கள் பளபளப்புடன் இருக்கும். எலும்பு மண்டல வளர்ச்சிக்கு உதவக்கூடிய கால்சியம், பாஸ்பரஸ் போன்ற சத்துக்களும் இதில் உள்ளன. இரண்டு ரம்புட்டான் பழங்களை உட்கொள்வதன் மூலம் தினசரி வைட்டமின் சி தேவையை பூர்த்தி செய்ய முடியும். இதில் பாஸ்பரஸ் இருப்பதால் சிறுநீரகத்தில் இருந்து தேவையற்ற கழிவுகளை வெளியேற்ற உதவும். மேலும் திசுக்கள் மற்றும் உடல் உயிரணுக்களின் வளர்ச்சி, புத்துணர்ச்சி மற்றும் பராமரிப்பு போன்ற செயல்களில் இந்த பழம் முக்கிய பங்கு வகிக்கிறது.

ரம்புட்டானில் கலோரிகள் குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும் உள்ளது. அதனால் நீண்ட நேரம் வயிறு நிரம்பிய உணர்வைத் தரும். அதிகமாக சாப்பிட தோன்றும் எண்ணத்தையும் குறைத்துவிடும். இந்த பழத்தில் உள்ள கரையக்கூடிய நார்ச்சத்து தண்ணீரில் கரைந்து குடலில் ஜெல் போன்ற ஒரு பொருளை உருவாக்குகிறது. இந்த ஜெல் போன்ற பொருள் செரிமானத்தையும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதையும் மெதுவாக்க உதவுகிறது, இதனால் பசி உணர்வு குறைகிறது.

இந்த பழம், பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டிருந்தாலும், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள், சர்க்கரை நோயாளிகள், கர்ப்பிணிகள் மருத்துவரின் ஆலோசனைப்படி தான் சாப்பிட வேண்டும். வழுவழுப்பான இந்த பழத்தை குழந்தைகள் சாப்பிடும் பொழுது தொண்டையில் சிக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு கவனத்துடன் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

## வாக்குவம் கிளீனரை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை...



வீடுகளை சுத்தப்படுத்தும் வாக்குவம் கிளீனர்களை வாங்குவதாக இருந்தால், ஒருசில விஷயங்களை கவனத்தில் கொண்டு வாங்க வேண்டும். குறிப்பாக உங்கள் வீட்டுத் தேவைகளை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். குப்பையை உறிஞ்சும் திறன், உங்கள் வீட்டின் தளம் (டைல்ஸ், தரைவிரிப்புகள், மரம்) போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கிளீனரின் வகையை (கம்பியில்லா, தரைவிரிப்புக்கான, ரோபோடிக்) தீர்மானிக்க வேண்டும். கூடுதலாக, சக்கரங்கள், நீளமான வயர், குறைந்த சத்தம் மற்றும் நீடித்து உழைக்கும் தன்மையுடன் கூடிய சக்கரங்கள் போன்ற வசதிகளையும் கவனிக்க வேண்டும். அப்படி நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டியவை:

*** தரை வகைகள்**

உங்கள் வீட்டின் தரைப்பகுதியானது, எப்படி கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை பொறுத்துதான், வாக்குவம் கிளீனரை தேர்வு செய்யமுடியும். தரைவிரிப்புகள், டைல்ஸ், மரம் சார்ந்த தரை வேலைப்பாடுகள் என மாறக்கூடிய கட்டமைப்புகளுக்கு ஏற்ப, அவற்றை சுத்தமாக்கக்கூடிய வாக்குவம் கிளீனரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

*** பயன்பாட்டு வகைகள்**

வயர் இணைப்பு கொண்ட வாக்குவம் கிளீனர், வயர் இல்லாத கையடக்க கிளீனர், தூசியை மட்டும் சுத்தம் செய்யும் கிளீனர், தூசியுடன் சேர்த்து அசுத்த நீரையும் உறிஞ்சி எடுக்கும் கிளீனர் என பல வகைகள் இருக்கின்றன. சமீபகாலமாக ரோபோட்டிக் வகையிலான, தானாக நகரும் வாக்குவம் கிளீனர்களும் உள்ளன. நம்முடைய தேவையும், வீட்டின் கட்டமைப்புதான், வாக்குவம் கிளீனரை தீர்மானிக்கின்றன.


*** உறிஞ்சி திறன்**

750 வாட்ஸ், 1000 வாட்ஸ், 1250 வாட்ஸ் என தூசியையும், அசுத்த தண்ணீரையும் உறிஞ்சக்கூடிய மோட்டார்களும், ஒவ்வொரு வாக்குவம் கிளீனருக்கு ஏற்ப மாறுபடும். அதனால், நீங்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய வாக்குவம் கிளீனர்கள், அதிகமாக உறிஞ்சும் திறனை பெற்றிருக்க வேண்டும்.

*** சுலபமான பயன்பாடு**

வாக்குவம் கிளீனர்களை கொண்டு, வீட்டின் எல்லா அறைகளையும் சுத்தம் செய்ய இருந்தால் சில விஷயங்களை கவனித்து வாங்க வேண்டும். அதாவது, சக்கரங்கள் இருக்கக்கூடியதாக, நீளமான மற்றும் பல்வேறு வடிவங்களை கொண்ட உறிஞ்சு குழாய் இருக்கக்கூடிய வாக்கும் கிளீனரை தேர்வு செய்வதன் மூலம் விரும்பிய இடங்களில் சுலபமாக நகர்த்தலாம், சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்ளலாம். மேலும் சிறு குழந்தைகள் இருக்கும் வீடுகளாக இருந்தால், சத்தமில்லாத வாக்குவம் கிளீனர்களை தேர்ந்தெடுப்பது நல்லது.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## "கலைஞர் நாடகங்கள்" தொகுப்பு நூல்



முருகேச பாண்டியன் தொகுத்த "கலைஞர் நாடகங்கள்" தொகுப்பு நூல்களை முதல்வர் ஸ்டாலின் வெளியிட, இந்தியக் கம்யூனிஸ்டு மூத்த தலைவர் முத்தரசன் பெற்றுக் கொண்டார்.

## துளசி செடி, நெல்லி மரம் திருக்கல்யாணம்





**கோயம்புத்தூர் நவ.3:** கோயம்புத்தூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்று துளசி செடிக்கும், நெல்லி மரத்துக்கும் திருக் கல்யாணம் வேத மந்திரங்கள் ஒலிக்க, பெண்கள் பாட்டுக்கள் பாடி, துளசி செடிக்கும் நெல்லி மரத்திற்கும் வண்ண மலர்களால் அலங்கரித்து, கோடி ஜஞ்சம், வஸ்திரங்கள் சமர்ப்பித்து மகா தீபாரதனையும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் நெல்லி மரத்திற்கும், துளசி செடிக்கும் பூஜைகள் செய்து சுற்றி வந்து வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் அவைத்தலைவர் சுந்தரமூர்த்தி தலைமையில் நடந்தது. மாவட்ட செயலாளர் காந்தி ஆலோசனை வழங்கினார்.

## திருவிதாங்கோடு அரப்பள்ளி புதுப்பிக்கப்பட்டு திருநிலைப்படுத்தும் நிகழ்வு



திருவிதாங்கோடு அரப்பள்ளி புதுப்பிக்கப்பட்டு திருநிலைப்படுத்தும் நிகழ்வில் அமைச்சர் மனோ தங்கராஜ் பங்கேற்றார்.

## SIR- தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டம்



SIR- தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடந்தது.

## மாவட்ட பாஜக மகளிரணி அறிமுக கூட்டம்



சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி தலைவி தங்க சோபனா தலைமையில் மாவட்ட பாஜக மகளிரணி அறிமுக கூட்டம் நடந்தது.

## வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி



நெல்லை மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா தலைமையில் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கான 270 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் தேர்தல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

## குற்றாலத்தில் குவிந்த சுற்றுலாப்பயணிகள்



குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் குளிப்பதற்காக ஞாயிற்றுக்கிழமையான நேற்று சுற்றுலாப்பயணிகள் குவிந்தனர்.

## ரூ.38 கோடியில் மழைநீர் வடிகால் பணிகள்



ஆவடி ஜோதி நகர், அண்ணனூர் மற்றும் ரேவா நகர் பகுதிகளில் ரூ.38 கோடியில் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளஅமைச்சர்கள் நேரு, நாசர் அடிக்கல் நாட்டினர்.

## மாணவிகள் சிலம்பம் போட்டி



திருவண்ணாமலை எஸ்ஆர்ஜிடிஎஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் சிலம்பம் போட்டியில் மாவட்ட அளவில் வெற்றி பெற்றுள்ளதையடுத்து பள்ளியின் தாளாளர் பாராட்டினார்.

## கல்லறையை அலங்கரித்து கிறிஸ்தவர்கள் அஞ்சலி



கல்லறை திருநாளை முன்னிட்டு, சென்னை கீழ்ப்பாக்கம் கல்லறையில் தங்கள் குடும்பத்தினரின் கல்லறையை அலங்கரித்து கிறிஸ்தவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

## யோகநாத சுவாமி கோயிலில் கும்பாபிஷேகம்



சீர்காழி அருகே மங்கைமடம் யோகநாத சுவாமி கோயிலில் நேற்று கும்பாபிஷேகம் நடந்தது.

## வைகை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு



சிவகங்கை மாவட்ட பாசனத்துக்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

## ரவுசு மணி

இடங்களுக்கு நாம் போவது புண்ணியம் தரும்....
சில இடங்களுக்கு நாம் போகாமல் இருப்பது நமக்கு கண்ணியம் தரும் ...



V. முத்து ராமகிருஷ்ணன்

## சந்தனக்கூடு ஊர்வலம்



முத்துப்பேட்டை ஜாம்புவானோடை தர்காவில் கந்தூரி விழாவையொட்டி நேற்று அதிகாலை சந்தனக்கூடு ஊர்வலம் நடைபெற்றது

## மாரத்தான் ஓட்டம்



லஞ்ச ஒழிப்பு வாரத்தையொட்டி புதுச்சேரி கடற்கரை சாலையில் நடந்த மாரத்தான் ஓட்டத்தை சுற்றுலாத்துறை செயலர் மணிகண்டன் தொடங்கி வைத்தார்.

## கிராம சபை கூட்டம்



உள்ளாட்சிகள் தினத்தையொட்டி நடந்த கிராமசபை கூட்டத்தில் ராமநாதபுரம் கலெக்டர் சிம்ரன்ஜித் சிங் காலோன் பங்கேற்றார்.

## கம்பம் கத்தோலிக்க பேராலய கல்லறையில் சிறப்பு திருப்பலி




கல்லறை திருநாளை முன்னிட்டு கம்பம் ரோமன் கத்தோலிக்க பேராலய கல்லறையில் நேற்று சிறப்பு திருப்பலி நடந்தது.

## 3 மணி நேரம் வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம்



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் நேற்று விடுமுறை தினத்தையொட்டி பக்தர்கள் சுமார் 3 மணி நேரம் வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

# சுற்றுலா: மேகங்களுக்கிடையில் உணவருந்தும் புது அனுபவம்

மனிதனின் கனவுகளில் "வானில் பறப்பது" என்பது பண்டைய காலத்திலிருந்தே இருந்தது. இன்று அந்தக்கனவு நிஜமாகிவிட்டது. விமானம் என்பது வேகமும் வசதியும் நிறைந்த அற்புதமான போக்குவரத்து வழி. பலருக்கும் விமானப் பயணம் என்பது வாழ்நாள் அனுபவமாக இருக்கும். குறிப்பாக, "முதல் விமானப் பயணம்" என்பது மனதில் என்றும் மறக்கமுடியாத நினைவாக நிலைத்து நிற்கும்.

முதல் முறையாக விமான நிலையத்துக்குள் நுழையும்போது ஒரு சிறிய திகில் மற்றும் மகிழ்ச்சி கலந்து இருக்கும். பாதுகாப்பு சோதனை, போர்டிங் பாஸ், கேட் நம்பர் போன்ற சொற்கள் புதிதாகத் தோன்றும். விமான நிலையத்தின் பிரம்மாண்டமான தோற்றமும் ஒளிரும் சூழலும் மனதை ஈர்க்கும். விமானத்தில் அமரும் தருணம் ஒரு புதிய அனுபவம். சாளரத்தருகே இருக்கை கிடைத்தால், வெளியே தெரியும் காட்சி நம்மை மயக்கத்தில் ஆழ்த்தும். விமானம் மெதுவாக ஓடத்தொடங்கி, வேகமாக ஓடும்போது இதயம் துடிக்கத் தொடங்கும். பின்னர், திடீரென்று தரையிலிருந்து மேலே எழும்பும் அந்த நொடியில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது போல் தோன்றும். நாமும் வானில் பறக்கிறோம்.

மேகங்களை நெருங்கிச் செல்லும் போதும், கீழே சிறிய வீடுகள், நதிகள், புலங்கள் பொம்மைகள் போலத்தோன்றும். விமானத்தின் சத்தம் கூட அப்பொழுது இனிமையாகவே கேட்கும். விமானப் பணியாளர்கள் அன்புடன் சேவை செய்வதும், விமானத்திலுள்ள அமைதியான சூழலும் பயணத்தை இன்பமாக்கும். முதல்முறையாக அனுபவிக்கும் "வானிலிருந்து உலகத்தை காணும் உணர்வு" உண்மையில் சொற்களில் விவரிக்க முடியாதது. அது சுதந்திரத்தின் சின்னம் போலவும், கனவுகள் நனவாகும் தருணமாகவும் இருக்கும்.

நிலத்தின் மீது அல்லாது, வானத்தில் பறக்கும்போதே உணவருந்துவது என்பது ஒவ்வொருவருக்கும் புதுமையான அனுபவம். அதில் ஒரு சிறு குழந்தைத் தனமான மகிழ்ச்சியும், நவீன உலகத்தின் அதிசயத்தையும் நாம் உணரலாம்.

விமானம் பறந்த சில நேரத்திற்குப்பிறகு, பணியாளர்கள் மெதுவாக வண்டியுடன் வந்து உணவு வழங்கத் தொடங்குவர். விமானத்தில் பரிமாறப்படும் உணவு வகைகள் நாட்டின் கலாச்சாரத்தையும், விமான நிறுவனத்தின் தரத்தையும் பிரதிபலிக்கும். சில விமானங்களில் வெஜ் மற்றும் நான்-வெஜ் என இரண்டு வகை உணவுகளும் வழங்கப்படுகின்றன. பிளாஸ்டிக் பெட்டிகளில் ஒழுங்காக அடுக்கப்பட்ட சிறிய ரொட்டி, சாதம், கறி, இனிப்பு, ஜூஸ், வெந்நீர் போன்றவை கண்ணுக்கும் சுவைக்கும் இன்பம் அளிக்கும். விமானம் வானத்தில் பறக்கும்போது, சிறிய மேசையில் உணவை பரிமாறி சாப்பிடுவது ஒரு சுவாரஸ்யமான அனுபவம். சாளரத்தருகே அமர்ந்திருப்பவர்கள் மேகங்களைக் கண்டு மகிழ்ந்தபடியே உணவருந்துவது தனி ருசி.

முதல் விமானப் பயணம் என்பது ஒரு சாதாரண பயணமல்ல; அது மனதிற்கு ஓர் உற்சாக அனுபவம். அச்சம், ஆச்சரியம், மகிழ்ச்சி மூன்றும் கலந்த அந்த நொடிகள் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே உணரக்கூடியவை. விமானத்தில் உணவருந்தும் அனுபவம் சாதாரண உணவாக இல்லாது, அது ஒரு வித்தியாசமான உணர்வாகும். வானத்தில் பறக்கும்போது ஒரு சிறிய மேசையில் அமர்ந்து, மேகங்களுக்கிடையில் சுவையான உணவை ருசிக்கும் அனுபவம் வாழ்நாள் முழுவதும் இனிமையாக நினைவில் நிற்கும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### NABARD வங்கி துணை நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

தமிழகத்தில் உள்ள நபார்டு வங்கியின் நிதிச் சேவை நிறுவனத்தில் (NABFINS) காலியாக உள்ள Customer Service Officer (CSO) பணியிடங்களை நிரப்ப தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது ஒரு மத்திய அரசு சார்ந்த வேலைவாய்ப்பாகக் கருதப்படுகிறது. திருச்சி, மதுரை, சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் பணிபுரிய வாய்ப்புகள் உள்ளன.

இந்தப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மாதம் தோராயமாக ரூ.20,000 முதல் ரூ.30,000 வரை சம்பளம் வழங்கப்படும்.

நிறுவனம் : NABARD Financial Services Limited (NABFINS)

வகை : மத்திய அரசு வேலை

காலியிடங்கள் : பல்வேறு

பணியிடம் : தமிழ்நாடு திருச்சி, மதுரை, சேலம், விழுப்புரம்

ஆரம்ப நாள் : 30.10.2025

கடைசி நாள் : 15.11.2025

பதவி: Customer Service Officer (CSO)

காலியிடங்கள்: பல்வேறு

கல்வி தகுதி: 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முன் அனுபவம் தேவையில்லை.

வயது வரம்பு: 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 33 வயதுக்கு மேற்படாதவராகவும் இருந்தால் போதுமானது.

விண்ணப்ப கட்டணம்: கட்டணம் இல்லை

தேர்வு செய்யும் முறை: நேர்காணல் மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்பவார்கள். விண்ணப்பதாரர்களின் ஆளுமை, தகவல் தொடர்புத் திறன் மற்றும் அடிப்படை அறிவைச் சோதிக்க நேர்காணல் அமையும்.

முக்கிய தேதிகள்:

விண்ணப்பிக்க கடைசி தேதி: 15.11.2025

விண்ணப்பிக்கும் முறை:

விண்ணப்பதாரர்கள் https://nabfins.org/ இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

## தாயுமானவர் திட்ட வயது வரம்பு குறைப்பு

சென்னை, நவ.3:

தாயுமானவர் திட்டப் பயனாளிகளுக்கான வயது வரம்பு 70-இல் இருந்து 65 ஆகக் குறைத்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு மக்கள் நலன் சார்ந்து பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அதில் ஒன்றாக சிறப்புக் கவனம் தேவைப்படும் 70 வய துக்கு மேற்பட்ட முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களை நேரடியாக அவர்களின் இருப்பிடத் திற்கே சென்று விநியோகிக்கும் முதலமைச்சரின் தாயு மானவர் திட்டத்தை கடந்த ஆகஸ்ட் 12 ஆம் தேதி முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூத்தோர்கள், மாற்றுத்திறனா ளிகளின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று குடிமைப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலை யில், தாயுமானவர் திட்டத்திற்கான வயது வரம்பு 70-இல் இருந்து 65 ஆகத் தளர்த்தி தமிழ்நாடு அரசு உத்தர விட்டுள்ளது.

## 'ரோடு ஷோ'வுக்கு நெறிமுறைகள்: முதலமைச்சர் ஆலோசனை

சென்னை, நவ.3:

அரசியல் கட்சிகள் 'ரோடு ஷோ' நடத்துவ தற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தயாரிப்பது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வரு கிறார். சென்னை தலைமைச் செயலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், கரூர் சம்பவத்தைத் தொடர்ந்து என்ன மாதிரியான வழிகாட்டுதல்களை பின்பற்றலாம் என்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இந்த நெறி முறைகள் தயாரிக்கப்பட்டு விரைவில் இறுதி செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

## அமைச்சர் விளக்கம்



சென்னை, நவ.3

நுகர்பொருள் வாணிப கழகத்தின் நெல் போக்குவரத்து, ஒப்பந்த விதிகளின்படி முறையாக செய்யப் பட்டுள்ளது.

நெல் கொள்முதலும், நகர்வும் துரிதமாக நடை பெற்று வருகிறது. திமுக அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக நெல் போக்குவரத்து கட்டணம் வெகுவாக குறைந் துள்ளது என்று உணவுத்துறை அமைச்சர் அர.சக்கர பாணி விளக்கம் அளித்துள்ளார்.

## பொங்கல் வேட்டி, சேலை நவ.15 முதல் விநியோகம்: அமைச்சர்

காஞ்சிபுரம், நவ.3:

பொங்கல் பண்டிகையை யொட்டி, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப் படும் இலவச வேட்டி, சேலை நவம்பர் 15 ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்று கைத்தறி மற்றும் நெசவாளர் துறை அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் எண்ணெய்க்கார தெரு வில் உள்ள முருகன் பட்டுப்புடவை கூட்டு றவு சங்கத்தின் விற்பனை நிலையம் புனரமைக்கப்பட்டு வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதில் குத்து விளக்கு ஏற்றி விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்த அமைச்சர் ஆர்.காந்தி, ரிப்பன் வெட்டி முதல் வியாபாரத்தைத் துவக்கி வைத்தார். நிகழ்ச்சிக்குப் பின் செய்தியா ளர்களைச் சந்தித்த அமைச்சர் காந்தி, "திமுக ஆட்சியில் கைத்தறி நெசவாளர் களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பொங்கலுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி, சேலைகள் மிகவும் தர மாக இருப்பதால் அனைவரும் கட்டி மகிழ் கின்றனர்.

இந்த ஆண்டுக்கான பொங்கல் வேட்டி, சேலைகள் நவம்பர் 15 ஆம் தேதி முதல் விநியோகிக்கப் பட வுள்ளன" என்று தெரிவித்தார்.

"இந்திய அளவில் காஞ்சிபுரம் பட்டுக்கு அதிக வரவேற்பு இருந்து வரு கிறது. இங்கு 30-க்கும் மேற்பட்ட பட்டுப் புடவை உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு சங்கங் களில் விற்பனை செய்யப்படும் பட்டு கள்தான் உண்மையான பட்டு. அதனை உத்திரவாதத்துடன் விற்பனை செய் கிறோம்" என்றார். "தங்கம் மற்றும் வெள்ளி விலை உயர்வதால் பட்டுச் சேலைகளின் விலை யும் உயர்ந்துள்ளது. எனவே, புடவை களில் சேர்க்கப்படும் ஜரிகையில் தங்கம் மற்றும் வெள்ளியைக் குறைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மழைக் காரணமாக இதுவரை நெச வாளர்களுக்குப் பெரிய அளவில் பாதிப்பு இல்லை" என்று அமைச்சர் காந்தி குறிப் பிட்டார்.

"அதிமுக ஆட்சியில் பத்தாண்டு களில் 9 ஆண்டுகள் கோ-ஆப் டெக்ஸ் நிறு வனம் நட்டத்தில் இயங்கியது. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டி லேயே ரூ. 9 கோடி லாபம் ஈட்டியது.

58 சொசைட்டிகள் நவீனமயமாக்கப் பட்டு உள்ளதால் வியாபாரம் அதிகரித்து கூட்டு றவு சங்கங்கள் லாபத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன" என்றார்.

## வணிக பயன்பாடு சமையல் சிலிண்டர் விலை குறைவு

சென்னை, நவ.3:

பாரத் பெட்ரோலியம், இந்தியன் ஆயில், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய பொதுத்துறை எண் ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன் பாட்டுக்கு 19 கிலோ எடை யிலும் சமையல் எரி வாயு சிலிண்டர்களை நாடு முழுவதும் விநி யோகம் செய்து வரு கின்றன. சர்வதேச சந்தை யில் கச்சா எண்ணெய் யின் விலை மற்றும் அமெ ரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவ னங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரி வாயு சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை களை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகின்றன.

அந்த வகையில் சனிக் கிழமை எண்ணெய் நிறு வனங்கள் வெளியிட்டு உள்ள அறிவிப்பின்படி வணிக பயன்பாட்டு சிலிண் டரின் விலை குறைந் துள்ளது.

சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற் கான சிலிண்டர் விலை ரூ.4.50 குறைந்து ரூ. 1,750க்கு விற்கப்படு கிறது. 14 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்ற மின்றி ரூ. 868.50 என்ற நிலையில் நீடிக்கிறது.

## 87 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார் மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.3:

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-



தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (1.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 18 கோடியே 90 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடி யசைத்து தொடங்கி வைத்தார்.

ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையானது 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள் கலைஞரால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசானது (EMRI GHS) என்ற தனியார் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையை வழங்கி வருகிறது. இச்சேவை 24x7 மணி நேரம் என்ற சேவையின் அடிப்படையில், பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பொதுமக்கள் அவசரகால மருத்துவ தேவைக்கு "108" என்ற கட்டணமில்லா இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறுகின்றனர்.

அவசரகால நெருக்கடியின் போது தேவையான மருத்துவ உதவியை எளிதாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் வழங்க, தற்போது 1,353 எண்ணிக்கையிலான ஆம்புலன்ஸ் வாகனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 977 - அடிப்படை வசதி கொண்ட ஆம்புலன்ஸ் வாகனங்ககள், 307 - மேம்படுத்தப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்ககள், 65 - பச்சிளங்குழந்தைகளுக்கான வாகனங்கள் உள்ளிட்ட ஊர்திகள் அடங்கும்.

இந்த அரசு பொறுப்பேற்றதி லிருந்து இதுவரை ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவை மூலம் கருவுற்ற தாய்மார்கள், சாலை விபத்துகளில் காயமுற்றோர், இதர அவசரகால மருத்துவ தேவைகள் என மொத்தம் 85,98,054 மருத்துவ பயனாளிகள் பயன்பெற்று உள்ளனர்.

இவைத்தவிர, 41 இரு சக்கர வாகன அவசரகால ஊர்திகள் மூலம் 1,61,688 மருத்துவ பயனாளிகளும், பச்சிளங்குழந்தைகளுக்கான சேவை மூலம் 95,119 மருத்துவ பயனாளிகளும், பழங்குடியினர் பகுதிகளில் வசிக்கும் 4,30,697 மருத்துவ பயனாளிகளும் பயன்பெற்றுள்ளார்கள்.

ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையை மேலும் செம்மையாக செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் 18 கோடியே 90 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையினை இன்றையதினம் தமிழ்நாடு முதல்-அமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர் சு.வினீத், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘தேர்தல் நெருக்கத்தில் எஸ்ஐஆர்-க்கு எதிரான அனைத்துக் கட்சிக் கூட்டம் திமுகவின் கபட நாடகம்’ - தவெக

**சென்னை, நவ.3:**

“வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தத்திற்கு எதிராக தேர்தல் நெருக்கத்தில் திமுகவின் அனைத்துக் கட்சி கூட்டம் மக்களை திசை திருப்பும் கபட நாடக அரசியலே ஆகும்.” என தவெக தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்த பணிகள் வரும் 4ம் தேதி தொடங்கும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள நிலையில் இன்று (நவம்பர் 2) தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தை நடிகர் விஜய்யின் தவெக புறக்கணித்துள்ளது. மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையைக் கேள்விக்கு உள்ளாக்கும் சிறப்பு தீவிரத் திருத்தத்திற்கு விஜய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தம் மேற்கொள்ளப்பட இருப்பதாக இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே, பிஹார் மாநிலத்தில் வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தம் குறித்த அறிவிப்பு வெளியானபோதே, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் அதைக் கடுமையாக எதிர்த்து, அதன் உள்நோக்கம் குறித்து எச்சரித்தோம்.

அப்போது எச்சரித்தது போலவே பிஹாரில் லட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. குறிப்பாக இந்தச் சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் மூலம் மதச் சிறுபான்மையினர் உள்ளிட்ட சில குறிப்பிட்ட வாக்குகள் குறிவைத்து நீக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன. மேலும், வாக்காளர் சிறப்புத் தீவிர திருத்தம் குறித்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது.

முதல் கட்டச் சிறப்புத் தீவிரத் திருத்தம் குறித்த தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படாத நிலையில், இரண்டாம் கட்டத் திருத்தத்தை மேற்கொள்வது எந்த வகையில் சரியான நகர்வாய் இருக்க முடியும்?

தமிழ்நாட்டில் மொத்தம் 6 கோடியே 36 லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரின் பெயரையும் வெறும் 30 நாட்களில் எப்படிச் சரிபார்க்க முடியும்?

இந்த வாக்காளர் சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் வாயிலாக, பீகாரில் நடைபெற்றதைப் போல் தமிழ்நாட்டிலும் சிறுபான்மையினர் உள்ளிட்ட சில குறிப்பிட்ட வாக்குகள் குறி வைக்கப்பட வாய்ப்பு இருக்கிறது என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து முழக்கமிட்டு வருகின்றன. அப்படி நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்? தேசியக் குடிமக்கள் பதிவேட்டு முறை நடைமுறைப்படுத்தப்படும் அசாமில் மட்டும் தனியாகச் சிறப்புத் தீவிரத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பும் இந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே உள்ளது.

எனவே சிறப்புத் தீவிரத் திருத்தம் என்கிற குழப்பமான நடைமுறையை விடுத்து, ஏற்கெனவே இருக்கும் நடைமுறையே தொடர வேண்டும் எனத் தமிழக வெற்றிக் கழகம் வலியுறுத்துகிறது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்


### ஆப்பிள் வாட்ச்களுக்கான துணை செயலியை உருவாக்கும் வாட்ஸ் அப்!



ஆப்பிள் வாட்ச்களுக்கான ஐபோன் துணை செயலியை (Companian App) வாட்ஸ் அப் சோதனை செய்து வருகிறது. இதன் மூலம், ஆப்பிள் வாட்ச்களில் இருந்து மெசேஜ்கள் மற்றும் மீடியாக்களை விரைவாக பார்க்கவும், அதற்கு பதிலளிக்கவும் முடியும். இது தொடர்பான WABetaInfo அறிக்கையில், இந்த செயலி ஐபோனின் துணையுடன் இயங்கும்.

இதில் வாட்ஸ் அப்பை முழுமையாகப் பயன்படுத்த முடியும். ஆப்பிள் வாட்ச்சை ஆண்ட்ராய்டு சாதனங்களுடன் இணைக்கும் வியர் ஓஎஸ் (Wear Os) அடிப்படையாக கொண்டு இந்த ஐபோன்களுக்கான துணை செயலி உருவாக்கப்பட்டுள்ளது. துணை செயலி என்பது உங்கள் தொலைபேசியின் இணைய இணைப்பு, தரவு மற்றும் அமைப்புகளைப் பயன்படுத்தி செயல்படும் ஒரு செயலி ஆகும். கியூ.ஆர் கோடு அல்லது Manual Paring முறை ஆகியவற்றின் தேவைகளின்றி, இந்த துணை செயலி தானாகவே ஐபோனுடன் இணைந்துகொள்ளும். இந்த செயலியில் வாட்ஸ்அப் மெசேஜ்களை பார்க்கவும், வாய்ஸ் மெசேஜ்களை அனுப்பவும், எமோஜிக்களை அனுப்பவும், சேமிக்கப்பட்டுள்ள விரைவான பதில்களை அனுப்பவும் முடியும். கூடுதலாக புதிய உரையாடலை (new message) தொடங்கவும், Pinned மற்றும் Disappearing சாட்களை பார்க்கவும் முடியும். தற்போது, ஐஓஎஸ் பதிப்பு 25.32.10.71 பயன்படுத்தும் பீட்டா சோதனையாளர்களுக்கு மட்டுமே ஆப்பிள் வாட்ச்களுக்கான வாட்ஸ் அப் செயலி கிடைக்கிறது. இதனை சோதனை செய்ய watchOS 10.0 அல்லது அதற்கு மேற்பட்ட பதிப்பு தேவைப்படுகிறது. இது குறித்த அறிவிப்பை மெட்டா நிறுவனம் விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### மைக்ரோசாப்ட் செயலிகளுக்கு புதிய ஐகான்கள்!




மைக்ரோசாப்ட் நிறுவனம், அதன் 365 செயலிகளுக்கு மறுவடிவமைப்பு செய்யப்பட்ட ஐகான்களை வெளியிட்டது. அக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட இந்த புதிய ஐகான்கள், தனிபயனர்கள் மற்றும் நிறுவனங்களுக்கான விண்டோஸ், மேக், ஆண்ட்ராய்டு, ஐஓஎஸ் மற்றும் வெப் தளங்களுக்கு வெளியிடப்பட்டு வருகிறது. புதிய ஐகான்களுக்கு மாறிய பின்பு, மீண்டும் பழைய ஐகான்களுக்கு மாற்ற இன்ஸ்டால் செய்யப்பட்ட அப்டேட்களை நீக்க வேண்டும். எனினும், அப்டேட்களை நீக்குவதால், பாதுகாப்பு குறைபாடு ஏற்படும் என்று மைக்ரோசாப்ட் அறிவுறுத்துகிறது.

## தமிழகத்தில் நவ.8 வரை மழைக்கு வாய்ப்பு

**சென்னை, நவ.3:**

தமிழகத்தில் நாளை முதல் நவ.8-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மியான்மர் கடலோரப் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது மேலும் வடக்கு அல்லது வடமேற்கு திசையில் நகர்ந்து மியான்மர் மற்றும் வங்கதேசம் கடற்கரையை ஒட்டி நகரக்கூடும்.

தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, நாளை (நவ.3) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 4-ம் தேதி வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 5, 6 தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

7-ம் தேதி வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 8-ம் தேதி ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழக கடலோர பகுதிகளில் நவ.6-ம் தேதி வரை எச்சரிக்கை ஏதுமில்லை. நேற்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குறிப்பிடும்படியாக மழை பதிவாகவில்லை. பெரும்பாலான இடங்களில் வறண்ட வானிலை நிலவியது’ இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## வைகை அணையில் இருந்து சிவகங்கை மாவட்ட பாசனத்துக்காக நீர் திறப்பு

**ஆண்டிபட்டி, நவ.3:**

வைகை அணையில் இருந்து சிவகங்கை மாவட்ட பூர்வீக பாசனப் பகுதிகளுக்காக 2 ஆயிரம் கன அடி வீதம் இன்று (நவ.2) தண்ணீர் திறக்கப்பட்டது. ஆகவே கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி நீர்வளத் துறை அதிகாரிகள் கேட்டு கொண்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையின் தொடக்கமாக கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் கனமழை கொட்டித் தீர்த்தது.

இதனால் ஆண்டிபட்டி அருகே 71 அடி உயரத்தில் அமைந்துள்ள வைகை அணையின் நீர்மட்டம் கிடு கிடுவென உயர்ந்து கடந்த அக்டோபர் 20-ம் தேதி அன்று 69 அடியை எட்டியது.

ஆகவே பாதுகாப்பு கருதி தேனி, திண்டுக்கல் மதுரை சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களுக்கு இறுதி மற்றும் மூன்றாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு உபரிநீர் ஆற்றின் வழியாக திறக்கப்பட்டது.

தொடர்ந்து மூல வைகை, முல்லை பெரியாற்றில் இருந்தும் வைகை அணைக்கு நீர்வரத்து அதிகளவில் இருந்ததால் நீர்மட்டம் 70 அடியை கடந்தது. இதனைத் தொடர்ந்து வைகை பூர்வீக பாசனப் பகுதிகளான ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் மதுரை ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள கண்மாய்களில் நீர் நிரப்பும் வகையில் 1,824 மில்லியன் கன அடி நீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது.

அதனடிப்படையில் முதற்கட்டமாக கடந்த அக்.27 முதல் அக்.31-ம் தேதி வரை ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பூர்வீக பாசனப் பகுதி 624 மில்லியன் கன அடி நீர் திறக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பூர்வீக பாசனம் 2-ம் பகுதியான சிவகங்கை மாவட்டத்துக்கு நேற்று (நவ.2) 2 ஆயிரம் கன அடிநீர் திறக்கப்பட்டது.

வரும் நவ.6-ம் தேதி வரை மொத்தம் 772 மில்லியன் கனஅடி நீர் திறக்கப்பட உள்ளது.

பின்பு நவ.8-ம் தேதி முதல் நவம்.13ம் தேதி வரை மதுரை மாவட்டத்தில் உள்ள வைகை பூர்வீக பாசனப் பகுதி மொத்தம் 428 மில்லியன் கன அடி நீர் திறக்கப்பட உள்ளன.

இந்த நீர் திறப்பின் மூலம் 3 மாவட்டங்களில் உள்ள ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 109 ஏக்கர் பூர்வீக நிலங்கள் பாசன வசதி அடையும் என்பதால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இன்றைய நிலவரப்படி பாசனம் மற்றும் குடிநீர் திட்டங்களுக்காக மொத்தம் 3 ஆயிரத்து 449 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. ஆகவே கரையோர மக்கள் ஆற்றுக்குள் இறங்க வேண்டாம்.

பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லும்படி நீர்வளத்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## டிஜிட்டல் கைது என மிரட்டி முதியவரிடம் ரூ.4.15 கோடி பறிப்பு: உத்தரப் பிரதேச இளைஞர் கைது

**சென்னை, நவ.3:**

மயிலாப்பூரைச் சேர்ந்தவர் ஸ்ரீவத்ஸன் (73). சென்னை அண்ணா சாலையில் உள்ள பிரபலமான தனியார் நிறுவனம் ஒன்றில் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

இவருக்கு கடந்த மாதம் 26-ம் தேதி வாட்ஸ்-அப் மூலம் அழைப்பு வந்தது. எதிர்முனையில் பேசிய நபர் தன்னை மும்பை போலீஸ் அதிகாரி என அறிமுகம் செய்து கொண்டு, உங்களது பெயரில் பெறப்பட்ட சிம் கார்டு சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறினார்.

மேலும் நீங்கள் குற்றமற்றவர் என நிரூபிக்க வேண்டுமானால் உங்களது வங்கியில் உள்ள பணம் முழுவதையும் நான் சொல்லும் வங்கிக் கணக்குக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் மீது குற்றம் இல்லை என தெரியவந்தால், உடனே பணம் முழுவதும் உங்கள் வங்கிக் கணக்குக்கே மீண்டும் அனுப்பி வைக்கப்படும்.

இல்லையென்றால் உங்களை கைது செய்வோம் என மிரட்டினார். பயந்துபோன ஸ்ரீவத்ஸன் அவர் தெரிவித்தபடி பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு ரூ.4.15 கோடி அனுப்பி வைத்தார். அதன் பிறகு அந்த நபரை தொடர்பு கொள்ள முடியவில்லை. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ஸ்ரீவத்ஸன் இதுகுறித்து காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் தெரிவித்தார். இதுகுறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவில் உள்ள சைபர் க்ரைம் போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்தனர்.

போலீஸ் அதிகாரி எனக் கூறி பணம் பறித்தது உத்தரப் பிரதேச மாநிலம், ஜான்சி மாவட்டம், மவுரானிப்பூரைச் சேர்ந்த மணீஷ்குமார் (23) என்பது தெரியவந்தது. இதையடுத்து, அங்கு சென்ற தனிப்படை போலீஸார் மணீஷ்குமாரை கைது செய்து சென்னை அழைத்து வந்து சிறையில் அடைத்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### தீபாவளி சீட்டு மோசடி: தலைமறைவான பெண் கைது

**சென்னை, நவ.3:**

ஆர்.கே நகர் பகுதி யில் தீபாவளி சீட்டு நடத்தி சுமார் ரூ.5 லட்சம் மோசடி செய்த வழக்கில் தலைமறை வாயிருந்த பெண் கைது செய்யப்பட்டார். தண்டையார்பேட்டை நேதாஜி நகரைச் சேர்ந்த பத்மாவதி, பவர் ஹவுஸ் பகுதியில் உணவகத்தில் வேலை பார்த்தபோது, உணவக உரிமையாளர் தமிழ்செல்வி தீபாவளி சீட்டு நடத்துவதாக தெரிவித்தார்.

இதையடுத்து பத்மாவதி தனக்கு தெரிந்த 25 நபர்களை 2024ஆம் ஆண்டு தீபாவளி சீட்டில் சேர்த்தார். ஒரு வருடமாக சுமார் ரூ.5 லட்சம் வசூல் செய்யப்பட்டது. 2024 தீபாவளிக்கு சீட்டு முதிர்வு தொகையை கேட்ட போது செல்வி பணம் தராமல் தொடர்ந்து ஏமாற்றியதாக கூறப்படுகிறது. இந்நிலையில் பத்மாவதியின் புகாரின் பேரில் கடந்த அக்.5 அன்று வழக்குப்பதிவு செய்யப்பட்டது. செல்வி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தில் முன் ஜாமின் கோரினார். ஆனால் ரூ.1 லட்சம் டெபாசிட் செய்யாமலும், நீதிமன்ற நிபந்தனைகளை பின்பற்றாமலும் தலைமறை வானார். ஆர்.கே நகர் குற்றப்பிரிவு ஆய்வாளர் தலை மையிலான காவல் குழு தீவிர தேடுதலில் செல்வியை கைது செய்துள்ளது.

### பெங்களூரு செல்லும் ரயிலில் 450 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல்



**வேலூர், நவ.3:**

காட்பாடி - பீகார் தன்பூரில் இருந்து சென்னை பெரம்பூர், காட்பாடி வழியாக பெங்களூரு செல்லும் எக்ஸ்பிரஸ் ரயிலில் ரேசன் அரிசி கடத்தப்படுவதாக ரகசிய தகவல் கிடைத்தது. வெள்ளியன்று ரயில்வே போலீசார் சோதனையிட்டனர். பின்பக்க பொது பயணிகள் பெட்டியில் இருக்கைகளின் அடியில் தலா 30 கிலோ என 15 சிப்பங்களாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 450 கிலோ ரேசன் அரிசியை கைப்பற்றினர். இந்த அரிசி ஆந்திரா அல்லது கர்நாடகத்துக்கு கடத்தப்பட்டிருக்கலாம் என தெரியவந்தது. பறிமுதல் செய்யப்பட்ட அரிசி காட்பாடி தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

### மூதாட்டி வீட்டில் ரூ.1.25 லட்சம் திருட்டு

**செய்யாறு, நவ.3:**

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் தாலுகா அப்துல்லாபுரம் கிராமத்தை சேர்ந்த வேதகவுரி (70) என்ற மூதாட்டி, கடந்த 20ஆம் தேதி வீட்டை பூட்டிவிட்டு சென்னையில் உள்ள மகன் வீட்டிற்குச் சென்றார். வியாழனன்று திரும்பி வந்தபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. ஒன்றரை கிலோ வெள்ளி பொருட்கள், ரூ.7,000 ரொக்கம், எல்இடி டிவி உள்பட மொத்தம் ரூ.1.25 லட்சம் மதிப்பிலான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. தூசி போலீசார் வழக்குப் பதிவு செய்து திருடர்களைத் தேடி வருகின்றனர்.

### சென்னை - கீழ்ப்பாக்கத்தில் டேங்கர் லாரி, கார் மோதி விபத்து - இளைஞர் உயிரிழப்பு

**சென்னை, நவ.3:**

சென்னை கீழ்ப்பாக்கத்தில் டேங்கர் லாரி, கார் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் ,இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் படுகாயம் அடைந்தனர்.

சென்னை, பட்டாளம், கார்ப்பரேஷன் தெருவை சேர்ந்தவர் விக்னேஷ். இவர் வானகரம் மீன் மார்க்கெட்டில் மீன் வியாபாரம் செய்து வருகிறார். இந்நிலையில், நேற்று அதிகாலை இவரது சகோதரர்களான சீனிவாசன் (33), விஜய் (28) மற்றும் நண்பர் கிஷோர் (28) ஆகியோர் காரில் வானகரம் மீன் மார்க்கெட்டுக்கு சென்று கொண்டிருந்தனர்.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனை அருகே பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கார் வந்து கொண்டிருந்தது. எதிர் திசையில் இருந்து சேத்துப்பட்டு நோக்கி வந்த டேங்கர் லாரி, ஈகா திரையரங்கம் சிக்னலில் சேத்துப்பட்டு செல்லும் சாலையில் திரும்பியது. அப்போது, காரும், லாரியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டது. இதில் காரின் முன் பகுதி அப்பளம் போல் நொருங்கியது.

காரில் சென்ற சீனிவாசன், விஜய், கிஷோர் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். இதையடுத்து, அப்பகுதியில் சென்ற வாகன ஓட்டிகளும், அங்கிருந்த போக்குவரத்து போலீஸாரும், விபத்தில் சிக்கி உயிருக்கு போராடிக் கொண்டிருந்த மூன்று பேரையும் மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு, மூன்று பேருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், சிகிச்சை பலனின்றி விஜய் உயிரிழந்தார். விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்த போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார், டேங்கர் லாரி ஓட்டுநர் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த சங்கர் (47) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மீனவர்களுடன் இணைந்து குளத்தில் இறங்கி மீன் பிடித்தார் ராகுல் காந்தி: பீகாரில் சுவாரஸ்யம்!



**பாட்னா, நவ.3:**

பீகார் தேர்தல் பிரச்சாரத்துக்கு இடையில், பெகுசராய் பகுதியில் ராகுல் காந்தி இன்று உள்ளூர் மக்களுடன் இணைந்து ஒரு குளத்தில் இறங்கி மீன்பிடித்தார்.

பிஹாரின் பெகுசராய் என்ற இடத்தில் விஐபி கட்சியின் தலைவரும், துணை முதல்வர் வேட்பாளருமான முகேஷ் சாஹ்னியுடன் இணைந்து ஒரு குளத்தின் நடுப்பகுதிக்கு படகு மூலமாக சென்றார் ராகுல் காந்தி. தனது அடையாளமான வெள்ளை டி-சர்ட் மற்றும் கருப்பு பேண்ட் அணிந்திருந்த அவர், குளத்தில் நீந்தியபடி மீனவர்களுடன் சேர்ந்து உற்சாகமாக போஸ் கொடுத்தார்.

சம்பவ இடத்தில் ஏராளமான மீனவர்களும் இருந்தனர், அவர்களில் சிலர் இடுப்பு வரை தண்ணீரில் மூழ்கி ராகுல் காந்தியுடன் உரையாடினர்.

இதுகுறித்து ராகுல் காந்தி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பிஹார் மாநிலம் பெகுசராயில் உள்ள மீனவர் சமூகத்தினரை விஐபி கட்சித் தலைவர் முகேஷ் சாஹ்னியுடன் இன்று சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தது.

அவர்களின் பணி எவ்வளவு சுவாரஸ்யமாக இருந்தாலும், அவர்களின் சவால்களும் போராட்டங்களும் கடினமானவை. இருப்பினும், அவர்களின் கடின உழைப்பு, ஆர்வம் மற்றும் ஆழமான புரிதல் எல்லா சூழ்நிலைகளிலும் ஊக்கமளிக்கின்றன.

பிஹாரின் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் குளங்கள் மற்றும் அவற்றில் வாழும் மீனவர்கள், மாநிலத்தின் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். மீனவர்களின் உரிமைகள் மற்றும் மரியாதையை உறுதி செய்வதற்கான ஒவ்வொரு அடியிலும் நான் அவர்களுடன் நிற்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, பெகுசராயில் மீன்பிடிக்கும் போது, சக மீனவர்களுடன் பேசினார், அவர்களின் பணியுடன் தொடர்புடைய சவால்கள் மற்றும் போராட்டங்களைப் பற்றி விவாதித்தார். விஐபி கட்சியின் தலைவர் முகேஷ் சஹானியும் இந்த சமயத்தில் உடனிருந்தார். பிஹார் தேர்தலில் மகா கூட்டணி வாக்குறுதிகள்:

>> மீனவர்களுக்கு பணியில்லாத காலத்தில் ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000 உதவி பெறுவார்கள்.

>> மீன்வள காப்பீட்டுத் திட்டம் மற்றும் சந்தை வசதிகள் உறுதி செய்யப்படும். ஒவ்வொரு தொகுதியிலும் மீன் சந்தைகள், பயிற்சி மையங்கள் மற்றும் மானியத் திட்டங்கள் நிறுவப்படும்.

>> நீர் தேக்கக் கொள்கையின் கீழ் ஆறுகள் மற்றும் குளங்கள் புத்துயிர் பெறப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவிர வறுமை இல்லாத மாநிலம் கேரளா: முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு

**திருவனந்தபுரம், நவ.3:**

தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

கேரளாவில் வறுமை ஒழிப்பு திட்டம் கடந்த 2021-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதுதொடர்பாக மாநிலம் முழுவதும் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் 64,006 குடும்பங்கள் தீவிர வறுமையில் வாடுவது தெரியவந்தது. இது மாநில மக்கள் தொகையில் 0.2 சதவீதம் ஆகும். அவர்களை வறுமையில் இருந்து மீட்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நிலமற்ற குடும்பங்களுக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோருக்கு திறன்சார் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன்காரணமாக 64,006 குடும்பங்களும் தீவிர வறுமையில் இருந்து மீண்டன.

கேரளா உதயமான தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற சிறப்பு சட்டப்பேரவைக் கூட்டத்தில், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்தார்.

இதை பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆளும் மார்க்சிஸ்ட் கூட்டணி அரசு மக்களை ஏமாற்றுவதாக எதிர்க்கட்சி தலைவர் சதீசன் குற்றம் சாட்டினார். முதல்வரின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், கூட்டணி கட்சி எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் நேற்று மாலை கேரள உதய தின விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிலும், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா உருவெடுத்திருப்பதாக முதல்வர் பினராயி அறிவித்தார்.

அப்போது அவர் பேசும்போது, "கேரளா வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது. தீவிர வறுமை இல்லாத மாநிலமாக மாறியிருப்பதால் ஒவ்வொரு மலையாளியின் தலையும் நிமிர்ந்திருக்கிறது. ஏழை குடும்பங்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வறுமை ஒழிப்பு திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும்" என்று தெரிவித்தார்.

## 'இவன் என் பழைய நண்பன்' சந்திரபாபு நாயுடு பெருமிதம்



**அமராவதி, நவ.3:**

ஆந்திர மாநில முதல்வரான சந்திரபாபு நாயுடு, சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு (ஒருங்கிணைந்த ஆந்திரா) தனக்கு சொந்தமான அம்பாஸிடர் காரில்தான் (பதிவு எண் AP 09 G 393) பல மாவட்டங்களுக்கு பயணம் செய்தார். பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த காரை அவர் இப்போது பயன்படுத்துவதில்லை. அவருடைய ஹைதராபாத் வீட்டில் உள்ள அந்தக் காரை நன்கு பராமரித்து வந்தனர். தற்போது மாநிலம் இரண்டாக பிரிந்த நிலையில், அமராவதியில் குடியேறினார் சந்திரபாபு நாயுடு. இந்நிலையில், அந்த அம்பாஸிடர் கார் ஹைதராபாத்தில் இருந்து அமராவதியில் உள்ள சந்திரபாபு நாயுடு வீட்டுக்கு சமீபத்தில் கொண்டுவரப்பட்டது. இந்த கார் அமராவதி வந்ததும், அதனுடன் நின்று புகைப்படம் எடுத்து கொண்டார்.

'இவன் என் பழைய நண்பன், பல ஆண்டுகள் இது என்னுடன் பயணம் செய்துள்ளது. பல நிகழ்வுகளை இது பார்த்துள்ளது. பல கார்கள் வந்தாலும், இது தான் என்னுடைய விருப்பமான நண்பன்' என அந்த காரின் நினைவுகளை அவர் நெகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார் சந்திரபாபு நாயுடு.

## ரூ.47 கோடி கொகைன் கடத்திய பெண் உட்பட 5 பேர் கைது



**புதுடெல்லி, நவ.3:**

கொழும்பிலிருந்து மும்பைக்கு விமானத்தில் கடத்தி வந்த ரூ.47 கோடி கொகைன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பெண் பயணி உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து மத்திய நிதி அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

இலங்கை தலைநகர் கொழும்பிலிருந்து மும்பைக்கு வரும் விமானத்தில் கொகைன் போதைப் பொருள் கடத்தப்படுவதாக ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, வருவாய் புலனாய்வுத் துறை (டிஆர்ஐ) அதிகாரிகள், மும்பையின் சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையம் வந்தடைந்த ஒரு பெண் பயணியின் உடமைகளை பரிசோதித்தனர். அப்போது 9 காபி பொடி பாக்கெட்களில் மறைத்து வைத்திருந்த கொகைன் போதைப் பொருளை பறிமுதல் செய்தனர். 4.7 கிலோ எடை கொண்ட அதன் மதிப்பு ரூ.47 கோடி ஆகும்.

கொகைன் கடத்தி வந்த பெண், அதை வாங்கிச் செல்ல வந்த ஒருவர் உட்பட 5 பேரை டிஆர்ஐ அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அவர்கள் மீது போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

சர்வதேச போதை கடத்தல் கும்பல், சமீப காலமாக போதைப்பொருளை கடத்த இந்திய பெண்களை பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக, இதைக் கண்டறிவதைத் தடுக்க உணவுப் பொருட்களுக்குள் வைத்து கடத்துகின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தேஜஸ்வி யாதவை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை: பிரதமர் மோடி



**புதுடெல்லி, நவ.3:**

'மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி யாதவை அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை. ஆனால் ஆர்ஜேடி, காங்கிரஸின் தலையில் ஒரு துப்பாக்கியை வைத்து முதல்வர் வேட்பாளரை அறிவிக்க கட்டாயப்படுத்தினர்' என பிரதமர் மோடி தெரிவித்தார்.

பிஹாரின் அர்ராவில் நடைபெற்ற பேரணியில் பேசிய பிரதமர் மோடி, "ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்குப் பிறகு நாடு பெருமைப்பட்டது, ஆனால் காங்கிரஸும் அதன் கூட்டணிக் கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளமும் அதை விரும்பவில்லை. பாகிஸ்தானில் ஆபரேஷன் சிந்தூர் நடந்தபோது, காங்கிரஸ் அரச குடும்பம் தூக்கமில்லாத இரவுகளைக் கழித்தது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற உறுதிமொழியுடன் உள்ளது. மறுபுறம், காங்கிரஸும் ஆர்ஜேடியும் தங்களுக்குள் மோதி வருகின்றன. வேட்புமனுக்களை வாபஸ் பெறுவதற்கான காலக்கெடுவுக்கு ஒரு நாள் முன்பு, பிஹாரில் மூடிய கதவுகளுக்குப் பின்னால் ஒரு குண்டர் விளையாட்டு நடந்தது. மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி யாதவை அறிவிக்க காங்கிரஸ் விரும்பவில்லை. ஆனால் ஆர்ஜேடி காங்கிரஸின் தலையில் ஒரு துப்பாக்கியை வைத்து முதல்வர் வேட்பாளரை அறிவிக்க அவர்கள் கட்டாயப்படுத்தினர்.

ஆர்ஜேடிக்கும், காங்கிரஸுக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ளது. தேர்தல் அறிக்கை குறித்து காங்கிரஸுடன் ஆலோசிக்கப்படவில்லை, பிரச்சாரம் குறித்தும் கேட்கப்படவில்லை. தேர்தலுக்கு முன்பு இவ்வளவு வெறுப்பு இருந்தால், அவர்கள் பின்னர் ஒருவருக்கொருவர் தலையை உடைக்கத் தொடங்குவார்கள். நினைவில் கொள்ளுங்கள், இத்தகையவர்களால் பிஹாரின் முன்னேற்றத்திற்காக உழைக்க முடியாது.

ஆர்ஜேடியின் காட்டாட்சி என்பது பிஹாரை வெறுமையாக்கிய இருள். ஆர்ஜேடி-யின் காட்டாட்சி துப்பாக்கி, கொடுமை, கசப்பு, மூடநம்பிக்கை, தவறான நிர்வாகம் மற்றும் ஊழல் ஆகியவற்றால் அடையாளம் காணப்படுகிறது. நிதிஷ் குமாரும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கமும் பிஹாரை அந்தக் கடினமான சகாப்தத்திலிருந்து மீட்டெடுத்துள்ளனர்" என்றார்.

## விளையாட்டு செய்திகள்

### IND vs SA: மழையால் ஆட்டம் தொடங்குவதில் தாமதம்



**மும்பை, நவ.3:**

கடந்த 2023-ல் இதே நவம்பரில் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கு முந்தைய நாள் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் 'இந்திய ரசிகர்களை அமைதியாக்குவோம்' என ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் கம்மின்ஸ் தெரிவித்திருந்தார். அந்த போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. இந்நிலையில், நடப்பு மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்க அணிகள் இன்று விளையாடுகின்றன. இதை முன்னிட்டு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தென் ஆப்பிரிக்க அணியின் கேப்டன் லாரா வோல்வார்ட் பங்கேற்றார்.

'பார்வையாளர்களை அமைதி செய்ய உங்கள் திட்டம் என்ன?' என செய்தியாளர் ஒருவர் அவரிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு சிரித்தபடி பதிலளித்த லாரா வோல்வார்ட், "அதில் நாங்கள் வெல்வோம் என நம்புகிறோம். மைதானம் முழுவதும் உள்ள ஒட்டுமொத்த பார்வையாளர்கள் இந்திய அணிக்கு ஆதரவு அளிப்பார்கள். நிச்சயம் அது இந்திய அணிக்கு அழுத்தம் தரும். ஏனெனில், அவர்கள் வெற்றி பெற வேண்டும் என எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். அதுவே எங்களுக்கு கொஞ்சம் சாதகமாக அமையும் என நினைக்கிறேன். நிச்சயம் உலகக் கோப்பையை வெல்வது என்பது மகத்தானது. அது எங்கள் நாட்டில் மகளிர் கிரிக்கெட்டுக்கு ஊக்கம் தரும்" என தெரிவித்தார்.

மழை காரணமாக இந்த ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணி பந்து வீசுகிறது.

### சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து வில்லியம்சன் ஓய்வு!

**சிட்னி, நவ.3:**

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனான கேன் வில்லியம்சன், சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

35 வயதான அவர், நியூஸிலாந்து அணிக்காக 93 டி20 போட்டிகளில் விளையாடி உள்ளார். கடந்த 2011-ல் ஜிம்பாப்வே அணிக்கு எதிராக அவர் விளையாடி இருந்தார். அவர் தலைமையிலான நியூஸிலாந்து அணி, 2021 டி20 உலகக் கோப்பை இறுதி, 2016 மற்றும் 2022 அரையிறுதி ஆட்டத்திலும் விளையாடி இருந்தது.

சர்வதேச டி20 கிரிக்கெட்டில் 2,575 ரன்கள் எடுத்துள்ளார். இதில் 18 அரை சதங்கள் அடங்கும். 2021 டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 85 ரன்கள் எடுத்திருந்தார். "அணியுடன் நான் பெற்ற அனுபவங்களும், இந்த நீண்ட பயணத்தின் நினைவும் இனிதானது. நான் ஓய்வு பெற இது சரியான தருணம் என கருதுகிறேன். இது எனக்கும், அணிக்கும் நல்ல முடிவாக அமையும் என நம்புகிறேன். ஏனெனில், அடுத்து டி20 உலகக் கோப்பை தொடர் நடைபெற உள்ளது. அதற்கான அணியை கட்டமைப்பது அவசியம். டி20 கிரிக்கெட்டில் திறன் படைத்த வீரர்கள் பலர் இதில் வாய்ப்பு பெறுவார்கள். அவர்கள் உலகக் கோப்பை தொடருக்கு ஆயத்தமாக இது உதவும்" என வில்லியம்சன் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் வில்லியம்சன் தொடர்ந்து விளையாடுவார். நியூஸிலாந்து கிரிக்கெட் அணி வீரர்களுக்கான மத்திய ஒப்பந்தத்தில் இடம்பெறாத வில்லியம்சன், உலக அளவில் நடைபெறும் பல்வேறு லீக் கிரிக்கெட் தொடர்களில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சர்வதேச டி20 கிரிக்கெட்டில் அதிக ரன்கள்: பாபர் அசம் சாதனை



**கராச்சி, நவ.3:**

சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டிகளில் அதிக ரன்கள் குவித்த வீரர்கள் வரிசையில் பாகிஸ்தான் வீரர் பாபர் அசம் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிராக லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2-வது டி20 ஆட்டத்தில் பாகிஸ்தான் 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கண்டது. இந்த ஆட்டத்தின்போது பாபர் அசம் 11 ரன்கள் சேர்த்தார். இதன்மூலம் சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டிகளில் அதிக ரன்கள் எடுத்த இந்திய அணியின் முன்னாள் கேப்டன் ரோஹித் சர்மாவின் சாதனையை முறியடித்தார்.


தற்போது 4,234 ரன்கள் குவித்து முதல் இடத்தில் உள்ளார். ரோஹித் சர்மா 4231 ரன்களுடன் (159 போட்டி) 2-வது இடத்தில் உள்ளார்.

# லண்டனில் ஓடும் ரயிலில் கத்திக்குத்து; 10 பேர் காயம் - இருவர் கைது

**லண்டன், நவ.3:**

லண்டன் செல்லும் ரயிலில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் பத்து பேர் காயமடைந்தனர். இது தொடர்பாக இரண்டு பேரை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். காயமடைந்தவர்களில் ஒன்பது பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

டான்காஸ்டரிலிருந்து லண்டனின் கிங்ஸ் கிராஸ் நிலையத்திற்கு ரயில் சென்று கொண்டிருந்தபோது, நேற்று இரவு உள்ளூர் நேரப்படி 7.30 மணிக்கு பீட்டர்பரோ நிலையத்திலிருந்து ரயில் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இந்த கத்திக்குத்து சம்பவம் நடந்தது. அந்த ரயில் உடனடியாக ஹண்டிங்டன் நிலையத்தில் நிறுத்தப்பட்டு போலீசார் விரைந்துசென்றனர்.




பெரிய கத்தியுடன் வந்த ஒரு மர்ம நபர் அனைவரையும் குத்தியதாகவும், எல்லா இடங்களிலும் ரத்தம் இருந்தது என்றும் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் சாட்சியம் அளித்தார். திடீரென நடந்த இந்த கத்திக்குத்து பயங்கரத்திலிருந்து தப்பிக்க சிலர் கழிப்பறைகளில் ஒளிந்துகொண்டனர். சிலர் ஓட முயன்றபோது மற்றவர்களால் மிதிபட்டு காயமடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 2 பேரை கைது செய்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு போலீசார், தங்கள் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து பேசிய பிரிட்டன் போக்குவரத்து காவல்துறை தலைமை கண்காணிப்பாளர் கிறிஸ் கேசி, "என்ன நடந்தது என்பதை கண்டறிய நாங்கள் அவசர விசாரணைகளை நடத்தி வருகிறோம். சம்பவத்துக்கான காரணத்தை விரைவில் கண்டறிவோம் " என்று கூறினார்.

கத்திக்குத்து சம்பவத்துக்கு இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், 'அப்பகுதியில் உள்ள அனைவரும் காவல்துறையின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார்.

## தான்சானியாவில் உள்நாட்டு வன்முறை 1000 பேர் பலி?

**டொடோமா, நவ.3:**

கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவில் அக்டோபர் 29 அன்று நடை பெற்ற தேர்தலில் ஜனாதிபதி சாமியா சுலுஹு ஹாசன் மீண்டும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். ஆனால் தேர்தலில் முறைகேடு நிகழந்ததாக வும், தேர்தல் முடிவை எதி ர்த்தும் நாடு முழுவதும் பெரும் போராட்டம் வெடித் தது. ஒருகட்டத்தில் போரா ட்டம் வன்முறைக் கலவர மாக மாறியது. இதைக் கட்டுப்படுத்த காவல்துறை யினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்நிலையில், இந்த போராட்டம் மற்றும் வன்முறையில் 700 பேர் வரை உயிரிழந்ததாக அந்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான பதேமா தெரிவித்து உள் ளது. பாதுகாப்புத்துறை வட்டாரங்களும் இதனை உறுதிப்படுத்தி உள்ளன. ஆனால் பலி எண் ணிக்கை ஆயிரத்தை தாண்டும் என சில ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பலியானோர் எண்ணிக்கையை வெளியிட பல மருத்துவனைகள் மறுத்து வருவதால் உயிரி ழப்பு குறித்த துல்லிய மான எண்ணிக்கை வெளியா வதில் சிக்கல் ஏற்பட்டு உள் ளது என சர்வதேச ஊட கங்கள் தெரிவிக்கின்றன.

## மோசடிக் கும்பல்களைச் சேர்ந்த 2,000 பேர் மலேசியாவில் கைது

**மலேசியா, நவ.3:**

கடந்த ஒரு மாதத்தில் மலேசியா முழுவ தும் நடத்தப்பட்ட அதிரடிச் சோதனைக ளில் மோசடிக் கும்பல்களைச் சேர்ந்த 2,000-க்கும் மேற்பட்டவர்களை அந்நாட்டு காவல்துறை கைது செய்துள்ளது. மின் வணி கம் தொடர்பான மோசடிகளைக் கட்டுப்படுத்து வதற்காக அந்நாட்டில் தேசிய மோசடி புகார் மையம் உருவாக்கப்பட்டது. இதில் வந்த புகார்களின் அடிப்படையிலான விசாரணை யில் இந்த கைது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வர்த்தகக் குற்றப் புலனாய்வுத் துறையின் இயக்குநர் ருஸ்டி இசா தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க அரசு முடக்கத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்தல்

**வாஷிங்டன், நவ.3:**

மூன்று வாரங்களுக்கு மேலாக அமெ ரிக்க அரசு முடங்கி பொருளாதார நடவ டிக்கைகளை முடக்கி வருகிறது. இந்நிலையில் அமெரிக்க பொருளாதார வளர்ச்சிக்கும், உற்பத்தியாளர்களின் வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் முழுமையாகச் செயல்படும் அரசாங்கம் அத்தியாவசியமானது. எனவே நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டி அரசின் முடக்கத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டு மென 30-க்கும் மேற்பட்ட அமெரிக்க உற் பத்தித் துறை குழுக்கள் அமெரிக்க அரசை வலியுறுத்தியுள்ளன.

## மேலும் இரு பணயக்கைதிகளின் உடல்கள் இஸ்ரேலிடம் ஒப்படைப்பு

இடைக்காலப்போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேலும் இரு பணயக்கை திகளின் உடல்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலிடம் ஒப்படைத்துள்ளது. 28 இறந்த பணயக்கைதிகளில், இதுவரை 15 பேரின் உடல்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உடல்களை அடையாளம் காணும் பணி முடிந்த பிறகு, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு முறையாகத் தகவல் தெரிவிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சீனாவில் பிரபலமாகி வரும் 'ஹாட்பாட்' குளியல்



**பெய்ஜிங், நவ.3:**

சீனாவின் ஹெய்லாங்ஜியாங் மாகாணம் ஹார்பின் நகரில் உள்ள ஒரு ரெசார்ட்டில் பாரம்பரிய சீன மருத்துவ முறைப்படி ஹாட்பாட் குளியல் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

5 மீட்டர் விட்டமுள்ள ஒரு வட்ட வடிவ தொட்டியில் வெந்நீர் நிரப்பப்பட்டுள்ளது. அது பார்வையாளர்களைக் கவர்கிறது. ஒரு பிரிவு சிவப்பாகவும், மற்றொரு பிரிவு வெள்ளை நிறத்திலும் உள்ளது அந்த தொட்டியில் சிவப்புப் பக்கம் உள்ள தண்ணீரில் மிளகாய், கத்தரிக்காய், முட்டைக்கோஸ் ஆகியவை நிரப்பப்பட்டுள்ளன. வெள்ளை பக்கம் உள்ள பிரிவில் பால், சிவப்பு பேரீச்சம்பழம், பெர்ரி பழங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இதுபோன்ற சூடான, சூப் போன்ற குளங்களில் பொதுமக்கள் மூழ்கி எழும்போது அவர்களுக்கு புத்துணர்வு கிடைக்கிறது என்று சீனாவிலிருந்து வெளியாகும் சவுத் சைனா மார்னிங் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.தற்போது இதுபோன்ற ஹாட்பாட் குளியலை மேற்கொள்ள சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு கட்டணம் ரூ.2,100.

இதுகுறித்து இந்த ரெசார்ட்டின் ஹாட்பாட் குளியல் பிரிவில் உள்ள ஊழியர் ஒருவர் கூறும்போது, "இந்த ஹாட்பாட் குளியல் தொட்டியில் சிவப்பு நிறத்தில் உள்ள நீர், உண்மையில் ரோஜா இதழ்களில் இருந்து உருவாகிறது. தினமும் புதிய ரோஜா இதழ்களை அதில் கொட்டுவோம். மேலும், இங்கு பயன்படுத்தப்படும் மிளகாய்கள் லேசான காரமுள்ள வகையைச் சேர்ந்தவை.

இதில் குளிப்பவர்களின் ரத்த ஓட்டத்தை இந்த மிளகாய்கள் மேம்படுத்துகின்றன. வெள்ளை நிறத் தொட்டியில் உள்ள பால், சருமத்தை ஈரப்பதமாக வைத்திருக்க உதவுகிறது" என்றார்.

## சிரியாவின் ராணுவ பலத்தை அதிகரிக்க உதவும் துருக்கி

**சிரியா, நவ.3:**

சிரியாவின் ராணுவத்திறனை வலுப்படுத்த அந்நாட்டின் முப்படைகளைச் சேர்ந்த 49 ராணுவ மாணவர்களுக்கு துருக்கி பயிற்சியளிக்க உள்ளது. இதன்படி அவர்களுக்கான பயிற்சி தங்கள் நாட்டின் ராணுவக் கல்வி நிறுவனங்களில் துவங்கும் என துருக்கியின் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜெக்கி ஆக்துர்க் தெரிவித்துள்ளார். அல் அசாத் தலைமையிலான சிரியாவின் ஆட்சியை பயங்கரவாதிகள் ராணுவம் கவிழ்த்து அந்நாட்டை கைப்பற்ற துருக்கி உதவியது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கன்-பாக்., பேச்சுவார்த்தை போர் நிறுத்தம் நீட்டிப்பு

துருக்கியில் நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானும் போர் நிறுத்தத்தை நீட்டிக்க முடிவெடுத்துள்ளன. இரு நாடுகளுக்கிடையே எல்லை மற்றும் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக போர் ஏற்பட்டது. கத்தாரில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் போர் நிறுத்தம் அமலானது. பின் அது மீறப்பட்டது. இந்நிலையில் துருக்கியில் அக்டோபர் 25 முதல் 30 வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து போர் நிறுத்தத்தை தொடர்வதற்கு இருநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

## 2030-ல் நிலவில் சீன வீரர்கள்!

ஜியுகுவான்: பூமியில் இருந்து சுமார் 425 கி.மீ. தொலைவில் சீனாவின் சர்வதேச விண்வெளி நிலையம் (தியான்காங்) செயல்படுகிறது. இதுகுறித்து சீன விண்வெளித் துறை செய்தித் தொடர்பாளர் ஜாங் ஜிங்போ கூறியதாவது:

சீன விண்வெளி வீரர்கள் ஜாங் லு, வூ பெய், ஜாங் ஹாங் ஜாங் ஆகியோர் வெள்ளிக்கிழமை (இன்று) பூமியில் இருந்து தியான்காங் விண்வெளி நிலையத்துக்கு புறப்படுகின்றனர்.

சீனாவின் நிலவுப் பயண திட்டம் கடந்த 2004-ம் ஆண்டில் தொடங்கியது. கடந்த 2007-ம் ஆண்டில் நிலவுக்கு ரோபோவை அனுப்பினோம். கடந்த 2020-ம் ஆண்டில் நிலவில் இருந்து 1.7 கிலோ பாறை, மண்ணை பூமிக்கு கொண்டு வந்து ஆய்வு செய்தோம். அடுத்த கட்டமாக வரும் 2030-ம் ஆண்டில் நிலவில் சீன வீரர்கள் கால் பதிப்பார்கள். இவ்வாறு ஜாங் ஜிங்போ தெரிவித்தார்.

## பாக். ராணுவ தாக்குதல்: பலுசிஸ்தானில் 18 போராளிகள் உயிரிழப்பு

கராச்சி: பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அந்நாட்டு ராணுவ தாக்குதலில் 18 போராளிகள் உயிரிழந்தனர்.

உளவுத் தகவலின் அடிப்படையில் பலுசிஸ்தானின் குவெட்டா மாவட்டம், சில்டன் மலைத்தொடரிலும், கெச் மாவட்டத்தின் புலேடாவிலும் பாகிஸ்தான் ராணுவம் புதன் கிழமை இரவு தேடுதல் பணி மேற்கொண்டது.

இதில் ராணுவத்தினர் - பலுசிஸ்தான் போராளிகள் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. இதில் 18 போராளிகள் உயிரிழந்தனர். அங்கிருந்து ஆயுதங்கள், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன.

## சீனா மீதான 100% வரி கைவிடப்படுகிறது : சீனா - அமெரிக்க பேச்சுவார்த்தையில் உடன்பாடு

**பூசான்,நவ.3:**

தென்கொரியாவின் பூசான் நகரில் அக்டோபர் 30 வியாழக்கிழமையன்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் சந்தித்து இரு நாட்டு வர்த்தக உறவுகள் தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த சந்திப்பில் இரு நாடுகளின் பொருளா தார மற்றும் வர்த்தகக் குழுக்கள் முக்கியப் பிரச்சனைகள் குறித்து விவாதித்து தீர்வு காண்ப தில் ஒருமித்த கருத்தை எட்டியுள்ளன. இரு நாட்டு தலைவர்களும் பொருளாதாரம், வர்த்தகம், எரிசக்தி மற்றும் பிற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும், மேலும் மக்களுக்கு இடையேயான பரிமாற்றங்களை ஊக்குவிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளனர். அமெரிக்காவில் உள்ள எரிசக்தி மற்றும் மின்சார வாகனங்கள், சிப் உற்பத்தி, போர் விமா னங்கள் நிறுவனங்களுக்கு தேவையான அரிய மண் காந்தங்கள் (கனிமங்கள்) மீதான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதாக பேச்சுவார்த்தையில் சீனா அறிவித்துள்ளது. அமெரிக்கச் சோயாபீன்ஸ்களை வாங்க ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல அமெரிக்காவும் சீனப் பொருட்கள் மீது விதிக்கவிருந்த 100 சதவீத வரியை கைவிடுவதாக அறிவித்துள்ளது.

# அமெரிக்க நிதி நிறுவனத்திடம் 500 மில்லியன் டாலர் கடன் பெற்று இந்திய வம்சாவளி சிஇஓ மோசடி

**வாஷிங்டன், நவ.3:**

அமெரிக்க நிதி நிறுவனத்திடம் இருந்து 500 மில்லியன் டாலர் கடன் பெற்று இந்திய வம்சாவளி சிஇஓ மோசடி செய்துள்ளார்.



அமெரிக்காவில் உள்ள நிதி நிறுவனம் பிளாக் ராக். இந்நிறுவனத்தின் துணை நிறுவனமான எச்பிஎஸ் நிறுவனத்திடம், பிராட்பேண்ட் டெலிகாம் மற்றும் பிரிட்ஜ்வாய்ஸ் என்ற தொலைத் தொடர்பு நிறுவனங்களை நடத்தி வரும் இந்திய வம்சாவளி சிஇஓ பாங்கிம் பிரம்பட் என்பவர் கடந்த 2020-ம் ஆண்டு முதல் 2024-ம் ஆண்டு வரை 500 மில்லியன் டாலருக்கு மேல் கடன் பெற்றுள்ளார்.

கடனாக பெற்ற பணத்தை எல்லாம் இவர் இந்தியா மற்றும் மொரிசீயஸ் நாட்டுக்கு மாற்றியுள்ளார்.

சில இ-மெயில் முகவரிகளில் மாற்றங்கள் இருந்ததை கண்டுபிடித்த எச்பிஎஸ் நிறுவன ஊழியர் ஒருவர், பிராட்பேண்ட் டெலிகாம் மற்றும் பிரிட்ஜ் வாய்ஸ் நிறுவனம் முறைகேடுகள் செய்வதை கண்டறிந்தார். இது குறித்து எச்பிஎஸ் நிறுவன அதிகாரிகள் பிரம்பட்டிடம் கேட்டபோது, அது பற்றி கவலைப்பட வேண்டாம், கடனை அடைத்து விடுவோம் என கூறியுள்ளார். அதன்பின் அவர் எந்த கேள்விகளுக்கும் பதில் அளிக்கவில்லை.

இதையடுத்து எச்பிஎஸ் நிறுவன அதிகாரிகள் கடந்த ஜூலை மாதம் பிரம்பட் நிறுவனங்களுக்கு சென்றபோது அவை மூடப்பட்டு இருந்தன.

கடந்த 2 ஆண்டுகளாக பிரம்பட் நிறுவனங்கள் அளித்த வாடிக்கையாளரின் இ-மெயில்கள், வாடிக்கையாளர்கள் பிரம்பட் நிறுவனத்துடன் செய்த ஒப்பந்தங்கள் எல்லாம் போலியானவை என கண்டறியப்பட்டது.

கடன் அடமானமாக காட்டிய சொத்துக்கள் எல்லாம் விற்கப்பட்டு இந்தியா மற்றும் மொரிசீயஸில் உள்ள வங்கி கணக்குகளுக்கு மாற்றப்பட்டு விட்டன.

கடந்த ஆகஸ்ட் மாதம் பிரம்பட்டின் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் திவால் ஆனதாக அறிவிக்கப்பட்டன.

500 மில்லியன் டாலருக்கு மேல் கடன் பெற்று மோசடி செய்த பாங்கிம் பிரம்பட் தற்போது இந்தியாவில் இருப்பதாக நம்பப்படுகிறது.

## சூடானில் படுகொலை சம்பவங்கள் அதிகரிப்பு: உயிர் பயத்தில் மக்கள் - நடப்பது என்ன?

**கர்த்தூம், நவ.3:**

வடகிழக்கு ஆப்பிரிக்க பகுதியில் அமைந்துள்ள சூடான்நாட்டில்ஏற்பட்டுள்ள உள்நாட்டு போரில் அந்நாட்டு ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த அல்-ஃபாஷர் நகரை கைப்பற்றி உள்ளது பலம் பொருந்திய துணை ராணுவப்படையான ஆர்எஸ்எஃப்.

இந்த நகரை கைப்பற்றும் தங்கள் முயற்சியில் தங்களுக்கு துஷ்பிரயோகம் செய்த போராளிகள் பலரை கைது செய்துள்ளதாக ஆர்எஸ்எஃப் தெரிவித்துள்ளது. அல்-ஃபாஷர் நகரில் சுமார் 1.77 லட்சம் மக்களின் நிலைஎன்னவென்றுஅறிந்து கொள்ள முடியாத சூழல் நிலவுகிறது. 65,000-க்கும் மேற்பட்டமக்கள்இந்தநகரில் இருந்து தப்பி உள்ளனர். கடந்த 2023 ஏப்ரல் முதல் ராணுவ ஆட்சிக்கு எதிராக ஆர்எஸ்எஃப் செயல்பட்டு வருகிறது. இதனால் அங்கு இருதரப்புக்கும் இடையே அப்போது முதல் மோதல் நிலவிவருகிறது. கிட்டத்தட்ட நாட்டின் மேற்கு பகுதி முழுவதும் இப்போது ஆர்எஸ்எஃப்கட்டுப்பாட்டில் உள்ளது. மற்ற பகுதிகள் ராணுவத்தின் வசம் உள்ளது. அண்மையில் அல்-ஃபாஷர் நகரை ஆர்எஸ்எஃப்கைப்பற்றியது.

அதன் பின்னர் அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதோடுபாலியல்வன்முறை, கொள்ளை, கடத்தல் சம்பவங்கள் அதிகம் நடைபெற்று வருகின்றன. தகவல்தொடர்புவசதியின்றி மக்கள் தவிப்பதாக தகவல் வெளியாகிறது.

இந்தச் சூழலில் யேல் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள், அல்-ஃபாஷர் நகரின் சாட்டிலைட் படங்களை ஆய்வு செய்தனர். அக்.27 முதல் 31-ம் தேதி வரையிலான நாட்களில் பதிவான சாட்டிலைட் படங்களை ஆய்வு செய்ததில் சுமார் 31 இடங்களில் உயிரிழந்த மக்களின் உடல்களில் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதை அல்-ஃபாஷர் நகரில்இருந்து தப்பிய மக்களும் சர்வதேச ஊடக நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர். ஆர்எஸ்எஃப் செயலுக்கு ஐ.நா உட்படபலர்கண்டனம் தெரிவித்துள்ளனர்.